# வைகறை வெளிச்சம்

விலை ரூ. 20/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume - 11 Issue - 11

நவம்பர் 2018 - ஸஃபர் - ரபியுல் அவ்வல் 1440



ஐந்து மாநிலத் தேர்தல்கள்

## காணாமல் ஆக்கப்படும் முஸ்லிம் வாக்குகள்

இரகசிய கேமராவில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்த

## ஸனாதன் ஸன்ஸ்தா தீவிரவாதிகள்



## இஸ்லாம் இந்து வித்தியாசம்

- பெரியார்

- ரோஹிங்கியா முஸ்லிம்களை திருப்பி அனுப்பும் மோடி அரசு
- பறிபோகும் கருத்துச் சுதந்திரம்! சிந்தனை சுதந்திரம்! தனித்திருக்கும் உரிமை!
- யூசுஃப் அல் கர்ளாவியின் மகள் - மருமகனை விடுதலை செய்ய ஐ.நா சபை உத்தரவு

தெற்கெல்லைப் போராட்டத்தில் முஸ்லிம்களின் பங்கு

بسم الله الرحمن الرحيم

இதிலிருந்து நீங்கள் இருவரும் சேகரமாக இங்கிருந்து வெளியேறி விடுங்கள். உங்க(ள் சந்ததிக)ளில் சிலருக்குச் சிலர் பகைவர்களாகவே யிருப்பார்கள்; அப்பொழுது நிச்சயமாக என்னிடமிருந்து உங்களுக்கு நேர்வழி வரும்; எவர் என்னுடைய நேர்வழியைப் பின் பற்றி நடக்கிறாரோ அவர் வழி தவறவும் மாட்டார், நற்பேரிழக்கவும் மாட்டார்.
“எவன் என்னுடைய உபதேசத்தைப் புறக்கணிக்கிறானோ, நிச்சயமாக அவனுக்கு நெருக்கடியான வாழ்க்கையே இருக்கும்; மேலும், நாம் அவனை கியாம நாளில் குருடனாவே எழுப்புவோம்” என்று கூறினான்.
(20:123,124)


ஐந்து மாநிலத் தேர்தல்களும், காணாமலாக்கப்படும் முஸ்லிம் வாக்காளர்களும்........04

இஸ்லாம் இந்து வித்தியாசம் - பெரியார்........14

ரோஹிங்கியா பச்சிளம் குழந்தைகளை பழிவாங்கும் மியான்மர் அரசு........16

ரோஹிங்கியா முஸ்லிம்களை திருப்பி அனுப்பும் மோடி அரசு........18

உலகப் பட்டினிக் குறியீடு, 103வது இடத்தில் இந்தியா.....20

எது முதலில்?........23

பறிபோகும் கருத்துச் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம், தனித்திருக்கும் உரிமை........26

தெற்கெல்லைப் போராட்டத்தில் முஸ்லிம்களின் பங்கு......29

கௌரி லங்கேசை கொலை செய்தது........35

இஸ்லாம் - அரசியல், அதிகாரம், அரபுலக எழுச்சி........36

சிலுவைப் போர் - 2.0........42

முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி........46

இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்?........50

முத்தலாக் - நீதிமன்றங்களில் குவியும் வழக்குகள்.......53

யூசுஃப் அல் கர்ளாவியின் மகளையும், மருமகனையும் விடுதலை செய்ய ஐ.நா. மனித உரிமை ஆணையம் உத்தரவு........54

ME TOO - பத்திரிக்கையாளர்களின் அவலங்கள்........57

இரகசிய கேமிராவில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்த சனாதன் சன்ஸ்தா தீவிரவாதிகள்........58

மகளிர் மன்றம்- இறைவனுக்கு அஞ்சி நடப்பதில் இலக்கணம் வகுத்தப் பெண்கள்........64



# வைகறை வெளிச்சம்

நவம்பர் 2018 ஸஃபர் - ரபிய்யுல் அவ்வல் 1440

ஆசிரியர்

மு.குலாம் முஹம்மது,M.A.,
Journalism & Communication

துணை ஆசிரியர்

கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only



http:/www.facebook.com/vaigaraivelicham

தனி இதழ்: ரூ.20.

ஆண்டுச் சந்தா


உள் நாடு: ரூ.240.

வெளி நாடு: ரூ.3000.

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.



VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com |
Web: www.darulislam.in




# ஐந்து மாநிலத் தேர்தல்களும் காணாமல் ஆக்கப்படும் முஸ்லிம் வாக்காளர்களும்

**கவர் ஸ்டோரி**

> “முஸ்லிம்களுக்கெதிராக மிகவும் திட்டமிட்ட மாச்சர்யம் இருக்க பலமான வாய்ப்பிருக்கின்றது. இதனால் சில தொகுதிகளிலுள்ள மொத்த முஸ்லிம்களும் வாக்காளர்கள் பட்டியலிலிருந்து விலக்கப்பட்டு இருக்கின்றார்கள். அல்லது ஒரு பகுதியில் உள்ள எல்லா முஸ்லிம் வாக்காளர்களும் விலக்கப்பட்டு இருக்கின்றார்கள்.”

**மு. குலாம் முஹம்மது.M.A.,**

எதிர் வரும் நவம்பர், டிசம்பர் (2018) மாதங்களில் ஐந்து மாநிலங்களுக்கு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் பாசிச பாரதீய ஜனதா கட்சி தனது வெற்றிக்காக அனைத்துத் தில்லு முல்லுகளையும் செய்து வைத்திருக்கின்றது. இந்த ஐந்து மாநிலங்கள் மத்திய பிரதேசம், இராஜஸ்தான், தெலுங்கானா, சத்திஸ்கர், மிசோரம் ஆகியன.

அதில் அது, **EVMS - Electronic Voting Machines** களில் தேவையான தில்லுமுல்லுகளை செய்த பின் மத்திய பிரதேசம், இராஜஸ்தான், சத்திஸ்கர் ஆகிய மாநிலங்களின் வாக்காளர் பட்டியலில் அதிகமாக இந்துத்துவ வாக்காளர்களை நிரப்பி உள்ளது. அத்தனையும் போலி வாக்காளர்கள் என்கிறது உச்ச நீதிமன்றத்தில் காங்கிரஸ் கட்சி தாக்கல் செய்துள்ள வாக்காளர் பட்டியல் ஒன்று.

போலி வாக்காளர் பட்டியல் விவகாரத்தில் காங்கிரஸ் கட்சியினால் பெரிதாக எதுவும் செய்திட இயலவில்லை. நிச்சயமாக போலி வாக்காளர்களை பட்டியலிலிருந்து நீக்கிட இயலவில்லை.

இனப்படுகொலை புகழ் மோடி, ஆயிரம் தலை வெட்டி அமித்ஷா ஆகியோரின் அடாவடித் தனங்களுக்கெதிராக, அனைத்து பலவீனங்களும் ஒன்றாய்க் கைவரப்பட்ட காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியால் எதுவும் செய்திட இயலவில்லை.

அஃதல்லாமல் ராகுல் காந்தியின் சிறுபிள்ளைத் தனம் நாட்கள் நகர நகர பெரிதாகவே வெட்ட வெளிச்சமாகி வருகின்றது. காங்கிரஸ் கட்சியால் முடிந்ததெல்லாம், உச்ச நீதிமன்றத்தில் வழக்கொன்றை

தொடருவது தான். அந்த வழக்கிலும் அசட்டையாகத்தானிருந்தது உச்ச நீதி மன்றம். தற்போது எப்படி இருக்கிறது என்பது ஊர் அறிந்த ஒன்று.

*08.10.2018* அன்று தேர்தல் ஆணையம், ஐந்து மாநிலங்களுக்குத் தேர்தல் தேதிகளை அறிவித்து விட்டது. இனி வாக்காளர் பட்டியலில் மாற்றங்களை கொண்டு வந்திட இயலாது. ஏனெனில் தேர்தல் அறிவிக்கப்பட்டு விட்டது எனக் கூறிடுவார்கள், ஆட்சிச் சக்கரத்தைச் சுழற்றுவோர்.

அதனால் உச்ச நீதிமன்றத்தில் வாக்காளர் பட்டியலிலிருக்கும் போலி வாக்காளர்களை நீக்க வேண்டும் என்று வைத்தக் கோரிக்கை நீர்த்துப் போய் விட்டது. உச்ச நீதிமன்றம் இந்த வழக்கின் தீர்ப்பை தள்ளிப் போட்டு விட்டது. உண்மையிலேயே விட்டுப் போன வாக்காளர்களின் பெயர்களை சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையும் இனி எடுபடாது.


இந்நிலையில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் வாதிட்ட மூத்த வழக்கறிஞர் கபில் சிபால் போலி வாக்காளர்கள் சேர்க்கப்படவும், உண்மையான வாக்காளர்கள் விடுபடவும் காரணமாக இருந்த தேர்தல் ஆனையத்தின் அதிகாரிகள் தண்டிக்கப்பட வேண்டும் என வாதாடினார்.

அரசின் தரப்பில் வாதாடிய வழக்கறிஞர் போலி வாக்காளர்களைச் சேர்க்கவும் உண்மையான வாக்காளர்களை விடவும் காரணமாக அமைந்த ஆணையத்தின் அதிகாரிகளைத் தண்டிக்கின்ற அதே நேரத்தில், வழக்கு காங்கிரஸுக்கு எதிராக திரும்புமேயானால் தவறான தகவல்களைத் தந்த காங்கிரஸ் கட்சியைத் தண்டிக்க வேண்டும் என வாதாடினார்.

விடுபட்ட அதேபோல் விலக்கப்பட்ட வாக்காளர்களில் பெரும் பகுதியினர் முஸ்லிம் வாக்காளர்களே என்பதை ஊரறியும். மத்தியப் பிரதேசத்தில் மட்டும் **24** லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளார்கள். போலியாக சேர்க்கப் பட்டுள்ள வாக்காளர்களில் பெரும் பகுதியினர் அண்டை மாநிலங்களிலுள்ள சங்க பரிவாரத்தினர் என்பதைச் சொல்லித் தெரிந்திட வேண்டிய தில்லை. மொத்தத்தில் வாக்களிக்கும் முறையும் பொய்த்துப் போன பின் ஜனநாயகத்தில் என்ன வாழுகிறது? என்று அதனை அப்பாவிகளும் அரசியல் கட்சிகளும் தூக்கிப்பிடிக்கின்றன. எல்லாமே சூன்யம். அதுதான் இந்த ஜனநாயகம்.

செய்தி ஆதாரம் : **TOI** : *09.10.2018*

# வாசகர் கடிதம்


20.9.18

ஐயா,

[illegible]



# தேர்தல் ஆணையமும் மத்தியப்பிரதேசத்தில் காணாமல் போன வாக்காளர்களும்

எதிர் வரும் நவம்பர் - டிசம்பர் மாதங்களில் (2018) தேர்தலை சந்திக்கும் மாநிலங்களில் ஒன்று மத்தியப் பிரதேசம். இங்கே "பாசிச பா.ஜ.க." ஆட்சி நடைபெற்று வருகின்றது. இந்த மாநிலத்தில் எதிர் வரும் தேர்தலில் பாசிச பா.ஜ.க. வெற்றி பெறும் வாய்ப்பு அறவே இல்லை.

இந்த உண்மையை பாசிச பா.ஜ.க. தான் எடுத்தப் பல்வேறு ரகசிய கணக்கெடுப்புகள் வழியாகவும் தெரிந்து கொண்டது. தோல்வியை தவிர்த்திடவும் மீண்டும் ஆட்சியில் அமர்ந்திடவும் பல உத்திகளை நீண்ட நாட்களுக்கு முன்னரே கையாண்டது.

அதில் ஒன்று, ஜனவரி 2018, இந்த வருடத்தின் தொடக்கத்தில் வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலிலிருந்து 24 லட்சம் வாக்காளர்களை நீக்கி இருந்தது. 24 லட்சம் உண்மையான வாக்காளர்கள் நீக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதை எதிர் கட்சியான காங்கிரஸ் கண்டுபிடிப்பதற்கும், சரியாக கணக்கிடுவதற்கும் ஆறு மாதங்கள் ஆகின. தொடர்ந்து தேர்தல் ஆணையத்திற்கு இந்தத் தகவலை சொல்லிக் கொண்டே இருந்தார்கள். எந்த நடவடிக்கையுமில்லை.

வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு ஆறு மாதங்கள் கழித்து அதாவது ஜூன் 03ஆம் நாள் மத்தியப் பிரதேசத்தின் காங்கிரஸ் கட்சி தலைவர் கமல்நாத், தேர்தல் ஆணையரை நேரில் சந்தித்தார். சந்தித்து, தொடர்ந்து தான் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பிய கோரிக்கைகளையும், மனுக்களையும் மேற்கோள் காட்டி, பிரிதோர் உறுதிப் பிரமாணம் அடங்கிய மனு ஒன்றை சமர்ப்பித்தார். அந்த மனுவில் 24 லட்சம் உண்மையான வாக்காளர்கள் நீக்கப்பட்டதையும் குறிப்பிட்டிருந்தார்.

**தேர்தல் ஆணையர்**

மாநில தேர்தல் ஆணையர் 24 லட்சம் வாக்காளர்கள், வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்கள் என்ற உண்மையை ஒத்துக் கொண்டார். அதே போல் காங்கிரஸ் கட்சியிலிருந்து பல மனுக்கள் வந்தது என்ற உண்மையையும் ஒத்துக் கொண்டார். ஆதலால் தன்னால் எதுவும் செய்ய முடியாது எனக் கூறிவிட்டார்.

இதனால் ஆத்திரமடைந்த காங்கிரஸ் கட்சித் தலைவர் கமல்நாத் உச்ச நீதிமன்றம் சென்றார். உச்ச நீதிமன்றமும் உடனேயே தீர்ப்பளிக்க மறுத்து விட்டது. எல்லா வாதங்களையும் கேட்டபின் தீர்ப்பைத் தள்ளி வைத்து விட்டது. இனி தீர்ப்பளித்தும் எந்த பலனுமில்லை என்றாகி விட்டது.

இப்படி உச்ச நீதிமன்றம், தேர்தல் ஆணையம் எல்லாம் ஒன்றாய்க் கூடி மத்தியப்



பிரதேச மாநிலத்தில் 24 லட்சம் வாக்காளர்களின் வாக்குரிமையைப் பறித்துக் கொண்டன.

முஸ்லிம் வாக்காளர்களை, வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்குவது, தனக்கு வேண்டியவர்களைப் போலி வாக்காளர் அட்டை, போலி வாக்காளர் பட்டியல் இவற்றின் மூலம் இணைப்பது, **EVMS** என்ற வாக்களிக்கும் இயந்திரத்தில் எந்தப் பொத்தானை அழுத்தினாலும் தங்களுக்கே வாக்கு என்ற ஏற்பாடுகளைச் செய்த பின் நாங்களே எல்லாம்! நாங்களே வெல்வோம்! என பாசிச பா.ஜ.க. அறிவித்துள்ளது.

**பாசிச பா.ஜ.க. வுக்கு தேர்தல் ஆணையத்தின் பிரிதொரு உதவி**

தேர்தல் தேதிகளை அறிவிக்கப் போகின்றோம், என்ற செய்தியை மத்தியப் பிரதேசத்தைச் சார்ந்த பா.ஜ.க. கட்சிக்கு தேர்தல் ஆணையம் முன் கூட்டியே சொல்லிவிட்டது.

பா.ஜ.க. அரசு அதனை மூன்று மணி நேரங்கள் காலதாமதப்படுத்தச் சொன்னது. இந்த மூன்று மணி நேரத்தில் மத்திய அரசு 3,000 கோடி ரூபாய்க்கான நலத் திட்டங்களை அறிவித்தது. இதில் அகண்ட சாலைகளை அமைப்பதும் உண்டு. சாலைகளைப் பற்றிய அறிவுப்புகளை தேசிய நெடுஞ்சாலைத் துறை அறிவித்தது. இதன் பின்னரே அக்டோபர் முதல் "சனி"யில் தேர்தல் அறிவிப்புகள் வெளிவந்தன.

இப்படியொரு பெரும் சேவையை தேர்தல் ஆணையம் குஜராத்திலும் செய்தது. இப்படி தேர்தல் ஆணையம் அனைத்து வகையிலும், பாசிச பா.ஜ.க. வுக்கு செஞ்சோற்றுக் கடனாற்றி வருகிறது.

*செய்தி ஆதாரம்: **TOI**: 09.10.2018*

***-MGM***

"அபூசாலிஹ் ஷரிஃப் அவர்கள் பிரிதொரு பத்திரிகையாளர்கள் சந்திப்பில் இப்படிக் குறிப்பிட்டார்கள்;

***The Deletion of legitimate voters from the lists would mostly affect the under precipitated sections including dalits and minorities and deprive them basic citizenship rights***

*- Hindustan Times | New Indian Express | 17 sep 2018*

*அதாவது;*

**வாக்காளர்கள் பட்டியலிலிருந்து உண்மையான வாக்காளர்களை நீக்குவது பிற்படுத்தப்பட்ட புறக்கணிக்கப்பட்ட மக்களின் – தலித்களின் சிறுபான்மையினர் இவர்களின் அடிப்படை குடியுரிமைகளைப் பறித்து விடும்.**"



# இராஜஸ்தான் மாநிலத்தில் காணாமலாக்கப்பட்ட வாக்குகள்

எதிர்வரும் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் இராஜஸ்தான் மாநிலத்திற்கும் வாக்கெடுப்பு வருகின்றது. இந்த மாநிலத்தில் பாரதீய ஜனதா கட்சி எப்படியேனும் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என வெறிபிடித்தாடுகின்றது.

இங்கேயும் முஸ்லிம் வாக்காளர்களை காணாமலாக்கும் முயற்சிகள் அதி வேகத்தில் நடத்தப்பட்டு விட்டது. இந்த மாநிலத்தில் மொத்தம் 5.75 கோடி வாக்காளர்கள், 200 தொகுதிகள். இதில் 81.72 லட்சம் வாக்காளர்கள் காணாமலாக்கப்பட்டிருக்கிறார்கள். 6.52 லட்சம் போலி வாக்காளர்கள், இணைக்கப் பட்டுள்ளார்கள்.

### தலித் வாக்குகள்

ஏனைய மாநிலங்களைப் போல் அல்லாமல், இராஜஸ்தான் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் தலித்களின் வாக்குகளும் காணாமலாக்கப்படுகின்றன. காரணம், ஆண்டாண்டு காலமாக இருந்து வந்த ஜாதிக் கொடுமைகள், மோடி ஆட்சியில் அமர்ந்ததும் விஸ்வரூபம் எடுத்தது. தலித் மக்கள் அதிகமாக பாதிக்கப்பட்டதோடு கொலையும் செய்யப்பட்டார்கள்.

அதற்கெதிராக வரலாறு காணாத எண்ணிக்கையில் தலித் மக்கள் அணி திரண்டதும் மோடியின் ஆட்சியில் தான். தலித் மக்களின் போராட்டத்தில் முக்கிய பங்காற்றியது, இந்த இரண்டு மாநிலங்கள் தாம். அதாவது இராஜஸ்தான் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் தாம்.

ஆக, இந்த இரண்டு மாநிலங்களிலும் தலித்களின் வாக்குகளும் தங்களுக்கு கிடைக்காது என்பதை பாசிச பா.ஜ.க. தெரிந்து கொண்டது. அதனால் தலித்களின் வாக்குரிமைகளையும் இல்லாமலாக்குவது என முடிவு செய்துள்ளது.

தலித்களின் வாக்குகளும் காணாமலாக்கப் பட்டிருக்கின்றது என்பதால் இப்போது காணாமலாக்கப்பட்டிருக்கும் வாக்காளர் களுக்கான போராட்டத்தில் தலித் மக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு வருகின்றார்கள்.

குறிப்பாக குஜராத் மாநிலத்தின் சட்டமன்ற உறுப்பினர் ஜிக்னேஷ் மிவானி அவர்களும் இதில் கலந்து கொண்டு வருகின்றார்கள்.

### அபூசாலிஹ் ஷரிஃப் / தாவூத் மியாத்கான்

இவர்கள் தாம் முதன் முதலில், "முஸ்லிம்கள் வாக்குரிமையையும் பின்னர் குடியுரிமையையும் மொத்தமாக இழக்கவிருக்கின்றார்கள்" என்பதைக் கண்டெடுத்தவர்கள். இதில் அபூசாலிஹ் ஷரிஃப் அவர்கள் முதல் முயற்சியை எடுத்தார்கள். தாவூத் மியாத் கான் அவர்கள் அதற்கு நடைமுறை செயல் வடிவத்தைத் தந்தார்கள். தொடக்கத்தில் கன்னட மாநிலத்தில் காணாமற் போன வாக்காளர்கள் எனத்

தொடங்கியது முயற்சி. பின்னர் தான் தெரிய வந்தது நாடெங்கும் பல்வேறு கீழறுப்பு வேலைகள் நடந்திருக்கின்றன என்பதும், இவை அனைத்தும் முஸ்லிம்களின் எண்ணிக்கைப் பலத்தைப் பறித்து அவர்களை ஒட்டு மொத்தமாகப் பலவீனப்படுத்தவும், அவர்களைப் பூண்டோடு ஒழிப்பதற்கான முயற்சிகள் என்று அபூசாலிஹ் அவர்களின் அழுத்தமான ஆய்வுகளின் வழி முஸ்லிம்களுக்கு நடந்துள்ள பல இதர அநீதிகளையும் கண்டெடுத்தார்கள்.

அவற்றுள் ஒன்று தொகுதிகளை மறு சீராய்வுக்கு உட்படுத்துதல், என்ற போர்வையில் நடந்தவை. இதனை ஆங்கிலத்தில் ***DELIMITATION –*** டெலிமிட்டேஷன் என்கிறார்கள்.

> அபூசாலிஹ் ஷரிஃப், தாவூத் மியா கான் இவர்களுடன் இப்போது துணை நிற்பவர்கள்.
>
> மனித உரிமை கழகத்தின் – ***PUCL PEOPLE UNION FOR CIVIL LIBERTIES*** பொது செயலாளர் திருமதி கவிதா சிரிவஸ்தவா. மெக்சேசே விருது பெற்ற அருணா ராய், ஜிக்னேஷ் மிவானி ஆகியோராவார்.

**DELIMITATION – தொகுதிகள் மறு சீராய்வு**

முஸ்லிம்கள் அடர்த்தியாக வாழ்ந்திடும் பகுதிகளை பல்வேறு தொகுதிகளுக்கும் பிரித்துச் சேர்த்து விடுவது. சேர்க்கப்படும் அந்தத் தொகுதியில் முஸ்லிம்களின் வாக்குகள் மிகவும் குறைவாக போய் விடும். அதனால் அவர்கள் தங்கள் வாக்குகளால் எதையும் சாதிக்க முடியாதவர்களாகி விடுகின்றார்கள். வேட்பாளர்களும் அவர்களைப் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை.

முஸ்லிம்கள் அந்தத் தொகுதியில் ஒரு வேட்பாளரை நிறுத்தினால் அவர் வெல்ல முடியாதவராகி விடுகின்றார். ஆனால் தொகுதிகள் மறு சீராய்வு என்ற போர்வையில் அவர்களின் வாக்குகள் சின்னா பின்னமாகப் பிரிக்கப்படாமல் இருந்திருந்தால் அவர்களால் பல வேட்பாளர்களை வெற்றி பெற செய்திட இயலும்.

இதையும் விஞ்சி எங்கேயாவது அவர்கள், முஸ்லிம்கள் நிச்சயமாக வெற்றி பெற்று விடுவார்கள் என்ற நிலை வந்தால் அவர்களின் வாக்குகளைச் சின்னாபின்னப்படுத்த முடியவில்லை. அங்கெல்லாம் அந்தத் தொகுதிகள் தலித்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதியாக ஆக்கப்பட்டு விடும். இப்படி அவர்களின் பிரதிநிதித்துவம் தகர்க்கப் படுகின்றது. இல்லாமலாக்கப்படுகின்றது.

இதையும் விஞ்சி வரும் தொகுதிகளில், அதாவது முஸ்லிம்கள் அதிகமாக இருக்கும் தொகுதிகளில் புதிது, புதிதாக முளைக்கும் முஸ்லிம் அரசியல் கட்சிகள் வாக்கைப் பிரித்து விடுகின்றன. 2017 குஜராத் தேர்தலின் போது இது தான் நடந்தது. இதனை வைகறை வெளிச்சத்தில் விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளோம். அதேபோல் 2018 கர்னாடகா தேர்தலின் போதும் முஸ்லிம்கள் இரண்டு தொகுதிகளில் வெற்றி வாய்ப்பை இழந்தார்கள். காரணம் இந்தப் புதிய கட்சிகள் முஸ்லிம்களின் வாக்குகளைப் பிரித்து விட்டன.

இவற்றால் முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம் இருண்டதாக ஆகிவிட்டது. இதனை அன்றைய முஸ்லிம்களின் தலைவர் முஹம்மத் அலீ ஜின்னா அவர்கள் மிகவும் விளக்கமாகச் சொன்னார்கள். அதனை நாம் வைகறை வெளிச்சத்தில் அவ்வப்போது விளக்கி வருகின்றோம். மிகச் சிலரைத் தவிர செவிமடுப்பாரில்லை.

**நாம் கவனம் செலுத்துவதற்கான காரணம்**

அடுத்து நாமும் - வைகறை வெளிச்சமும் அபூசாலிஹ் ஷரிஃப் அவர்களும் இப்போது இந்தப் பிரச்சனையில் அதிகக் கவனம் செலுத்துவதற்கான காரணம், ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து மனிதனைக் கடித்தாற் போல்





இப்போதைய சதி, முஸ்லிம்களின் குடியுரிமைக்கே ஆபத்து என்ற அளவில் வளர்ந்துள்ளது.

இன்று வாக்காளர்கள் பட்டியலிலிருந்து பெயரை நீக்குவார்கள். பின்னர் அதை, அதாவது வாக்காளர் பட்டியலையே தேசிய குடிமக்கள் பதிவேடு - ***NRC - National Register of Citizens*** என்பார்கள். இதன் வழி முஸ்லிம்களை அதன் சொந்த நாட்டிலேயே அந்நியர்களாக்கி விடுவார்கள். இதனால் தான் இதில் அக்கறைக் காட்டுகிறோம். விழிப்புணர்வுகளை ஏற்படுத்துகிறோம்.

**புதிய முயற்சி**

அபூசாலிஹ் ஷரிஃப் அவர்கள் இப்போது இதை முஸ்லிம்கள் எதிர் நோக்கும் ஒரு பிரச்சனை என்ற நிலையிலிருந்து கடந்து வட மாநிலங்களில் தலித்களும் எதிர் நோக்கும் ஒரு பிரச்சினை என்பதை கண்டு பிடித்து தலித் சமூக ஆர்வலர்களையும் இதில் இணைத்துள்ளார்கள். அவர்கள் காணாமலாக்கப்பட்ட தலித்களின் வாக்குகளை மீட்கும் பணியில் தங்களை இணைத்துள்ளார்கள்.

அதேபோல் மனித உரிமையில் நம்பிக்கைக் கொண்டவர்களையும் இணைத்துள்ளார்கள். இதில் ***PUCL: Peoples Union for Civil Liberties*** - மக்கள் சிவில் உரிமைக் கழகத்தையும் உடன் இணைத்துள்ளார்கள்.

ஆகவே இஃதோர் பொதுப் பிரச்சனையாகவும், நாடு தழுவியப் பிரச்சனையாகவும் ஆக்கப்பட்டு வருகின்றது.

**இராஜஸ்தான் தேர்தல் ஆணையம்**

ஏனைய மாநிலங்களிலுள்ள தேர்தல் ஆணையத்தைப் போல் அல்லாமல் இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள தேர்தல் ஆணையம் சற்றே வித்தியாசமாகச் செயல்பட்டது எனலாம்.

ஏனெனில் அங்கு இராஜஸ்தானின் மாநில தேர்தல் ஆணையராக இருந்த அஷ்வினி பகவத் - ***ASHWINI BAGAWATH*** ஒரு ஆர்.எஸ்.எஸ். காரரைப் போல செயல்பட்டார். ஆர்.எஸ்.எஸ். காரர்கள் இலட்சக் கணக்கில் தயாரித்து விநியோகித்த வாக்காளர்களை அவர் கண்டு கொள்ளவேயில்லை.

அதே போல் முஸ்லிம் வாக்காளர்களைக் குறி வைத்து வாக்காளர்கள் பட்டியலிலிருந்து நீக்குகிறார்கள் என்ற புகார்களையும் கண்டு கொள்ளவில்லை. இன்னும் சொன்னால் அதற்குத் துணை போனார் அவர். இதனால் அவரை இந்தப் பதவியிலிருந்து நீக்கிட வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. அவர் நீக்கப்பட்டார்.

புதியதாக நியமிக்கப்பட்ட தேர்தல் ஆணையர் ***O.P.*** ராவத் - ***O.P. RAWATH*** இந்தப் புகார்களைக் கண்டு கொண்டார். நடவடிக்கை எடுப்பதாக வாக்களித்தார். அத்துடன் நான் ஒரு வாக்காளர் பட்டியலை ஒவ்வொரு வாக்குப்




பதிவு மண்டலத்திலும், தொங்க விடுவேன். அத்துடன் ஃபாம் - 6 படிவத்தையும் அங்கே வைத்து விடுவேன். பட்டியலிலிருந்து விடுபட்டவர்கள், படிவம் ஆறை பூர்த்தி செய்து தந்து அங்கேயே பெயரை இணைத்துக் கொள்ளலாம்.

தேர்தல் அறிவிப்பதற்கு மூன்று வாரங்களுக்குள் இதையெல்லாம் செய்து முடிக்கலாம் என்றார்.

ஆனால் அதற்குள் தேர்தல் தேதிகள் திடுதிப்பென அறிவிக்கப்பட்டு விட்டன. அதனால் இந்தப் பணிகள் முழுமையடைய வில்லை. தேர்தல் தேதிகளை அறிவிக்கச் செய்ததில் மத்திய அரசின் சதி தெளிவாகவே தெரிகின்றது.

ஆக, அங்கொன்றும், இங்கொன்றுமாக நேர்மையான தேர்தல் ஆணையர்கள் இருந்தாலும், அவர்கள் அநீதியைக் களைய முற்பட்டாலும் மத்தியரசு அதனை கவிழ்த்து விடுகின்றது. காரணம் இன்றைக்கு மத்தியில் ஆள்பவர்கள் முஸ்லிம்கள் இந்தியாவின் பிரஜைகள் இல்லை என்றாக்கிட துடிக்கின்றார்கள்.

நமது அண்டை மாநிலம் கர்நாடகாவில் இது போல் வாக்காளர்கள் - முஸ்லிம் வாக்காளர்கள் பெருமளவில், வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு விட்டார்கள். அதன் பின் அபூசாலிஹ் ஷரிஃப் மற்றும் தாவூத் மியா கான், அங்குள்ள ஜமாத்தார்கள், சமுதாய ஆர்வலர்கள் இவர்கள் ஓர் இமாலய முயற்சியை மேற்கொண்டார்கள். அதில் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டு விட்டாலும் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்கள் மனுவை தேர்தல் அலுவலகரிடம் தாக்கல் செய்யத் தரப்படும் காலம் வரை, விடுபட்ட வாக்காளர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள், என அறிவிக்கப்பட்டது. இதே நிலை வட மாநிலங்களிலும் தொடரும் என எதிர்பார்க்கபடுகின்றது. அது நடக்குமா? என்பது கேள்விக்குரியே. இன்ஷா அல்லாஹ்!

### அபூசாலிஹ் ஷரிஃப் – தாவூத் மியா கான் – வைகறை வெளிச்சம் – ஜமாத்துல் உலாமா ஆகியோரின் வெற்றி

மெல்ல, மெல்ல ஆனால் உறுதியான உருக்குலையாத முயற்சிகளின் மூலம் காணாமற் போகும் வாக்காளர்கள் விவகாரத்தை நாட்டின் ஒரு பெரும் பிரச்சனை என்றாக்கி விட்டார்கள்.

இப்போது இந்த அழுத்தம் ஊடகங்களுக்கும் ஏற்பட்டிருக்கின்றது. ஊடகங்கள் படிப்படியாக இதில் கவனம் செலுத்தி வருகின்றது.

தேர்தல் வந்தாலே வாக்காளர் பட்டியலிலிருந்து காணாமற் போன வாக்காளரைப் பற்றிய பேச்சே முதலில் வரும் என்ற நிலை விரைவில் வரும்.

இன்ஷா அல்லாஹ்! இதில் இத்தோடு நின்று விடாமல் வாக்காளர்கள் பட்டியலில் தங்கள் பெயர் இடம் பெற்றிருக்கின்றதா என்பதை எல்லோரும் உறுதிச் செய்து கொள்ள வேண்டும்.

### குடியுரிமையைப் பறிப்பதே நோக்கம்

வாக்காளர் பட்டியலிலிருந்து பெயர்களை நீக்குவதன் உண்மையான நோக்கம் முஸ்லிம்களின் குடியுரிமையைப் பறிப்பதே ஆகும்.

வாக்காளர்கள் பட்டியலிலிருந்து பெயர்களை அகற்றுவது ஏதோ, யதார்த்தமாக நடக்கின்றது என்றே தொடக்கத்தில் அபூசாலிஹ் ஷரிஃப் அவர்களும் கருதினார்கள். போகப் போகத்தான் பின்னாலிருந்த பெரிய சதிகளை புரிந்து கொண்டார்கள்.

புரிந்து கொண்ட நிலையிலும் அதனை வெளிப்படையாகப் பேசிடவில்லை. பொதுவான காரணங்களையே சொல்லி வந்தார்கள். இப்போது முழு சதியையும் எல்லோருமே அதனை ஏற்றுக் கொள்கின்றார்கள். இதில் அசாமில் காணாமல் ஆக்கப்பட்ட 40,000 வாக்காளர்கள் இறுதியில் குடியுரிமையை இழந்தார்கள்.

### பத்திரிகையாளர்கள் சந்திப்பு

அபூசாலிஹ் ஷரிஃப் அவர்கள் அண்மையில் நடத்திய பத்திரிகையாளர்கள் சந்திப்பில் இப்படிக் குறிப்பிட்டுள்ளார்கள்;

"There is a strong possibility of a supreme bias against Muslims which at then when leads to the exclusion of the entire Community or locality from a constituency" - (Front Line : 26.10.2018)

அதாவது:

"முஸ்லிம்களுக்கெதிராக மிகவும் திட்டமிட்ட மாச்சர்யம் இருக்க பலமான வாய்ப்பிருக்கின்றது. இதனால் சில தொகுதிகளிலுள்ள மொத்த முஸ்லிம்களும் வாக்காளர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு இருக்கின்றார்கள். அல்லது ஒரு பகுதியில் உள்ள எல்லா முஸ்லிம் வாக்காளர்களும் நீக்கப்பட்டு இருக்கின்றார்கள்."

பத்திரிகையாளர்கள் சந்திப்பில் நாம் மேலே குறிப்பிடாத இன்னொரு பயங்கரத்தை அபூசாலிஹ் ஷரிஃப் அவர்கள், குறிப்பிடுகின்றார்கள்.

குண்டு கட்டாக முஸ்லிம்கள் குடியுரிமையை இழப்பார்கள் என்பது அதிலிருந்து தெரிகின்றது. ஏனெனில் சில பகுதிகளில் வாழும் அத்தனை வாக்காளர்களும் விடுபட்டு விட்டார்கள்.

மேலும் பத்திரிகையாளர்களுக்குப் பதில் அளிக்கையில் அபூசாலிஹ் ஷரிஃப் அவர்கள் இப்படிப் பதில் சொன்னார்கள்:

"நாம் இப்போது தான் இந்தப் பிரச்சனையில் விழித்துக் கொண்டோம். இஃது திட்டமிட்டு பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே தொடங்கப்பட்டுள்ளது. ஆனால் இப்போது அதிக வேகத்தோடும் வெறியோடும் செய்யப் படுகின்றது." - ***Front Line: 16.10.2018***

பிரிதொரு கேள்விக்குப் பதில் அளித்திடும் போது அவர் குறிப்பிட்டார்.

"The Reality is that the political process is managed in such a way that Muslims are excluded"

அதாவது:

"இன்றைய அரசியல் முறைமைகளின் எதார்த்தம் எப்படி அமைக்கப்பட்டுள்ளது என்றால் முஸ்லிம்கள் அதிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டு விட்டார்கள்."

மொத்தத்தில் பூண்டோடு ஒழிக்கும் திட்டம் ஒன்று வேகமாகவும் திட்டமிட்டும் நடந்து வருகின்றது. இதில் நீதிமன்றங்கள், நிர்வாகத்துறை, சட்டமன்றங்கள் எல்லாம் கை கோர்த்துக் கொண்டுள்ளன.

இதிலிருந்து மீளுவோம். பாசிசத்தை மாய்ப்போம். பாரதத்தைக் காப்போம்!

**- MGM**



**அரசின் தொடர்ச்சியான கைதுகளுக்குப் பின் வெளிவந்த தோழர் திருமுருகன் காந்தி அவர்களை நேரில் செந்தித்து நலம் விசாரித்து வந்தோம்.**

# முஸ்லிம்

# வாக்காளர்கள் நீக்கம்

## பிரச்சாரமும் வெற்றியும்

தமிழகத்தில் உள்ள முஸ்லிம் வாக்காளர்கள் 12 இலட்சம் பேர் அவர்கள் அறியாமலேயே நீக்கப்பட்டது குறித்து பல்வேறு கட்டுரைகளை வைகறை வெளிச்சத்தில் கடந்த பல மாதங்களாக தொடர்ந்து வெளியிட்டு வருகிறோம். பல்வேறு பிரச்சாரங்களையும் செய்து வருகிறோம். ஜமாஅத்துல் உலமா சபையும் இதில் முக்கிய பங்காற்றி வருகிறது.

இந்நிலையில் இந்த பிரச்சாரத்திற்கு முதற்கட்ட வெற்றி கிடைத்துள்ளதை அறிகிறோம்.

சமீபத்தில் புதிய வாக்காளர்களை சேர்க்கும் சிறப்பு முகாம்கள் தமிழகமெங்கும் நடத்தப்பட்டன. இந்த முகாம்களில் பூத் லெவல் ஆஃபிசர்கள் எனப்படும் **(BLO)** வாக்குசாவடி மைய அளவிலான அதிகாரிகள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் நடத்தப்பட்டு புதிய வாக்காளர்களை அடையாளம் காணும் பணி வழங்கப்பட்டது.

ஒவ்வொரு வாக்குசாவடி மையத்திற்கும் ஒரு பூத் லெவல் ஆஃபிசர் நியமிக்கப்பட்டார். அவர் பட்டியலை சரிபார்ப்பது, புதிய வாக்காளர் படிவங்களை (படிவம் 6) பெறுவது, அதை ஆய்வு செய்து சரி, தவறு என அறிக்கை அளிப்பது, அந்த வாக்குசாவடி மையத்திற்கு உட்பட்ட வாக்காளர் எவரும் படிவம் 7 (நீக்கல் படிவம்) தந்திருந்தால் அதன் உண்மை தன்மையை ஆய்வு செய்து அறிக்கை அளிப்பது போன்ற பணிகளை செய்ய வேண்டும்.

இப்படிப்பட்ட பூத் லெவல் ஆபிசர்களை மேற்பார்வையிட மேற்பார்வையாளர் (Supervisor) ஒருவர் நியமிக்கப்பட்டார். அவருக்கு மேலே உதவி தேர்தல் பதிவு அதிகாரி (Asst. Electoral Registration Officer), அவருக்கு மேல் தேர்தல் பதிவு அதிகாரி (Electoral Registration Officer) என உள்ளனர்.

இந்த அனைவரையும் அவர்களின் பணியை மேற்பார்வையிட அல்லது கண்காணிக்க சிறப்பு தேர்தல் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் இந்திய ஆட்சிப்பணியாளர் (ஐ.ஏ.எஸ்). டெல்லியை சேர்ந்தவர். அப்படி சென்னைக்கு நியமிக்கப்பட்ட அந்த அதிகாரி பல்வேறு வாக்குசாவடி மையங்களுக்கு சென்று ஆய்வுகளை மேற்கொண்டார். அந்த மையங்களுக்கு சென்ற போதெல்லாம் அங்கிருந்தவர்களிடம் அவர் கேட்ட கேள்வி வாக்காளர்களை நீக்கல் செய்வதில் கடைபிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் என்னென்ன? எப்பொழுதும் போல அவரவர் அவரவருக்கு தெரிந்த பதில்களை சொல்ல சொல்ல அவர் அவர்களை கடுமையாக கடிந்து கொண்டுள்ளார். மூன்றாவதாக நடந்த முகாமில் ஒரு தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் ஒரு வாக்காளரை, வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்க என்ன நடைமுறைகளை கையாள வேண்டும் என்று கேட்டுள்ளார்.

அவர் திருதிருவென்று முழிக்க, அப்படியானால் இந்த விவரம் கூட தெரியாமல் தான் நீங்கள் வாக்காளர் பட்டியலை தயாரிக்கிறீர்களா? உங்கள் இஷ்டத்திற்கு வாக்காளர் பட்டியலில் இருந்து வாக்காளர் பெயரை நீக்கம் செய்து விடுவீர்களா? என்று கூறி கடுமையாக திட்டியுள்ளார்.

ஒரு வாக்காளர் பெயரை நீக்க ஒன்று அவர் இறந்திருக்க வேண்டும், அல்லது அவர் வேறு தொகுதிக்கு மாறி சென்றிருக்க வேண்டும் அல்லது அவர் பெயர் அதே பட்டியலில் இரண்டு தடவையோ அல்லது இரண்டு தொகுதிகளிலோ பதிவாகி இருக்க வேண்டும்.

இந்த நிகழ்வுகளில் அவர் பெயரை நீக்கம் செய்வதற்கு முன் அதற்கான அறிவிப்பினை பூத் லெவல் ஆபிசர், மேற்பார்வையாளர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர் ஆகியோரின் ஒப்பம் பெற்று சம்பந்தப்பட்ட வாக்காளரின் வீட்டு வாசலில் ஒட்டி மறுப்பு ஏதும் வருகிறதா என்று காத்திருக்க வேண்டும்.

அப்படி மறுப்பு பெறப்படும் பட்சத்தில் அதை ஆய்வு செய்து அது உண்மை எனில் அவர் பெயரை நீக்கக்கூடாது. இல்லையெனில் நீக்கலாம். இது தான் நடைமுறை.

இந்த தகவல் அனைத்தையும் அந்த தேர்தல் நடத்தும் அதிகாரிக்கு டெல்லியில் இருந்து வந்திருந்த அதிகாரி கூறி திட்டி தீர்த்து விட்டார்.

இதன் பின்னர் அந்த தேர்தல் அதிகாரி இதற்காகவே பரீட்சைக்கு படிப்பது போல படித்து அனைவருக்கும் சிறப்பு பயிற்சி முகாமை நடத்தி இந்த விஷயங்களை அறிவுறுத்தினார். அதன் பின்னரே நான்காவது வாக்காளர் சேர்ப்பு முகாம் நடைபெற்றது.

மக்கள் மன்றத்தில் நாம் செய்து வரும் பணிக்கு கிடைத்த முதற்கட்ட வெற்றியாக இதனை எடுத்துக் கொள்ளலாம். இனி வருங்காலங்களில் வாக்காளர் பட்டியலில் இருந்து பெயரை நீக்குமுன்னர் அனைத்து நடைமுறைகளையும் தமிழகத்தில் அதிகாரிகள் கடைபிடிப்பார்கள் என்று நம்புகிறோம்.

**- ந.நி**

பெரியார்
02–08–1931
குடிஅரசிலிருந்து.

# இஸ்லாம் இந்து வித்தியாசம்

நான் இந்து மதத்தைப்பற்றியோ, இஸ்லாம் மதத்தைப் பற்றியோ பேசுவது என்பதில் இரண்டு மதத்தினுடையவும் ஆதாரங்களை ஆராய்ச்சி செய்து பேசுவதாக யாரும் கருதி விடாதீர்கள். அந்த வேலையை ஒரு பரீட்சை மாணவனுக்குக் கொடுத்து விடுங்கள் அதில் என்ன இருக்கின்றது என்பதில் எனக்குக் கவலையில்லை.

ஆனால், நான் பேசுவது என்பது இரண்டு மதத்தைச் சேர்ந்ததாகச் சொல்லிக் கொள்ளும் பெரும் பான்மையான மக்களிடையே இருந்து வரும் பிரத்தியட்சக் கொள்கைகள் சம்பந்தமானக் காரியங்களையும் அதனால் அவரவர்கள் பிரத்தியட்சத்தில் அடைந்து வரும் பலன் களையும் பற்றித் தான் பேசுகிறேன்.

பொதுவாகவே மதத்தின் தன்மையை இதிலிருந்துதான் நிர்ணயிக்க வேண்டுமேயொழிய ஏட்டில் என்ன இருக்கின்றது என்று பார்ப்பதில் பயனில்லை. அது போலவே அந்தந்த மதக்காரர்கள் போட்டுக்கொள்ளும் வேஷமே தான் மதம் என்றாலும் அதிலும் பயனில்லை. அந்தந்த மதங்களில் மக்கள் எப்படி நடந்து கொள்ளுகிறார்கள்? மக்கள் எப்படி நடத்தப்படுகின்றார்கள். அதனால் அந்த சமுகம் என்ன பலனடைந்திருக்கின்றது? என்பது போன்றவைகள் தான் மதத்தின் மேன்மையை அளக்கும் கருவியாகும். அப்படிப் பார்ப்போமே யானால் அநேக விஷயங்களில் இந்து மதத்தை விட (கொள்கைகளை விட) இஸ்லாம் மதமே (கொள்கைகளே) மேன்மையானதென்பதை ஒப்புக்கொள்ள தான் வேண்டும். இஸ்லாம் மாணவர்களிடத்தில் இந்துக்களிடம் இல்லாத பல நல்ல கொள்கைகள் இருக்கின்றன. அதனால் இந்து மதத்தில் இல்லாதமேன்மை இஸ்லாம் மதத்தில் இருப்பதாகத்தான் கருதவேண்டும்.



அதாவது இஸ்லாம் மக்களிடத்தில் தங்களுக்குள் சமத்துவம், சகோதரத்துவம் ஒற்றுமை அன்பு முதலிய குணங்கள் இருக்கின்றன. வீரம் இருக்கின்றது. வீரம் என்றால் இலட்சியத்திற்கு உயிரை விட துணிவது என்பதுதான். இஸ்லாம் மதத்தில் ஜாதி உயர்வு தாழ்வு இல்லை. அவர்களுக்குள் தீண்டாதவன் இல்லை. கிட்ட இருந்து சாப்பிடக் கூடாதவன் இல்லை. அவர்களது தெருவில் நடக்கக் கூடாத, மனிதன் குளத்தில் இறங்கக் கூடாத மனிதன், கோவிலுக்குள் புகக் கூடாத மனிதன் இல்லை. இதை யோக்கியமான இந்துக்கள் ஒப்புக் கொண்டு தான் ஆகவேண்டும். இஸ்லாம் மார்க்கக் கடவுளுக்கு ரூபம் கற்பித்து வணங்குவதில்லை. அதற்குப் பெண்டு, பிள்ளை வைப்பாட்டி கற்பிப்பதுமில்லை. அதற்குப் பூஜை, நைவேத்தியம்,

உற்சவம், நகை, துணிமணி, முதலியவற்றிற்குக் கோடிக் கணக்கான பணங்களைச் செலவு செய்வதில்லை மற்றும் அவர்களது பெண்களுக்குச் சொத்துரிமை, கல்யாண ரத்து, விதவை மணம் ஆகியவைகளும் உண்டு. அவர்களுக்குள்ள அன்பையும் வீரத்தையும் பார்த்து நாம் அவர்களை முரடர்கள் என்கிறோம். அது போலவே இந்துக்களுக்குள் ஒருவருக்கொருவர் உள்ள துவேஷத்தையும் பயங்காளித் தனத்தையும் நாம் பார்த்து அவற்றைச் சாதுத் தன்மை என்று சொல்லிக் கொள்ளுகிறோம். ஒரு கிராமத்தில் ஒரு இஸ்லாமானவனை ஒரு இந்து அடித்தால் 100 இஸ்லாமானவர்கள் வந்து விழுந்து விடுகிறார்கள். இதைத்தான் நாம் முரட்டுத் தனம் என்கிறோம். ஒரு இந்துவை ஒரு இஸ்லாமானவன் அடித்தால் மற்ற இந்துக்கள் அவன் யாரோ அடிப்படுகிறான், நமக்கென்ன கவலையென்று சொல்லி சும்மா இருந்து விடுகிறார்கள். இல்லாவிட்டால் அடிக்குப் பயந்து கொள்ளுகிறார்கள். இதைத்தான் சாதுத்தனம் என்று பெருமை பேசிக்கொள்ளு கிறோம். அன்பும் சகோதரத் தன்மையும் இந்துவிடம் எங்கிருக்கின்றது? ஆடு, கோழி தின்னாதே என்று சொல்லுவதில் மாத்திரம் இருக்கின்றது. மக்களை இழிவாய்க் கருதுவது பிறவியின் பேரால் தாழ்த்தி இம்சிப்பது, கொடுமைப்படுத்துவது ஆகிய காரியங்களைச் செய்து கொண்டிருப்பவன்தான் அன்பு! அன்பு!! ஜீவகாருண்யம்!!! என்று பேசுகிறான்.

அன்பின் உண்மையை அறியவே இல்லை. இஸ்லாம் கொள்கையில் வேறு எங்கு எப்படி இருந்தாலும் சமுக வாழ்விலும், ஆண்டவன் முன்னிலை என்பதிலும் மனிதனை மனிதனாய்க் கருதப்படுகின்றது.

இந்துக் கொள்கையில் வேறு எங்கு ஒற்றுமையாய் இருந்தாலும் சமுக வாழ்விலும் கடவுள் முன்னிலை என்பதிலும் மனிதனை மிருகத்தை விட மலத்தை வாயில் கவ்விக் கொண்டு செல்லும் மிருகத்தை விடக் கேவலமாய் மதிக்கப்படுகின்றது. இதை நாம் பிரத்தியட்சத்தில் காண்கின்றோம். இதைத் தான் அன்புமதம் சமத்துவமதம் என்று இந்துக்கள் தைரியமாய் சொல்கின்றார்கள்.

மதத்தத்துவ நூலை வேதம் என்பதை இஸ்லாம் மார்க்கம் செருப்புத் தைக்கிற சக்கிலியும் மலம் அள்ளும் தோட்டியும் படித்தாக வேண்டும், பார்த்தாக வேண்டும், கேட்டாக வேண்டும் என்று சொல்லி கற்றுக்கொடுப் பதையும் பார்க்கிறோம். இந்து மார்க்க வேதம் என்பதை ஒரே ஒரு சிறு கூட்டம் தவிர (பார்ப்பான் தவிர) மற்றயாவரும் அவன் பிரபுவானாலும் சரி, ஏழையானானாலும் சரி,யோக்கியனானாலும் சரி, அயோக்கி யனாலும் சரி ஒருவனுமே பார்க்கவும், கேட்கவும், படிக்கவும் கூடாது என்று இன்னும் நிர்ப்பந்தப்படுத்தி அந்தப்படியே இன்றும் நடந்து வருகின்றது. இதைத்தான் சமத்துவ நோக்கம் கொண்ட மதம் என்று இந்துக்கள் இன்றும் இன்னமும் சொல்லுகின்றார்கள். மொண்டி முடம், கூன், குருடு ஆகியவர் களுக்கே உதவி செய் என்று இஸ்லாம் மதம் பிரத்தியட்சத்தில் சொல்லுகின்றது. சோம்பேறிகளுக்கே ஊரார் உழைப்பில் உண்டுகளிப்பவர்க்கே உதவி செய் என்று இந்துக்களின் கொள்கை பிரத்தியட்சத்தில் சொல்லுகின்றது.

இஸ்லாம் கொள்கை மக்களை ஒன்று சேர்க்கின்றது. இந்தியாவில் கொஞ்சகாலத்திற்கு முன் ஒரு கோடியை விட குறைந்த எண்ணிக்கை யுள்ள முஸ்லிம்கள் இன்று 8 கோடி மக்களாய் சேர்ந்து இருக்கின்றார்கள். இன்றும் யாவரையும் எப்படிப்பட்ட இழிவானவரையும் எப்படிப்பட்ட இழிவானவர் என்று இந்து மார்க்கத்தாரால் கருதப்பட்டவர்களையும் தனக்குள் சேர்ந்துக்கொள்ள கையை நீட்டுகின்றது. இந்துக்களின் கொள்கை எப்படிப் பட்ட மேலானவன் என்று மதிக்கப்பட்டவர் களையும் உள்ளே விட மறுத்து வாசல்படியில் காவல் காக்கின்றது. தன்னவனையும் வெளியில் பிடித்துத் தள்ளுகின்றது.

கள் குடியைப்பற்றி வாய்த்தப்பட்டை அடிக்காத இஸ்லாம் கொள்கை முஸ்லிம்களில் 100க்கு 99 பேர்களை குடியிலிருந்து விலக்கியிருக்கின்றது. குடிக்கக் கூடாதென்று சதா வாயில் தப்பட்டை அடித்துக்கொண்டு ஓட்டு வேண்டியபோது கள்ளுக் கடையில் நின்று மறியல் செய்யும் இந்து கொள்கையானது இந்துக்களில் 100க்கு 51 பேர்களுக்கு மேல் குடிக்காரர்களாகச் செய்திருப்பதோடு இந்து கடவுளுக்கும் குடி வகைகள் வைத்து கோயில் களில் பெரிய பெரிய ஜாதியார் என்பவர்களால் நைவேத்தியம் செய்து பிரசாதமாய் சாப்பிடப்படுகின்றது. இஸ்லாம் கொள்கையை வலியுறுத்துகின்ற காரணத்தாலேயே இஸ்லாமியர்கள் அதிகமாயுள்ள நாடுகள் இஸ்லாம் அரசர்களால் ஆளப்படுகின்றன. இந்து கொள்கையை வலியுறுத்துகின்ற காரணத்தாலேயே இந்துக்கள் அதிகமாயுள்ள நாட்டை அந்நியர்கள் ஆளுகின்றனர். இந்தபடியாக வெளிப்படையாய்த் தெரியும் கொள்கை களாலேயே இந்துக் கொள்கை களை விட இஸ்லாம் கொள்கைகள் எவ்வளவோ மேன்மையான பலன் கொடுத்திருப்பதை யாரும் மறுக்க முடியாது. இந்தப்படி நான் சொல்லு வதற்காக கோபிக்கும் சகோதரர்கள் முதலில் நான் சொல்லுவது உண்மையா? அல்லது அடியோடு பொய்யா? என்று பார்த்துப் பேசுங்கள். பிறகு கொள்கைக்காக உயிரை விடுங்கள்.

**நன்றி விடுதலை**



# ரோஹிங்கியா பச்சிளங் குழந்தைகளைப் பலி வாங்கும் மியான்மர் அரசு

மியான்மரில் ரோஹிங்கியா இனத்தை சேர்ந்த சுமார் 80,000 முஸ்லிம் குழந்தைகள் பட்டினிச்சாவின் பிடியில் இருப்பதாக ஐக்கிய நாடுகள் அவையின் ஆய்வு எச்சரித்துள்ளது. ஆய்வு நடத்தப்பட்ட 45 கிராமங்களிலும் ஒரு குழந்தைக்குக் கூட குறைந்தபட்ச போதுமான உணவு கிடைப்பதில்லை என்கிறது அந்த ஆய்வு.

மியான்மர் இராணுவத்தின் கொலைவெறித் தாக்குதல்களால் கிட்டத்தட்ட 75,000 ரோஹிங்கியா மக்கள் தங்கள் இருப்பிடத்தை விட்டு வெளியேறிவிட்டதாக உலக உணவுத் திட்டத்தின் அறிக்கை கூறுகிறது. ஐந்து வயதிற்குட்பட்ட 80,500 குழந்தைகள் ஊட்டச் சத்து குறைபாட்டினால் பாதிகப்பட்டுள்ளனர். வாழ்வாதார உதவிகளை எதிர்பார்த்து 2,25,000 மக்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர்.


ரோஹிங்கியா இனவழிப்புத் தாக்குதல்கள் நடக்கும் முன்பு 13 இலட்சம் ரோஹிங்கியா மக்கள் மியான்மரில் குறிப்பாக ராக்கின் (Rakhine) மாநிலத்தில் வாழ்ந்து வந்தனர். சவூதி அரேபியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், இந்தியா உள்ளிட்ட நாடுகளில் வாழ்ந்தாலும் ரோஹிங்கியா இனத்தின் 80 விழுக்காட்டினருக்கு மியான்மர் தான் தாயகமாக இருந்தது.

வன்முறையால் கடுமையாக பாதிக்கப்பட்ட மாங்கடா (Maungdaw) மாவட்டத்தின் மூன்றில் ஒரு பகுதி வீடுகளில் கடுமையான உணவுப் பற்றாக்குறை இருக்கிறது. அதாவது நாள் முழுதும் கூட அந்த பகுதி மக்கள் உணவில்லாமல் தவிக்கிறார்கள். இராணுவத் தேடுதல் வேட்டை காரணமாக பெரும்பாலான ஆண்கள் வீடுகளை விட்டு வெளியேறி விட்டதால், தனியாக இருக்கும் பெண்களே அதிக அளவில் பாதிக்கப்படுகிறார்கள் என்று அந்த ஆய்வு கூறுகிறது.

வன்முறையினால் வேலை வாய்ப்பும் அருகிப் போய் விட்டது. சந்தைகளும் அங்காடிகளும் பாதிக்கும் மேல் மூடப்பட்டு விட்டதால் உணவுப் பற்றாக்குறை கடுமையாக இருக்கிறது. அதனால் பொருள்களின் விலையும் அதிகரித்து விட்டது.

ரோஹிங்கியா மக்கள் மியன்மாரின் பூர்வகுடிகளா என்பது குறித்த பல்வேறு கருத்துக்கள் இருக்கின்றன. அவர்கள் பூர்வகுடிகளா என்ற கேள்வியையும் தாண்டி அவர்களுக்கென்று எவ்வித அடையாளமும் அங்கே கிடையாது. பர்மாவின் குடிமக்களாக அவர்களை பௌத்த பேரினவாதம் அங்கீகரிக்க வில்லை. பௌத்தர்களை பொறுத்தமட்டில்

**சிக்கல் நாயக்கன் பேட்டையிலிருந்து புனித மக்கா மாநகரம் வரை**




**விலை. ரூ.60.00**

அவர்கள் வந்தேறிகள். ரோஹிங்கியா இன அழிப்பு மற்றும் அவர்களுக்கெதிரான குற்றங்களை எதிர்த்து நோபல் பரிசுப் பெற்ற பத்திற்கும் மேற்பட்டவர்கள் ஐக்கிய நாடுகள் அவைக்கு கடிதம் எழுதினர். ஆனால் பர்மா அதிகாரிகள் எந்தவித விசாரணைக்கும் ஒப்புக் கொள்ளவில்லை. ரோஹிங்கியா மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட கொலை, கொள்ளை, பாலியல் வன்முறைகள் என்று அனைத்தையும் மறைத்து விட்டனர்.

மியான்மர் பாதுகாப்புப் படையினரைக் கடந்த 2015 -ம் ஆண்டு அக்டோபரில் ரோஹிங்கியா ஆயுதப் போராட்டக்காரர்கள் தாக்கியதற்கு பதிலடியாக வானூர்திகள் மூலம் ரோஹிங்கியா கிராமங்களை இராணுவம் கடுமையாகத் தாக்கியது. இதில் ரோஹிங்கியா மக்கள் பலர் பலியானார்கள். இதற்காக மியான்மரின் தேசிய ஆலோசகரான ஆங் சான் சூகி சமூக ஆர்வலர்களால் கடுமையாக விமர்ச்சிக்கப்பட்டார்.

மியான்மரில் இராணுவ ஆட்சியை எதிர்த்ததால் சூகி 15 ஆண்டுகள் வீட்டுச்சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அதனால் அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற சூகி 2015 -ம் ஆண்டு நடந்த தேர்தலில் வெற்றி பெற்றாலும் பிரதமர் ஆக முடியவில்லை. ஆயினும் பிரதமருக்கு இணையான தேசிய ஆலோசகர் என்ற புதிய பதவியை 2016 -ம் ஆண்டு ஜனவரியில் உருவாக்கி அதிகாரத்தை தனதாக்கி கொண்டார்.

இராணுவ ஆட்சியை எதிர்த்து நடந்த போராட்டத்தை ஈவிரக்கமில்லாமல் நசுக்கியதற்காக மியான்மரின் மீது 1989 -ம் ஆண்டில் அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்தது. ஆனால் முதலாளித்துவம் மலர்ந்த பின்னர் ரோஹிங்கியா மக்கள் மீதான இனவழிப்பு குற்றத்திற்குப் பரிசாய் பொருளாதாரத் தடையை நீக்கியது அமெரிக்கா.

**- நன்றி வினவு**

# வாசகர்கள் எண்ணங்கள்

**Unwo Ervadi**
ஆழ்ந்த ஆய்வுரை. வாழ்த்துகள்.அல்ஹம்துலில்லாஹ். தங்களின் ஆய்வுரையை படிக்கும்போதே உடல் சிலிர்த்தது. பாரகல்லாஹ். ஹாஜியாரை நேரில் காண வேண்டும் அவர்கள் எழுதிய நூலை வாங்கி படிக்க வேண்டும் என்ற ஆவலை ஏற்படுத்தியுள்ளது. ஹாஜியாரையும் அவர்களின் நூலையும் அறிமுகப்படுத்திய தங்களுக்கு வாழ்த்தும் துஆவும்.
2w Like Reply 2

**Kulmdghani Kulmdghani**
அல்ஹாஜ். முஹம்மது ஜக்கரியா அவர்களின் கடந்த கால வரலாற்றையும், இஸ்லாத்தை தழுவிய பின் அவர்களின் மார்க்கப் பற்றுடன் கூடிய இஸ்லாமிய வாழ்க்கையையும் தனக்கே உரித்தான அழகிய நடையில், தான் படித்து அறிந்த நூலின் சாராம்சத்தை விளக்கி உள்ள விதம் மிகவும் அருமை.
முழு நூலையும் படித்த உணர்வை தருகிறது.
மௌலானா மௌலவி. அல்ஹாஜ். இலியாஸ் ரியாஜி அவர்களுக்கு உள்ளப் பூர்வமான இனிய நல்வாழ்த்துக்கள்.
2w Like Reply 4

**Mohammed Abuthahir**
அருமையான புத்தகம்.. சாதிய ஏற்றத்தாழ்வுகள் நீங்குவதற்கான வழியை உறக்க சொல்லிய வரிசையில் இந்த புத்தகத்திற்கு நிச்சயம் ஒரு இடம் உண்டு.. மாற்று மத சகோதர சமுதாயத்திற்கு பரிசளிக்க வேண்டிய புத்தமும் கூட..
2w Like Reply 1

**+91 81481 29887**




# இரக்கமின்றி ரோஹிங்கியா முஸ்லிம்களை திருப்பி அனுப்பும் மோடி அரசு



இந்திய வரலாற்றில் முதல்முறையாக தஞ்சம் தேடிவந்த அகதிகளை சொந்த நாட்டுக்கே திரும்பி அனுப்ப உச்சநீதிமன்றம் அனுமதி அளித்திருக்கிறது. சட்ட விரோத குடியேற்றத்துக்காக 2012-ம் ஆண்டு முதல் அசாம் சிறையில் உள்ள 7 ரோஹிங்கியாக்களை மியான்மருக்கு அனுப்பும் அரசின் முடிவுக்கு தடை விதிக்க முடியாது என உச்சநீதிமன்றம் மறுத்துள்ளது. அவர்கள் எழுவரும் மணிப்பூரின் எல்லை பகுதியான மொரே அருகே மியான்மருக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.



உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமையிலான மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வு, 7 ரோஹிங்கியாக்களை திரும்ப அனுப்ப தடை கேட்டு தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவை விசாரித்தனர். ரோஹிங்கியாக்களின் மீது திட்டமிட்டு கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை காரணமாக அவர்கள் இந்தியா வந்ததாக அந்த மனுவில் கூறியிருந்தனர். மீண்டும் தங்களை மியான்மருக்கே அனுப்பும் இந்திய அரசின் முடிவு தனக்குள்ள சர்வதேச பொறுப்புகளை அப்பட்டமாக மீறுவதாகும் எனவும் மீண்டும் மியான்மருக்கு திரும்பினால் தாங்கள்



கொல்லப்படும் வாய்ப்புகளே அதிகம் எனவும் அந்த மனுவில் தெரிவித்திருந்தனர்.

ரோஹிங்கியாக்கள் சார்பில் மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் இந்த வழக்கில் வாதாடினார். "ரோஹிங்கியாக்களை பாதுகாப்பது நீதிமன்றத்தின் கடமை. 10 ஆயிரத்துக்கும் அதிகமான ரோஹிங்கியாக்கள் மியான்மரில் கொல்லப்பட்டுள்ளனர். மிக மோசமான இனப்படுகொலை இது. ரோஹிங்கியாக்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. லட்சக்கணக்கான ரோஹிங்கியாக்கள் பங்களாதேசுக்கும் இந்தியாவுக்கும் தஞ்சம் தேடி வந்தனர். அவர்கள் சட்டவிரோத குடியேறிகள் அல்ல; அகதிகள். நீதிமன்றம் ஐநா அதிகாரிகளை அனுப்பி, சிறையில் உள்ள எழுவரையும் வெளியேற்றும் முடிவை தடுத்து நிறுத்த வேண்டும்" என தெரிவித்தார்.

மேலும், ரோஹிங்கியாக்களின் வாழ்வுக்கு நீதிமன்றம் பொறுப்பேற்க வேண்டும் எனவும் ரோஹிங்கியாக்கள் காப்பாற்றப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

"எங்களுடைய பொறுப்புகளை நீங்கள் நினைவுபடுத்த வேண்டாம். எங்கள் பொறுப்புகளை நாங்கள் உணர்ந்தே உள்ளோம்" என்று கூறிய நீதிபதிகள், "மியான்மர் அரசு அவர்களை ஏற்றுக்கொள்ள தயாராக இருப்பதாகச் சொல்கிறது. எனவே ரோஹிங்கியாக்களை திரும்ப அனுப்பும் அரசின் முடிவில் நாங்கள் தலையிட முடியாது" என்றனர்.

இந்திய அரசின் இந்த முடிவை ஐநா விமர்சித்துள்ளது. ரோஹிங்கியாக்கள் தங்களுடைய நாட்டில் வெறுப்புக்கும் மனித உரிமை மீறலுக்கும் ஆளானதையும், நிறுவனமயமாக்கப்பட்ட பாகுபாட்டையும் பார்க்க இந்தியா தவறி விட்டது. அவ்வாறு பார்ப்பது அரசின் சர்வதேச கடமையாகும் என ஐநாவின் இனவெறி தொடர்பான சிறப்பு அறிக்கையாளர் டெண்டாயி அச்சூமி தெரிவிக்கிறார்.

ஐநாவின் இனவெறி சிறப்பு அறிக்கையாளர், ரோஹிங்கியாக்கள் திரும்ப மியான்மரில் சுமூகமான, வாழத் தகுந்த சூழல் உருவாக்கப்படவில்லை என்கிறார். அதாவது, ரோஹிங்கியாக்கள் திரும்பினால் மீண்டும் அனைத்து ஒடுக்குமுறைக்கும் ஏன் படுகொலையாவதற்கும்கூட வாய்ப்பிருக்கிறது என்கிறார்.

18 ஆயிரம் ரொஹிங்கியாக்களுக்கு தஞ்சம் அளித்திருக்கிறது இந்தியா. இவர்களுடன் அந்த ஏழுவரையும் சட்ட விரோத குடியேற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு சிறையில் இருப்பவர்களையும் பாதுகாக்கும் பொறுப்பு இந்தியாவுக்கு உள்ளது என ஐநா சொல்கிறது.

ஐநா பொதுச் செயலாளர் அண்டோனியோ குடேரஸ் அண்மையில் இந்திய அரசு, ரோஹிங்கியா அகதிகளை திரும்ப அனுப்பும் முன், அவர்கள் வாழத்தகுந்த சூழலை உருவாக்குமாறு மியான்மர் அரசை வலியுறுத்த வேண்டும் எனப் பேசியிருந்தார்.

"ரோஹிங்கியாக்களைப் போல மிக மோசமான ஒடுக்குமுறையை சந்திக்கும் இனத்தை உலகில் எங்கும் கண்டதில்லை. அவர்கள் வசிக்கும் ராகைன் மாநிலத்துக்குள்ளேயே கூட அவர்களால் இடம்பெயர முடியாது. அவர்களால் அனுமதி இல்லாமல் திருமணம் செய்து கொள்ள முடியாது. அவர்கள் குழந்தைகள் நல்ல பள்ளியிலோ அல்லது கல்லூரியிலோ சேர்ந்து படிக்க முடியாது. மேலும் அவர்களுக்கு எதிரான வன்முறையை சொல்லியாகவேண்டும். அவர்கள் வீடுகள் கொளுத்தப்படும், பெண்கள் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்படுவார்கள், அவர்களுடைய கிராமங்களை நாசம் செய்வார்கள்" என காந்தி ஜெயந்தி விழாவில் பங்கேற்ற ஐநாவின் பொதுச் செயலாளர் பேசினார்.

ஐநாவின் அகதிகள் தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத போதும் கூட திபெத், வங்காளதேசம், ஆப்கானிஸ்தான், இலங்கை உள்ளிட்ட நாடுகளிலிருந்து வந்த அகதிகளை இந்தியா ஏற்றுக்கொண்டது. ஆனால், ரோஹிங்கியாக்களுக்கு அத்தகைய பரிவு காட்டப்படவில்லை. ஏனெனில் அவர்களுடைய மதம் இசுலாமாக இருக்கிறதே.

ஆளும் இந்துத்துவ வெறி பிடித்த அரசு, மியான்மர் அரசின் இனவெறியை உள்ளூர ரசித்து ஆதரிக்கிறது. தஞ்சம் கேட்டு ஓடிவந்தவர்களை தீவிரவாதிகள், நாட்டுக்கு அச்சுறுத்தல் என ஓயாமல் பாஜக-சங் பரிவாரங்கள் அலறுகின்றனர். இனவெறியாளர்களிடம் அடுக்குமுறை, மனிதநேயம் குறித்து பேச முடியுமா என்ன?

**- வினவு**



# உலக பட்டினிக் குறியீடு

## 119 நாடுகள் பட்டியலில் இந்தியா 103ஆவது இடத்தில் பின்தங்கியுள்ளது

உலக பட்டினிக் குறியீட்டில் 119 நாடுகளில் இந்தியாவின் நிலை மிகவும் மோசமாகி 103ஆவது இடத்தில் பின்தங்கியுள்ளது, நாட்டில் 21 சதவீத குழந்தைகள் குறைந்த எடை கொண்டவர்கள் என்றும் உலக பட்டினிக் குறியீடு அறிக்கையில் தெரியவந்துள்ளது.

அதாவது நாட்டில் 5 குழந்தைகளில் ஒரு குழந்தைக்கு சரிவிகித சத்தான உணவு இல்லை, அந்தக் குழந்தையும் தனது உயரத்துக்கு ஏற்ற எடை கொண்டதாக இல்லை என்று 2018-ஆம் ஆண்டுக்கான உலக பட்டினி குறியீட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

உலகிலேயே மிகவும் மோசமான நிலையில், சரிவிகித சத்துணவு இல்லாமல் தெற்கு சூடான் நாட்டில் உள்ள குழந்தைகள் தவித்து வருகின்றனர். 119 நாடுகளை எடுத்துக்கொண்டு நடத்தப்பட்ட இந்த ஆய்வில் இந்தியா 103 இடத்துக்குப் பின் தங்கி மிகவும் தீவிரமாக, கவலைக்குரிய இடத்தைப் பெற்றுள்ளது. கடந்த ஆண்டைக் காட்டிலும் 3 இடங்கள் கீழிறங்கியுள்ளது.

**காரணிகள்**

பட்டினி குறியீட்டை கணக்கிடுவதற்கு நான்கு முக்கியக் காரணிகள் கணக்கிடப் படுகின்றன. முதலாவதாக ஒரு குழந்தைக்கு தேவையான சத்துள்ள, சரிவிகித உணவு கிடைக்கிறதா அல்லது சத்துள்ள உணவு இல்லாமல் இருக்கிறதா என்பதை அறிவதாகும்.

2வதாக 5 வயதுக்கு கீழ்ப்பட்ட குழந்தைகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். அதில் இந்த 5 வயதுக்கு கீழ்ப்பட்ட குழந்தைகள் தங்கள் உயரத்துக்கு ஏற்ப எடை கொண்டிருக்கிறார்களா, தங்கள் வயதுக்கு ஏற்ப உயரத்தைக் கொண்டிருக்கிறார்களா என்பதை அறிவதாகும். இவை இரண்டுக்கும் சரிவிகித சத்துணவு இல்லாமல் இருப்பது காரணமாகும். இறுதியாகக் குழந்தை இறப்பு. இந்த 4 காரணிகளால் கணக்கிடப்படுகிறது.

ஆனால், இந்தியாவைப் பொறுத்த வரை, கடந்த சில ஆண்டுகளாக 3 விசயங்களில் மட்டும் முன்னேறி வருகிறது. கடந்த 2000ஆம் ஆண்டில் சத்துக்குறைபாடு உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை அளவு கடந்த 18 ஆண்டுகளில் குறைந்துள்ளது. அதாவது கடந்த 2000ஆம் ஆண்டில்18.2 சதவீதத்தில்

இருந்து 2018-ஆம் ஆண்டில் 14.8 சதவீதமாகக் குறைந்துள்ளது. பச்சிளங் குழந்தைகள் இறப்பு 9.2 சதவீதத்தில் இருந்து 4.3 சதவீதமாகக் குறைந்துள்ளது. மேலும், வயதுக்கு ஏற்ற உயரம் இல்லாத குழந்தைகள் அளவு 54.2 சதவீதத்தில் இருந்து 38.4 சதவீதமாகக் குறைந்துள்ளது.

அதேசமயம், "சைல்ட் வாஸ்டிங்" எனச் சொல்லக்கூடிய உயரத்துக்கு ஏற்ற எடை இல்லாத குழந்தைகளின் எண்ணிக்கை அளவு அதிகரித்து வருவது கவலைக்குரிய விசமாக இருக்கிறது. கடந்த 2000-ஆம் ஆண்டில் 17 சதவீதமாக இருந்த நிலையில், 2005-இல் 20 சதவீதமாகவும், 2018-இல் 21 சதவீதமாகவும் அதிகரித்து உள்ளது. தெற்கு சூடானில் இது 28 சதவீதமாகவும் இருக்கிறது.

குழந்தைகளின் உயரத்துக்கு ஏற்ற எடை இல்லாமல் இருக்கும் குறைபாடு என்பது தெற்காசியாவில் பரவலாக இருக்கிறது, இது உடனடியாக கவனத்தில் கொண்டு களையப்பட வேண்டிய விசயம் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. இந்தக் குறைபாட்டை சிறுவயதில் இருந்தே தடுக்க குழந்தைகளுக்குத் தாய்மார்கள் தாய்ப்பால் ஊட்டுதலைக் கட்டாயப்படுத்த வேண்டும்.

அதுமட்டு மல்லாமல், பெண்கள் தங்களின் பேறு காலத்தில் போதுமான சத்துள்ள உணவுகளை எடுத்துக் கொள்ளாமல் இருப்பதாலும், குழந்தை பிறந்த பின் தாய்ப்பால் முறையாகக் கொடுக்காமல் இருப்பதாலும் இந்த வயதுக்கு ஏற்ற எடை இல்லா குழந்தைகள் உருவாக காரணமாகக் கூறப்படுகிறது.

தெற்காசியாவில் குழந்தைகள் உயரத்துக்கு ஏற்ற எடையில்லாமல் இருக்கும் பிரச்சினைக்கும் சுகாதாரமான குடிநீர், கழிப்பிட வசதி ஆகியவற்றுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

ஏழ்மை நிலையைக் குறைப்பதால் மட்டும் இந்தக் குறைபாட்டை நீக்கிவிட முடியாது. மாறாக, குழந்தைகளுக்கும், மகப்பேற்றில் உள்ள பெண்களுக்கு சத்துள்ள, சரிவிகித உணவு கிடைப்பதை உறுதி செய்தல், சுத்தமான கழிப்பிட வசதிகள் செய்தல், பெண் கல்வி, பாதுகாப்பான குடிநீர், பாலின சமத்துவம், நாட்டில் போதுமான உணவு அனைவருக்கும் கிடைக்க உறுதி செய்தலும் அவசியமாகும்.

சர்வதேச அளவில் அனைத்து நாடுக ளும் தீவிரமான முயற்சிகள் எடுத்து பட்டி னிக்குறியீட்டில் தங்கள் நிலையை உயர்த்தி வருகின்றன.

கடந்த 20 ஆண்டு களில் நாடுகளின் நிலையில் முன்னேற்றம் தென்படுகிறது. ஆனால், 50 நாடுகள் 2030-ஆம் ஆண்டுக்குள் குறைந்த பட்டினி குறியீடு என்ற இடத்தைத் தக்க வைக்காது என்பது ஆய்வில் தெரியவந்துள்ளது.

## டெல்லியில் பட்டினிக் கொடுமையால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 சிறுமிகள் பரிதாபச் சாவு

டெல்லியில் உள்ள மந்தாவாலி பகுதியில் உள்ள ஜிடிபி அரசு மருத்துவமனைக்கு நேற்று நண்பகலில் 8 வயது, 4 வயது, 2 வயதைச் சேர்ந்த சிறுமிகள் 3 பேர் உடல் நலக்குறைவுடன் கொண்டு வரப்பட்டனர். இந்த 3 சிறுமிகளையும் அவரின் தாயும், அவரின் தோழியும் அழைத்து வந்தனர்.

இந்தச் சிறுமிகள் 3 பேரையும் பரிசோதித்த மருத்துவர்கள் இவர்கள் ஏற்கெனவே இறந்துவிட்டனர் எனத்தெரிவித்தனர். இதையடுத்து, மருத்துவமனை சார்பில் போலீஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, இந்தச் சிறுமிகளின் தாயிடம் விசாரணை நடத்திய போலீஸார் உடற்கூறு ஆய்வுக்குஅனுப்பி வைத்தனர்.

உடற்கூறு ஆய்வு செய்த மருத்துவர்கள் அறிக்கையில், அந்த 3 சிறுமிகள் உடலின் வயிற்றிலும் எந்தவிதமான உணவும் இல்லை, இவர்கள் பட்டினியால் உயிரிழந்துள்ளனர். இந்தச் சிறுமிகளின் உடலிலும், உடல் உள்ளுறுப்புகளிலும் எந்தவிதமான காயமும் இல்லை முறையான உணவுகள் இல்லாத காரணத்தால், பட்டினியால் இறந்துள்ளனர் என்று தெரிவித்தனர்.

இது குறித்து டெல்லி கிழக்கு போலீஸ் துணை ஆணையர் நிருபர்களிடம் கூறியதாவது:

இறந்துபோன 3 சகோதரிகளும் முறையான உணவு இல்லாமல், பட்டினியால் உயிரிழந்துள்ளனர் என மருத்துவர்களின் உடற்கூறு ஆய்வில் தெரிய வந்துள்ளது. அந்த சிறுமிகளின் வயிற்றில் எந்த விதமான உணவும் இல்லை.

கடந்த சில நாட்களுக்கு முன் அந்தச் சிறுமிகளின் தந்தையின் ரிக்ஷா திருடு போய் விட்டது. இதனால், வேலை கிடைக்காமல், வேலை தேடி அலைந்து வருகிறார்.

அவரையும் போலீஸார் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். கடைசியாகக் கடந்த திங்கள் கிழமை இந்தச் சிறுமிகள் 3 பேரும் உணவு சாப்பிட்டுள்ளனர். இந்த சிறுமியின் தாயிடம் விசாரணை நடத்திய போது அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் போன்று பேசுகிறார்.

இந்தச் சிறுமிகள் எவ்வாறு இறந்தார்கள் என்பது குறித்து கூட அவருக்கு சொல்லத் தெரியவில்லை. இவர்கள்4 பேரும் தங்கியிருந்த வீட்டுக்குச் சென்று போலீஸார் விசாரணை நடத்தியபோது, அங்கு சில மாத்திரைகளும், மருந்து குப்பிகளும் இருந்தனர்.

அது குறித்து விசாரணை நடத்திய போது, அந்த 3 சிறுமிகளுக்கும் வயிற்றுப்போக்கு, வாந்தி இருந்ததால், இந்த மாத்திரைகள் வழங்கியதாக அந்தச்சிறுமிகளின் தாய் தெரிவித்தார்.

மருத்துவர்கள்நடத்திய உடற்கூறு ஆய்வில் அந்தச் சிறுமிகள் 3 பேரும் பலநாட்கள் சாப்பிடாமல், உணவு இல்லாமல் பட்டினியால் இறந்துள்ளனர் என ஆதாரப் பூர்வமாக தெரிவிக்கிறார்கள்.

இவ்வாறு போலீஸ் துணை ஆணையர் தெரிவித்தார்.

**நன்றி விடுதலை மற்றும் தி இந்து தமிழ்**

# அழைப்பியல்...







**மதுரையில் தாருல் இஸ்லாம் அறக்கட்டளை சார்பில் மாற்று மதத்தவர்களுக்கு இஸ்லாத்தை எத்தி வைக்கும் பணி மேற்கொள்ளப்பட்ட போது....**



# எது முதலில்?

## தடை செய்யப்பட்டவற்றை தவிர்ப்பதா? நன்மைகள் செய்வதா?

### இமாம் யூசுஃப் அல் கர்ளாவீ

இப்படி ஒரு விவாதம் அறிஞர்களின் வட்டாரத்தில் உண்டு. மார்க்கம் ஏவியவற்றைச் செயல்படுத்துவதை விட தடை செய்யப்பட்டவற்றைத் தவிர்ப்பதே முக்கியம் என்கின்றனர் சில அறிஞர்கள்.


பின் வரும் நபிமொழியை இதற்கு சான்றாகக் காட்டுகின்றனர்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: “நான் தடை செய்தவற்றை விட்டு விலகுங்கள். நான் ஏவியவற்றை முடிந்த அளவிற்கு நிறைவேற்றுங்கள்” *(நூல்: புகாரி, முஸ்லிம்)*

இந்த நபிமொழியைப் பாருங்கள். தடை செய்யப்பட்ட எதையும் செய்திட அனுமதிக்கவில்லை. கட்டளைகளை முடிந்த வரை செய்யுங்கள் என்று கூறுகிறது. “முடிந்தவரை” என்ற சொல் கவனிக்கப்பட வேண்டும்.

இக்கருத்தை இமாம் அஹ்மது(ரஹ்) கூறியுள்ளார்கள். கிட்டத்தட்ட இதேப் போன்ற கருத்தை வேறு சிலர் இப்படிச் சொல்கின்றனர். நன்மையான செயல்களை நல்லவனும் செய்வான், கெட்டவனும் செய்வான். ஆனால் ஒரு வாய்மை வாய்ந்தவன் மட்டுமே பாவம் செய்யாமலிருப்பான். இக்கருத்தை துஸ்தரீ(ரஹ்) கூறுவதாக அபூ நயீம் தனது ‘ஹில்யா’ வில் குறிப்பிடுகிறார்.

மேலும் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: “தடை செய்யப்பட்டவற்றை விட்டு விலகி விடு. இதனால் நீ மக்களில் சிறந்த வணக்கசாலியாவாய்.” *(அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரழி), நூல்: அஹ்மது, திர்மிதி, இப்னுமாஜா, பைஹகி, ஹில்யா)*



மேலும் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: “வணக்க வழிபாட்டில் தொடர்ச்சியாக ஈடுபடுபவரை முந்தி விட வேண்டும் என்று விரும்பக் கூடியவர் பாவங்கள் செய்யாமல் தன்னைக் காத்துக் கொள்ளட்டும்.” *(அறிவிப்பாளர்: ஆயிஷா(ரழி), நூல்: அபூயஅலா)*

ஹசன் பசரீ (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ் தடை செய்தவற்றை விடுவதை விட சிறந்த எதையும் வணக்கசாலிகள் செய்து விடுவதில்லை. எனவே ஏவல்கள் செய்வதை விட தடை செய்யப்பட்டவைகளை விடுவதே முதலிடம் பெறுகிறது. இப்படிச் சொல்லி விட்டதால் கடமைகளை நிறைவேற்றுவதை விட விலக்கப்பட்டவற்றைத் தவிர்ப்பதே போதுமானது என்று புரிந்து கொள்ளாதீர்கள்."

"நஃபில் எனும் உபரியான வணக்கங்களை விட பாவங்களைத் தவிர்ப்பதே சிறந்தது என்று பொருள். ஏனென்றால் கட்டாயக் கடமைகள் கண்டிப்பாக நிறைவேற்றப் பட வேண்டியவை. இவற்றைச் செய்யும் போது நிய்யத் (மன எண்ணம்) இருக்க வேண்டும்."

"பாவங்களை செய்யாமலிருப்பதற்கு நிய்யத் (மன எண்ணம்) தேவையில்லை. எனவே பாவங்களை விடும் செயலை விட கடமைகளைச் செய்யும் செயலே ஏற்றமானது."

"இன்னொன்றையும் கவனியுங்கள், தவ்ஹீத் எனும் ஏகத்துவத்தையோ, இஸ்லாத்தின் கடமைகள் அனைத்தையுமோ அல்லது அவற்றுள் சிலதையோ ஒருவன் வேண்டு மென்றே விடுவதால் காஃபிராகி (இறை மறுப்பாளனாகி) விடுவான். ஆனால் பாவங்களை செய்வதால் காஃபிராவதில்லை."

"எனவே மார்க்கத்தின் ஏவல்களைச் செய்வதை விட தடை செய்யப்பட்ட பாவங்களைச் செய்யாமலிருப்பதே ஏற்றமானது என்பதன் பொருள் நஃபில் எனும் உபரியான வணக்கங்களை விட பாவங்களை விடுவது ஏற்றமானது என்பதாகும்."

இதை இப்னு உமர்(ரழி) அவர்களின் பின்வரும் பொன்மொழி வலியுறுத்துகிறது. "தடை செய்யப்பட்ட வழியில் வரும் ஒரு சல்லிக்காசு வருமானத்தை வேண்டாம் என்று உதறுவது அல்லாஹ்வின் பாதையில் ஒரு லட்சம் செலவிடுவதை விட ஏற்றமானது."

மூத்த முன்னோடி (ஸலஃப்) ஒருவர் கூறினார்: "சல்லிக் காசானாலும் சரி, அது அல்லாஹ்வுக்குப் பிடிக்காத வழியில் வந்தால் அதை உதறுவதால் வரும் இன்பம், ஐநூறு ஹஜ் செய்வதால் வரும் இன்பத்தை விட எனக்கு பேரின்பம் தரும்."

அப்துல்லாஹ் பின் முபாரக்(ரஹ்) அவர்கள் கூறினார்கள்: "இலட்சக்கணக்கில் தர்மம் கொடுப்பதை விட எனக்கு அதிக விருப்பமானது சந்தேகத்துக்கிடமான வழியில் வரும் ஒரு வெள்ளிக்காசு வருமானத்தை கூட ஏற்க மறுப்பதுதான்."

உமர் பின் அப்துல் அஜீஸ்(ரஹ்) கூறினார்கள்: "இரவு வணக்கத்தில் திளைப்பதோ, பகலில் நோன்பு வைப்பதோ, இவ்விரண்டையும் செய்வதோ இறையச்சம் அல்ல. தக்வா என்பது அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவதும் அவன் தடை செய்தவற்றை விடுவதும் தான். இவற்றுடன் சேர்த்து நற்செயல்களும் செய்தால் அது நன்மைக்கு மேல் நன்மையாகும்."

மேலும் அவர்கள் இப்படிச் சொன்னார்கள்; "நான் ஐவேளைத் தொழுகையும், வித்ரு தொழுகையும் மட்டும் தொழ வேண்டும். கடமையான ஸகாத்தை மட்டும் வழங்க வேண்டும். உபரி தர்மங்கள் வழங்காமலிருக்க வேண்டும். ஒரு நாள் கூட உபரியான நோன்பு நோற்காமல் கடமையான ரமழான் நோன்பினை மட்டுமே நோற்க வேண்டும். கடமையான ஒரு ஹஜ் மட்டும் செய்து விட்டு பிறகு ஹஜ் செய்யாமலிருக்க வேண்டும். எஞ்சியுள்ள என் வலிமை முழுவதையும் திரட்டி அல்லாஹ் எனக்குத் தடை செய்தவற்றை விட்டு நான் விலகியிருக்க அதைப் பயன்படுத்த வேண்டும் என்று விரும்புகிறேன்."

சான்றோர்களின் மேற்கண்ட பொன் மொழிகளின் சாராம்சம் என்னவென்றால், ஏராளமான (நஃபில்) உபரி வணக்கங்களை விட தடை செய்யப்பட்டவற்றைத் தவிர்ப்பது தான் (ஒப்பீட்டளவில் இது குறைவாக இருப்பினும் கூட) சிறந்தது. ஏனென்றால் பாவங்களைத் தவிர்ப்பது கடமை. ஆனால் அதுவோ உபரியானது தான்.

பிற்கால அறிஞர்களுள் சிலர் இப்படிக் கூறுகின்றனர்: "நான் உங்களுக்கு தடை செய்தவற்றை விட்டு விடுங்கள். நான் ஏவியவற்றை முடிந்த வரை செயல்படுத்துங்கள்." என்று நபி(ஸல்) அவர்கள் கூறியிருப்பதற்குக் காரணம், ஒரு ஏவலுக்குக் கட்டுப்பட்ட வேண்டுமென்றால் செயல்பட வேண்டும். அதாவது அது ஒரு செயல்.

எந்த ஒரு செயலும் சில காரணங்களையும், சில நிபந்தனைகளையும் சார்ந்தே தான் இருக்கும். அந்தக் காரணங்களிலும் நிபந்தனை களிலும் சில, சிலரின் சக்திக்கு அப்பாற் பட்டதாக இருக்கும். எனவே எந்த ஏவலையும் சக்திக்கு உட்பட்டு செயல் படுத்துங்கள் என்று கூறப்பட்டிருக்கிறது.

இதோ அல்லாஹ் கூறுவதை பாருங்கள்

"உங்களால் இயன்ற அளவுக்கு அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்துக் கொள்ளுங்கள்" *(64:16)*

"(கஅபா எனும்) இறை இல்லத்துக்குச் சென்று வர சக்தியுள்ள மனிதர்கள் மீது அல்லாஹ்வுக்காக ஹஜ் செய்வது கடமையாகும்" *(3:97)*

ஆனால் தடை செய்யப்பட்டவற்றைச் செய்யாமலிருப்பது ஒரு செயல் அல்ல. செயலின்மை.

எந்த காரியத்திலும் செயலின்மை என்பதுதான் பூர்வீகமானது. எனவே செயலின்மை என்ற பூர்வீகத்திலேயே தொடர்வது எல்லோருக்கும் சாத்தியமானது தான். இதில் சக்திக்குட்பட்ட செயலின்மை மட்டுமே உண்டு. சக்திக்குட்படாத செயலின்மை என்று எதுவும் இல்லை.

இவ்வாறு அறிஞர்களுள் சிலர் கூறியுள்ளனர். எனினும் இதைக் கூட அப்படியே நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால் சில சமயங்களில் சில வலிமையான காரணங்களால் பாவங்களை நோக்கி ஈர்க்கப்படுகிறான். அப்போது அந்த பாவங்களை செய்திடும் வாய்ப்பு இருக்கும் சூழலில் அவற்றைச் செய்யாமலிருக்க அவனால் இயலாமல் போய் விடுகிறது. அந்த நேரத்தில் பாவம் செய்திடும் உணர்வை கட்டுக்குள் வைத்திட பெரும் சிரமப்பட வேண்டியதிருக்கிறது.

இது நன்மைகளைச் செய்வதற்கு பட வேண்டிய சிரமங்களை விட கூடுதலாக ஆகி விடுவதும் உண்டு.

உமர்(ரழி) அவர்களிடம் ஒருவர் வந்து, "சிலர் பாவங்களைச் செய்ய ஆசைப் படுகின்றார்கள். ஆனால் அவற்றைச் செய்வதில்லை. இவர்களைப் பற்றி உங்கள் கருத்து என்ன?" என்று கேட்ட போது, "தக்வாவுக்குரிய சோதனையை இவர்களின் உள்ளங்களுக்கு அல்லாஹ் வைக்கிறான். இவர்களுக்கு மன்னிப்பும் மகத்தான கூலியும் உண்டு" என்று பதிலளித்தார்கள் உமர்(ரழி) அவர்கள். (அறிவிப்பாளர்: முஜாஹித்(ரஹ்), நூல் அஹ்மது, கிதாபுஸ் சுஹ்து)

தன் திரு வேதங்களில் ஒன்றில் அல்லாஹ் கூறியுள்ளதாக யசீத் பின் மைசரா(ரழி) அவர்கள் கூறினார்கள்: "இளைஞனே! இச்சைகளை விட்டு விலகி தன் இளமையை எனக்காக செலவளித்தவனே! நீ என்னிடத்தில் என் வானவர்களில் ஒருவன் போலவே இருக்கிறாய்." (நூல்: ஹில்யா, அபூ நயீம்)

மேலும் அவர்கள் கூறினார்கள்: எரிபொருளை நெருப்பு எரிப்பது போல எவ்வளவு கடுமையாக இச்சை உடலைத் தீண்டுகிறது! இச்சைக்குப் பணியாதவர்கள் பிறகெப்படி இதிலிருந்து தப்பிக்க முடியும்!(நூல்: ஹில்யா)

ஆக சுருங்கக் கூறின், தன் அடியார்கள் எவரையும் அல்லாஹ் சக்திக்கு மீறி வேலை வாங்க மாட்டான். சிரமமாக இருக்கும் என்பதற்காகவே சில செயல்களை செய்யாமல் இருக்க அனுமதித்துள்ளான். இது அடியார்களுக்கு அவன் செய்த அருள்.

ஆனால் பாவங்கள் அப்படியல்ல. ஆசை இருக்கிறது என்பதாலோ செய்யத் தூண்டும் காரணிகள் வலிமையாக இருக்கிறது என்பதாலோ பாவத்தைச் செய்திட எவருக்கும் அனுமதி வழங்கவில்லை.

மாறாக எந்தச் சூழ் நிலையிலும் பாவம் செய்து விடக் கூடாது என்றே வலியுறுத்துகிறான்.

தடை செய்யப்பட்ட உணவுகளை நெருக்கடியான நேரத்தில் உண்ணலாம் என்ற அனுமதி கூட உயிர் வாழ்ந்திடப் போதுமான அளவுக்கே உண்ண அனுமதி உண்டு. ஆசைக்கேற்றப்படியோ, இச்சைக்காகவோ அல்ல.

"ஏவல்களை கடைபிடிப்பதை விட விலக்கப்பட்டவற்றைத் தவிர்த்து வாழ்வதே கடினமானது" என்று இமாம் அஹ்மது பின் அன்பல்(ரஹ்) அவர்கள் கூறுவது எவ்வளவு சரியானது என்பது இப்போது தான் தெரிகிறது.

இதோ அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்:

"மார்க்கத்தில் நிலைத்திருங்கள். அதை முழுமையாக அடைந்து விட மாட்டீர்கள். (அறிவிப்பாளர்: சவ்பான்(ரழி), நூல்: அஹ்மது, இப்னுமாஜா, ஹாகிம்)

அதாவது முழுமையாக உங்களால் நிலைத்திருக்க இயலாது என்று பொருள்.

எனவே விலக்கப்பட்டவற்றைத் தவிர்ப்பதே முதன்மையானது.

நஃபிலான காரியங்களில் ஈடுபடுவதை விட.

**தமிழில்:**

**பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி.M.A.,**



# பறிபோகும்

## கருத்துச் சுதந்திரம் | சிந்தனைச் சுதந்திரம் | தனித்திருக்கும் உரிமை

ஆதார் அட்டை அவசியம் எனக் கட்டாயப்படுத்தியதன் மூலம் நமது தனித்து சுதந்திரமாக இருக்கும் உரிமையைப் **Right to Privacy** பறித்தது மத்திய அரசு.

உச்ச நீதிமன்றத்தில் குடிமக்களுக்கு அப்படி ஒரு உரிமை இல்லை என தனது வழக்கறிஞர்களை வைத்து வாதாடியது. அதனால் அப்படி ஓர் உரிமை இருக்கின்றதா, இல்லையா? என்பதை முடிவு செய்திடும் நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

அரசியல் நிர்ணயச் சட்டத்தை யாத்தவர்கள் அப்படி ஓர் உரிமையைச் சொல்லாமல் விட்டு விட்டார்கள். ஆனால் பல்வேறு வழக்குகளிலும், குறிப்பாக 1950 இல் ஒரு வழக்கிலும் 2012இல் ஒரு வழக்கிலும் அப்படி ஓர் உரிமை உண்டா? இல்லையா? என்பது விவாதத்திற்கு வந்தது. அதில் அப்படி ஓர் உரிமை இல்லை என்று ஒரு வழக்கிலும், உண்டு என்று இன்னொரு வழக்கிலும் முடிவாயிற்று.

அதனால் ஆதார் அட்டையை கட்டாயப்படுத்துவதற்கு முன்னால், தனித்து சுதந்திரமாக அரசு உட்பட யாருடைய தலையீடும் இல்லாமல் இருக்கும் உரிமை மக்களுக்கு இருக்கின்றதா? என்பதை உறுதி செய்திடும் கட்டாயம் உச்ச நீதிமன்றத்திற்கு வந்தது.

உச்ச நீதிமன்றம், ஒன்பது நீதிபதிகள் அடங்கிய ஓர் அமர்வுக்கு இந்த உரிமைப் பிரச்சனையை அனுப்பியது. அதாவது இந்திய குடிமக்களுக்கு **"Right to Privacy"** அரசு உட்பட யாருடைய இடையூறுமில்லாமல் தனித்திருக்கும் உரிமை உணடா? என்பதில் தீர்ப்பளிக்க ஏற்பாடு செய்தது. ஏன் ஒன்பது நீதிபதிகள் கொண்ட ஓர் அமர்வை உச்ச நீதிமன்றம் ஏற்பாடு செய்தது என்றால்

இது நமது அடிப்படை உரிமையான சிந்திக்கும் உரிமை, நமது சிந்தனையில் உதித்ததைச் செயல்படுத்திடும் உரிமை இவற்றை மட்டும் பறிக்க வில்லை, மாறாக சிந்திக்கும் கலாச்சாரத்திற்கே முற்றுப் புள்ளி வைத்து விட்டது

தனித்திருக்கும் உரிமை என்றொன்று இல்லை என்ற தீர்ப்பை 1962 ஆம் ஆண்டில் வழங்கியது ஐந்து பேர் கொண்ட ஓர் உச்சநீதிமன்ற அமர்வு. **Khanak Singh vs State of Uttar Pradesh.**

23.08.2017 அன்று ஒன்பது நீதிபதிகளைக் கொண்ட அமர்வு இந்திய குடிமக்களுக்கு தனித்திருக்கும் உரிமை **"Right to Privacy"** என்பது உண்டு என்று தீர்ப்பளித்தது.

இதில் ஒன்பது நீதிபதிகளும் ஒத்தக் கருத்தோடு ஒப்பமிட்டனர். அதில் அவர்கள் இப்படிக் குறிப்பிட்டார்கள்.

THE RIGHT TO PRIVACY IS PROTECTED AS AN INTRINSIC PART OF THE RIGHT TO LIFE AND PERSONAL LIBERTY UNDER ARTICLE 21. AND AS A PART OF THE FREEDOMS GURATEERED BY PART 3 OF THE CONSTITUTION

அதாவது தனித்திருக்கும் உரிமை என்பது பாதுகாக்கப்பட்ட ஓர் உரிமை. இது இந்திய அரசியல் நிர்ணயச் சட்டம், பிரிவு 21இல் உத்திரவாதமளிக்கப்பட்டிருக்கும் வாழ்வதற்கு இருக்கும் உரிமை. மற்றும் தனிமனித சுதந்திரம் ஆகிவற்றின் பிரிக்க முடியாத ஒரு பகுதி. இந்த உரிமைகள் (அடிப்படை உரிமைகள்) நமது அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு மூன்றில் உத்திரவாதமளிக்கப்பட்டவை.

(ஆதாரம்: இந்திய உச்சநீதிமன்ற தீர்ப்பு **SCI: Justice Rtd K.S. PATTASWAMY vs UNION OF INDIA**)

இந்தத் தீர்ப்பு மேலும் இப்படிக் கூறியது:

"PRIVACY IS NECESSARY CONDITION FOR THE MEANINGFUL EXERCISE OF OTHER GUARANTEED FREEDOMS"

பொருள்: அரசு உட்பட, பிறருடைய இடையூறுகளிலிருந்து தனித்திருக்கும் சுதந்திரம் அரசியல் நிர்ணயச் சட்டம் வாக்களித்திருக்கும் இதர உரிமைகளை பயன்படுத்துவதற்கு கட்டாயமாகத் தேவைப்படும் உரிமை."

(ஆதாரம்: இந்திய உச்சநீதிமன்ற தீர்ப்பு **SCI: Justice Rtd K.S. PATTASWAMY vs UNION OF INDIA**)

2017ஆம் ஆண்டு ஆகஸ்டு 23ஆம் நாள் தான், இந்தியக் குடிமக்களுக்கு இந்த உரிமை சுதந்திரமாகத் தனித்திருக்கும் உரிமை கிடைத்தது.

அதாவது ஆங்கிலேயர்களிடமிருந்து நாடு விடுதலை அடைந்து 70 ஆண்டுகளுக்குப் பின்னர் தான் இந்த உரிமையை நமது உச்ச நீதிமன்றம் நமக்கு வழங்கியது. உலகின் இதரப் பகுதிகளில் வாழும் மக்கள் இதனை, இந்த உரிமையை நீண்ட நெடியதொரு காலம் அனுபவித்து வருகின்றார்கள்.

இதில் நாம் கவனிக்க வேண்டிய பிரிதொரு விஷயம் என்னவெனில் நமது மனித உரிமை அமைப்புகளோ, அரசியல் கட்சிகளோ இப்படி ஓர் உரிமைக்கு இன்றளவும் போராடியதில்லை.

ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவர், ஆதார் அட்டை அடிப்படை உரிமைகள் அனைத்தையும் குழி தோண்டி புதைக்கின்றது என்பதை எடுத்துக் காட்டி நீதிமன்றம் சென்ற போது கிடைத்த உரிமை இது.

இதையும் மோடி அரசு வழி மறிக்க அனைத்து வழிமுறைகளையும் கையாண்டது. மோடி அரசின் சார்பில் வாதாடிய வழக்கறிஞர், அப்படி ஓர் உரிமை,அதாவது எந்த இடையூறுமின்றி தனித்திருக்கும் உரிமை என்றொன்று நமது குடிமக்களுக்கு எங்கேயும் வாக்களிக்கப் படவில்லை, உத்திரவாதமளிக்கப்படவில்லை என மீண்டும், மீண்டும் வாதாடினார். மோடி அரசின் இந்த உரிமை மறுப்பு வாதங்களை வரலாறு மறக்காது. மன்னிக்காது.

**சிறுபான்மை மக்களின் உரிமைகள்:**

சிறுபான்மை மக்களுக்கு அடிப்படை உரிமைகள் என அரசியல் நிர்ணயச் சட்டம் வாக்களித்த உரிமைகளில் (அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 25-30) நித்தமும் கை வைத்து வருகின்றார்கள்.

இப்படி சிறுபான்மையினரைப் பொறுத்தவரை அரசியல் நிர்ணயச் சட்டம் வாக்களித்த உண்மைகள் வெறும் ஏட்டு சுரைக்காய் என்றாகி விட்டன. இவற்றிற் கெல்லாம் மோடி பேரவையாய் ஆகிவிட்ட உச்ச நீதிமன்றம் உறுதுணையாய் நின்றது.

அடுத்து கருத்து சுதந்திரமும், அதாவது அரசியல் நிர்ணயச் சட்டம் வாக்களித்த இன்னொரு சுதந்திரமும் பறிக்கப்பட்டு விட்டது.(அரசியல் சட்டம் பிரிவு (19-1-9)

கவுரி லங்கேஷ், கல்புர்க்கி, டபோல்கர், கோவிந்த் பன்சாரி போன்ற இந்துத்துவாவை விமர்சித்தவர்கள் அத்தனை பேரும் கொலை செய்யப்பட்டு விட்டார்கள். இதை சங்க பரிவாரத்தின் அதி தீவிரவாத அமைப்பாகிய சானாஸ்தான் சாஸ்தா என்ற அமைப்புத்தான் செய்தது. (விரிவான தகவல்களுக்கு படியுங்கள், "இந்துத்துவா தீவிரவாதிகள் நாட்டின் செல்லப் பிள்ளைகளா?" வேர்கள் பதிப்பகம் வெளியீடு. விலை ரூபாய் 10. மட்டும்.)

அடுத்து மோடியை விமர்சிப்பவர்களைத் அவரது ஆட்சியின் முட்டாள் தனங்களையும், அதனால் நம் நாட்டுக்கு ஏற்பட்ட வீழ்ச்சியை வெளிச்சம் போட்டுக் காட்டுபவர்களை கைது செய்தார் - சிறையலடைத்தார். சித்திரவதைகளுக்கு ஏற்பாடு செய்தார்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாக சிதறிக் கிடக்கும் சில யோக்கியமான நீதிபதிகள் அவர்களை சிறையில் அடைக்க மறுத்தார்கள். ஆனாலும் வீட்டுக்காவலில் வைத்தார்கள்.

**பல்கலைக் கழகங்களில் சிந்திக்கும் உரிமை**

இப்போது பல்கலைக் கழகங்களில் பவனி வரும் கருத்துச் சுதந்திரங்களை பறித்து விட்டார்கள்.

அன்மையில் மத்திய அரசு மத்திய பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கை ஒன்றில், மத்திய அரசு ஊழியர்களுக்குப் பொருந்தும் சட்டங்களெல்லாம், மத்திய பல்கலைக் கழகங்களில் பணி புரியும் அனைவருக்கும் பொருந்தும், எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

அதன் படி இனி பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், மாணவர்கள் இப்படி யாரும் இனி மோடி ஆட்சியின் முட்டாள் தனங்களையும், அதனால் நாடு கற்காலத்தை நோக்கிப் போய் விட்டதையும் யாரும் சுட்டிக்காட்டவோ, இடித்துக் காட்டவோ கூடாது. அப்படி செய்தால் அவர்கள் பல்கலைக் கழகத்திலிருந்து நீக்கப்படுவதுடன் சிறை பிடிக்கவும் படுவார்.

இந்த விதிகள் ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பொருந்தும். இம்சை அரசன் மோடி அரசின் இந்த ஆணையின் படி பல்கலைக் கழகங்கள் குறிப்பாகப் பொருளாதாரத் துறையில் அரசின் கொள்கைகளைப் புகழ் பாடலாமே தவிர, அவற்றினால் நாடு அடைந்த வீழ்ச்சியையோ, நாட்டின் பொருளாதாரம் முற்றாக அழிந்து விடாமல், காப்பாற்றுவதற்கு என்ன செய்யலாம் என்பது பற்றியோ எந்த மாணவரும், ஆசிரியரும், பொருளாதார நிபுணரும் சிந்திக்கக் கூடாது.

இதில் விமர்சனத்துடன் கூடிய ஆராய்ச்சிகள், முடிவுகள் அதனை நிபுணர்களின் அவையில் விவாதிப்பது சீர்தூக்கிப் பார்ப்பது ஆகியவையும் கூடாது.

இனப்படுகொலை புகழ் மோடி அரசு பல்கலைக் கழக மாநில குழு வழி இப்படியொரு அரசாணையைப் பிறப்பிப்பதற்கு காரணம், பணமதிப்பு நீக்க நடவடிக்கைகள் குறித்த பல்கலைக் கழக விமர்சனங்களே!

இதே பணமதிப்பு நீக்க நடவடிக்கைகள், அதனால் உயிரிழந்தவர்கள் வியாபாரங்கள் வீழ்ந்து போனதால் தற்கொலை செய்து கொண்டவர்கள், வியாபரங்கள் தொலைந்து போனதால் தொழிலாளியாகிய முதலாளிகள், பிள்ளைகளின் திருமணங்கள் நின்று போனதால் நொந்து போன குடும்பங்கள் இவற்றை யெல்லாம் அலசி ஆராய்ந்து பல விவாதங்களை நாடெங்கும் நடத்தி ஆங்கிலத்தில் நூல் ஒன்று வந்தது.

அந்த நூலின் பெயர் ***DEMONETIZATION DECODED*** - டி மானிட்டைசேசன் டிகோடர். பணமதிப்பு நீக்கம் வெளி வந்த உண்மைகள். இந்த நூல் 2017ஆம் ஆண்டில் வந்தது. அந்த நூலை எழுதியவர்கள் ***JNU*** என்ற ஜவஹர்லால் பல்கலைக் கழகத்தின் மூன்று பொருளாதார பேராசிரியர்கள்.

இந்த நூல் உலக அளவில் பிரசித்திப் பெற்றதோடு மோடியின் முட்டாள் தனங்களையும், மோசடிகளையும் தோலுரித்துக் காட்டியதில், புகழ் பெற்றது.

இந்தியாவின் பொருளாதார நிபுணர்களும், வெளி நாட்டுப் பல்கலைக் கழக நிபுணர்களும் இந்த நூலை வாங்கிப் படித்தார்கள். மோடியின் மூளையைப் பற்றின விமர்சனங்களும், நூலுக்கான புகழாரங்களும் வந்து குவிந்தன.

இவற்றையெல்லாம் மோடியின் சின்ன மனதால் பொகீத்துக் கொள்ள முடியவில்லை. எனவே தான் பல்கலைக் கழக மாநிலக் குழுவின் மூலம் மேற்படி ஆணையை பிறப்பித்துள்ளார்.

இப்படி அரசியல் நிர்ணயச் சட்டம் வழங்கிய இன்னொரு உரிமை - சிந்தனை உரிமையும் பறிக்கப்பட்டு விட்டது.


பிரபல வரலாற்று ஆசிரியரும், ஆய்வாளருமான ***K.N.*** பணிக்கர் அவர்கள், இது நமது அடிப்படை உரிமையான சிந்திக்கும் உரிமை, நமது சிந்தனையில் உதித்ததைச் செயல்படுத்திடும் உரிமை இவற்றை மட்டும் பறிக்க வில்லை, மாறாக சிந்திக்கும் கலாச்சாரத்திற்கே முற்றுப் புள்ளி வைத்து விட்டது என்கிறார். ***(The Hindu, Eng, 15.10.2018)***

செய்தி ஆதாரம்: பல பத்திரிக்கைகள்
மற்றும் ***The Hindu, Eng, 15.10.2018)***

**MGM**



# தெற்கெல்லை போராட்டத்தில் முஸ்லிம்களின் பங்கு



"கொடிக்கால் ஷேக் அப்துல்லா அவர்கள் இஸ்லாமிய மார்க்கத்தை வாழ்வியல் நெறியாக ஏற்றுக்கொள்வதற்கு முன்னரே நடைபெற்ற தெற்கெல்லை போராட்டங்களின் முன்னணி தளகர்த்தர்களில் முக்கியமானவர். போராட்டத்தின் வீரியத்தை மூலை முடுக்கெல்லாம் கொண்டு சென்று பலமுறை சிறைவாசமும் அனுபவித்தவர்."

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் முதல் தேதி கேரளாவிலிருந்து பிரிந்து தமிழகத்தோடு இணைந்த நாள் அரசு விடுமுறையுடன் விமரிசையாக கொண்டாடப்படுகிறது..

குமரி மாவட்டத்தில் இந்த இணைப்புக்காக நடைபெற்ற தெற்கெல்லை போராட்டத்தில் பங்கு வகித்த முன்னணி தலைவர்கள் நினைவு கூறப்படுவதற்காக நவம்பர் முதல் தேதி பல்வேறு நிகழ்ச்சிகள் குமரி மாவட்டம் முழுவதும் ஆண்டு தோறும் நடைபெறுவதுண்டு.

மார்ஷல் நேசமணி, பொன்னப்பநாடார், குஞ்சன்நாடார் உட்பட நாடார் சமூகத்தின் மறைந்த தலைவர்கள் மட்டுமே ஆண்டு தோறும் நினைவு கூறப்படுவதால் தெற்கெல்லை போராட்டத்தில் முஸ்லிம்கள் உள்ளிட்ட பிற சமூகத்தவர் பங்களிப்பு கடந்த 62 ஆண்டுகளில் கொஞ்சம் கொஞ்சமாக மறைக்கப்பட்டது அப்பட்டமான வரலாற்றுப்பிழை.

1956 க்கு முன்பு வரை திருவிதாங்கூர் சமஸ்தான ஆளுகைக்கு உட்பட்ட குமரி மாவட்ட பகுதிகளில் வாழ்ந்த பிற்படுத்தப்பட்ட சமூக பெண்கள் மார்பை மறைக்க விதிக்கப்பட்ட தடைக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட தோள் சீலை போராட்டம் படிப்படியாக வெவ்வேறு வடிவங்களில் களம் கண்டு தெற்கெல்லை போராட்டமாக உருவெடுத்தது.

வழக்கறிஞர் ஏ.நேசமணி தலைமையிலான திருவிதாங்கூர் காங்கிரஸ் கட்சியின் சார்பில் முன்னெடுத்து சென்ற அனைத்து போராட்டங்களிலும் நேசமணியின் தளகர்த்தர்களாக செயல்பட்டவர்கள் முஸ்லிம்கள் என்பது மறைக்கப்பட்ட உண்மை..

திருவிதாங்கூர் காங்கிரஸ் கட்சியில் முக்கிய பங்கு வகித்து சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினரானவர்களின் பெயர்கள் கூட மறைக்கப்பட்டு நாடார் சமூகத்தவர் மட்டுமே தெற்கெல்லை போராட்டத்தில் பங்கு வகித்தனர் என்ற தோற்றத்தை உருவாக்கி வருகின்றனர்.

போராட்டங்களில் கலந்து திருவிதாங்கூர் ஆட்சியர்களால் கைதுசெய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்கள், தலைமறைவாக இருந்து போராட்டத்துக்கு வலுவான பிரச்சாரம் செய்தவர்கள் ஏராளம்..

**பீர்முகமது**

திருவிதாங்கூர் ஆட்சியாளராக இருந்த பட்டம் தாணுபிள்ளையின் காவல்துறை அடக்குமுறையை கண்டித்து 11.8.1954 ல் புதுக்கடை எனுமிடத்தில் நடைபெற்ற பிரமாண்ட பேரணியை கலைக்க நடைபெற்ற துப்பாக்கி சூட்டில் பலியான ஐந்து பேரில் தேங்காய்பட்டணத்தை சேர்ந்த பீர்முகமது எனும் இளைஞரும் ஒருவர்.



பிற்காலத்தில் புதுக்கடை பேருந்து நிலையம் அருகே காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன் முயற்சியில் நிறுவப்பட்ட தியாகிகள் நினைவு ஸ்தூபியில் இடம்பெற்ற பீர்முகமது பெயர் அழிக்க முடியாத வரலாற்று சான்று..

**எம்.கே.பாவா சாகிப்**

நாகர்கோவிலில் கோட்டாறு சேர்ந்த பாவா சாகிப் திருவிதாங்கூர் காங்கிரஸ் கட்சியின் முக்கிய பிரமுகர்..

இவரது சிறந்த மேடைப்பேச்சு போராட்ட களத்திற்கு வலிமையை ஊட்டியது.

மிகச்சிறந்த எழுத்தாளரான பாவா சாகிப் நடத்தி வந்த "திங்கள்" என்ற பத்திரிகை திருவிதாங்கூர் காங்கிரஸ் கட்சியின் அதிகாரபூர்வ பத்திரிகையாகவே வெளிவந்தது.

அன்றைய ஆட்சியாளர்கள் இவரை கைதுசெய்ய பலமுறை முயற்சித்த போதும் நேசமணியின் அறிவுறுத்தல் காரணமாக தலைமறைவாக இருந்து பத்திரிகையை வெளியிட்டு போராட்ட செய்திகளை மக்களிடம் கொண்டு சேர்த்தவர்.

அனைத்து போராட்டங்களிலும் நேசமணியுடன் இணைந்து களம்கண்ட பாவா சாகிபை எனது வலதுகரம் என்று பிற்காலத்தில் நேசமணி அவர்களால் கவுரவிக்கப்பட்டவர்.

**ஏ.ஏ.ரசாக்**

நாகர்கோவிலில் இடலாக்குடி பகுதியை சேர்ந்த ரசாக் அவர்கள் பிரபலமான வழக்கறிஞர். திருவிதாங்கூர் காங்கிரஸ் கட்சியின் சார்பில் நடைபெற்ற அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்ட நேசமணியின் தளகர்த்தர்களில் முதன்மையானவர்..

சிறைவாசமும் அனுபவித்துள்ள ரசாக் சாகிப் பாராளுமன்ற மேல்சபை உறப்பினராகவும் பதவி வகித்தவர்..

ஏ.நேசமணி நாடார் என்று சாதீய அடையாளத்துடன் போராட்டங்களை ஒருங்கிணைத்தவருக்கு "மார்ஷல்" என்ற பட்டத்தை ரசாக் சாகிப் வழங்கிய பிறகு தான் வரலாற்றில் புகழப்படும் மார்ஷல் நேச மணியானார் என்பது கூட மறைக்கப் பட்டுள்ளது..

தமிழகத்துடன் குமரி மாவட்டம் இணைந்த பிறகு போராட்டத்தின் முக்கிய அம்சங்களை உள்ளடக்கி ரசாக் சாகிப் பதிப்பித்த "நேசமணி - ஒரு சரித்திர திருப்பம்" என்று சுமார் நானூறு



பக்கங்கள் கொண்ட புத்தகம் தெற்கெல்லை போராட்டத்தின் முக்கிய ஆதாரமாக இன்றளவும் விளங்குகிறது.

இவரது பொதுவாழ்க்கையை கவுரவிக்கும் விதமாக இடலாக்குடி பகுதியில் ஒரு சாலைக்கு "ரசாக் ரோடு" என்று பெயரிடப்பட்டுள்ளது...

**என்.ஏ.நூறுமுகமது**

குமரிமாவட்ட முஸ்லிம் சமூகத்தின் மிகச்சிறந்த கல்வியாளர்களில் ஒருவரான சூரங்குடியை சேர்ந்த டாக்டர் என்.ஏ.நூறுமுகமது அவர்களும் தெற்கெல்லை போராட்டங்களில் பங்கு வகித்ததுடன் திருவிதாங்கூர் கொச்சி சமஸ்தான சட்டமன்ற தேர்தலில் கல்குளம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாக பணிபுரிந்தவர்..

**ஷேக் அப்துல்லா**

கொடிக்கால் ஷேக் அப்துல்லா அவர்கள் இஸ்லாமிய மார்க்கத்தை வாழ்வியல் நெறியாக ஏற்றுக்கொள்வதற்கு முன்னரே நடைபெற்ற தெற்கெல்லை போராட்டங்களின் முன்னணி தளகர்த்தர்களில் முக்கியமானவர்.

போராட்டத்தின் வீரியத்தை மூலை முடுக்கெல்லாம் கொண்டு சென்று பலமுறை சிறைவாசமும் அனுபவித்தவர்.

**எஸ். பீர்முகமது**

பிற்காலத்தில் மத்திய மாநில அரசுகளின் நல்லாசிரியர் விருதுகள் பெற்ற மணவாளக்குறிச்சியை சேர்ந்த பீர்முகமது அவர்கள் கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே தெற்கெல்லை போராட்டத்தில் பங்கு வகித்தவர்.

பாளையங்கோட்டை புனித ஜான்ஸ் கல்லூரியில் மேற்படிப்பு படிக்கும் காலத்தில் கூட போராட்டங்களை ஆதரித்து பிரச்சாரம் செய்த காரணத்தால் கல்லூரி நிர்வாகத்தால் விடுதியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்..

**ஷாகுல் ஹமீது**

தெற்கெல்லை போராட்டம் குமரி மாவட்டத்தில் உச்சகட்டத்தில் நடைபெற்ற காலத்தில் பெருமளவு பொருளுதவி செய்தவர் தக்கலை என்.எஸ். குடும்பத்தை சேர்ந்த ஷாகுல்ஹமீது அவர்கள்..

பத்மநாபபுரம் அரண்மனை சாலையில் இருந்த இவர்களது வீடு தலைவர்கள் கலந்துரையாடும் இடமாகவும் பயன்பட்டது..

பிற்காலத்தில் ஷாகுல்ஹமீது அவர்கள் பத்மநாபபுரம் நகர்மன்ற தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

**முகமது கான்**

குளச்சல் பகுதியை சேர்ந்த முகமது கான் என்ற கான் சாகிப் திங்கள்சந்தை பகுதியில் நடந்த போராட்டங்களுக்கு தலைமை வகித்து திருவிதாங்கூர் காவல்துறையால் கைது செய்யப்பட்டவர்.

பிற்காலத்தில்தமிழக அரசு சார்பில் "தெற்கெல்லை போராட்ட தியாகி" என்று அரசு விழாக்களில் கவுரவிக்கப்பட்டவர்.

இவர்களை தவிர குமரி மாவட்டம் முழுவதும் திருவிதாங்கூர் காங்கிரஸ் கட்சியில் தீவிரமாக பங்கு வகித்து போராட்டங்களில் தங்களை அர்ப்பணித்து தெற்கெல்லை போராட்டம் வெற்றி பெற காரணமாக இருந்தவர்கள் ஏராளம் பேருடைய தியாகம் படிப்படியாக மறைக்கப்பட்டு வருவது கவலை தரும் விஷயம்.

மார்ஷல் நேசமணி அவர்களுடன் தோளோடு தோளாக களம் கண்டு சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்களாக பதவி வகித்தவர்களை கூட நினைவு கூற மறுப்பது இனக்காழ்ப்புணர்ச்சி என்றால் மிகையாகாது..

**குளச்சல் ஆசிம்**

தலையங்கம்

# உச்ச நீதிமன்ற தீர்ப்பும்! பக்தர்களும்!!

சபரி மலையில் பெண்கள் நுழைவது கூடாது என்பது, மத நம்பிக்கையின் ஒரு கூறு. அவர்கள் தாங்கள் நம்புகிறவற்றை ஏற்றுக் கொள்வதும், அதை எடுத்து நடப்பதும், அதனை பிரச்சாரம் செய்வதும் இந்திய குடிமக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்று.

ஏதோ இந்தியாவில் மட்டும் தான் இது அடிப்படை உரிமை என்றில்லை. இது உலக மக்கள் அனைவரும் பின்பற்றும், அனுபவிக்கும் அடிப்படை உரிமை. இந்த அடிப்படை உரிமைகளை ஆங்கிலேயர்களிடமிருந்து மீட்டு 70 ஆண்டுகள் தாம் ஆகின்றன. அதற்குள் நமது நீதிமன்றங்கள் தலையிட்டு அந்த உரிமைகளை பறித்து விடுகின்றன.

*(2018 செப்டம்பர் மாத இறுதியில் நமது உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகள் அனைத்தும் ஆதாரம்)*

பாசிச பாரதீய ஜனதா கட்சி ஆட்சியில் அமர்ந்ததும் நீதித்துறையில், பாசிச சிந்தனை உள்ளவர்களையே நியமித்து நீதித்துறையை நிரப்பியது. அதன் பின் அந்த நீதிமன்றங்கள் மக்களுக்கு அரசியல் சாசனம் தந்த உரிமைகளைப் பறிக்கத் தொடங்கி விட்டன.

அப்படித்தான், ஐயப்பன் கோவிலில் கடைபிடிக்கப்பட்ட சாங்கியங்களைத் தகர்த்தது உச்ச நீதிமன்றம். பலர் இந்த தீர்ப்பினை வரவேற்றார்கள். ஆனால் மக்கள் அதனை மெல்ல மெல்ல எதிர்க்கத் தொடங்கினார்கள். இப்போது அந்த எதிர்ப்பு மிகப்பெரிய எதிர்ப்பாக மாறியுள்ளது. உச்ச நீதிமன்றத்திற்கு மறு சீராய்வு மனு செல்லவிருக்கின்றது. ஐயப்பன் கோவிலை பராமரிக்கும் தந்திரிகளை மக்கள் பெரிதாக மதிக்கின்றார்கள். அதனால் அவர்களுக்குப் பின்னால் அணிதிரண்டு நிற்கிறார்கள்.

இப்படி மக்களின் மத நம்பிக்கையில் தலையிட்டு கபளீகரங்களை ஏற்படுத்துவது, இன்றைய நீதிமன்றங்களில் அன்றாட நிகழ்வாக உள்ளன. நீதிமன்றங்களே சட்டமன்றங்களாகவும், நாடாளுமன்றங்களாகவும் மாறி விட்டன.

இன்று நாட்டில் அதிகமாக விவாதிக்கப்படுவது நீதிமன்றங்கள் தாம். சட்டமன்றங்களும், நாடாளுமன்றங்களும் ஒன்றுமில்லாமலாகி விட்டன.

மக்களின் மத நம்பிக்கைகளை எப்படி எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கும், இஸ்லாமே சிறப்பாகவும் தீர்க்கமாகவும் வழிகாட்டுகின்றது. இன்றைய பாசிச பா.ஜ.க. இருக்குமிடத்தில் இஸ்லாமிய ஆட்சியாளர் ஒருவர் இருந்தால் அவர் என்ன செய்திருப்பார்?

முதன் முதலில், இஸ்லாமிய ஆட்சி அழுத்தமான இறை நம்பிக்கை உள்ள ஆட்சி, “அல்லாஹ்” ஒருவனே இறைவன்,

அவனுக்கு ஈடோ, இணையோ இல்லை என்ற அடிப்படையில் அது நிலைகுலையாமல் நிலைத்திருக்கும்.

அதனால் இறைவன் வகுத்து வழங்கிய சட்டங்களைத் தவிர வேறு எந்தச் சட்டங்களையும் அது ஏற்றுக் கொள்ளாது. இறைவன் ஒருவனே என்பதைத்தான் பிரச்சாரம் செய்யும். மக்களை அதன் பக்கம் அழைக்கும். அல்லாஹ்வை ஏற்றுக் கொள்ளாத மக்களை அல்லாஹ்வை ஏற்றுக் கொள்ளும் படி அழைக்கும்.

அதனை வலியுறுத்த வலுவான வாதங்களையும், விளக்கங்களையும் தரும். அவர்களை இஸ்லாத்தின் பக்கம் அழைக்கும். அழைத்துக் கொண்டே இருக்கும். ஆனால் யாரையும் இஸ்லாத்தில் இணையும் படி கட்டாயப்படுத்தாது. இஸ்லாத்தில் நிர்பந்தம், கட்டாயம் என்பவை இல்லை. இல்லவே இல்லை. அல்லாஹ் கூறுகின்றான்.

“லா இஹ்ராஹ் ஃபித்தீன்”, “நிச்சயமாக இஸ்லாத்தில் கட்டாயமில்லை”

தன் கையிலிருக்கும் அதிகாரத்தைக் காட்டி யாரையும் கட்டாய மதமாற்றம் செய்வது என்பது இறைவனால் தடுக்கப்பட்டது.

அதே நேரத்தில், தன் ஆட்சியின் எல்லைக்குட்பட்டவர்களின், மத நம்பிக்கைகள், மத அனுஷ்டானங்கள் ஆகியவற்றில் இஸ்லாமிய ஆட்சி தலையிடவே செய்யாது. அவர்கள் தாங்கள் நம்பிடும் மத நம்பிக்கைகளைத் தாராளமாக நடைமுறைப்படுத்தலாம். அதற்கு அரசு பாதுகாப்பும் வழங்கும். வழங்கியது. எந்த அளவுக்கு அவர்களின் மனங்களை இஸ்லாம் கவர்ந்திருந்தது என்றால், அந்த மக்கள் தங்களுக்கிடையே ஏற்படும், பிணக்குகளிலும், வழக்குகளிலும், இஸ்லாமிய ஆட்சியர்களிடம் தீர்ப்புத் தேடி வந்தார்கள். ஆனால் தீர்ப்புகள் அவர்களின் மதச் சடங்குகளின் படியே அமைந்திட வேண்டும் எனக்கோரினார்கள்.

அது போன்ற வேளைகளில் நீங்கள் உங்கள் மதத்தைச் சார்ந்த நீதிபதிகளிடமே தீர்ப்புகளை வாங்கிக் கொள்ளுங்கள் என அவர்களிடம் சொல்லப்பட்டது. அதற்கு அவர்கள்; எங்கள் நீதிபதிகள், தங்களுக்கு வேண்டியவர்களுக்கு ஒரு நியாயம், வேண்டாதவர்களுக்கு ஒரு நியாயம் எனச் செயல்படுவார்கள். நீங்களோ உங்கள் இறைவனுக்கு அஞ்சுபவர்கள். அதனால் நியாயமானதையே நீதியாக தருவீர்கள். எங்கள் வேதங்கள் படி தீர்ப்பு வழங்கிடவும் நீங்களே உரியவர்கள் என்றனர்.

இந்த மகோன்னத வரலாறு இறைவனின் இறுதித் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் காலத்திலிருந்தே தொடக்கம். அதாவது இஸ்லாமிய ஆட்சியின் தொடக்கக் காலத்திலிருந்தே இது தொடங்கிற்று. தொடர்ந்திற்று.

**அன்றியும், இவர்கள் பொய்யையே அதிகமாகக் கேட்போராகவும், விலக்கப்பட்ட பொருட்களையே விழுங்குவோராகவும் இருக்கின்றனர்; (நபியே!) இவர்கள் உம்மிடம் வந்தால், இவர்களுக்கிடையே தீர்ப்பு வழங்கும்; அல்லது இவர்களைப் புறக்கணித்து விடும்; அப்படி இவர்களை விடுவீராயினும், இவர்கள் உமக்கு யாதொரு தீங்கும் செய்ய முடியாது; ஆனால், நீர் (இவர்களிடையே) தீர்ப்பளிப்பீராயின் நியாயமாகவே அவர்களிடையில் தீர்ப்பளிப்பீராக; ஏனெனில் நிச்சயமாக அல்லாஹ் நீதிமான்களையே நேசிக்கின்றான். (அல் குர்ஆன்: 5:42)**

திருக்குர்ஆனின் இந்த வசனம் பெருமானார்(ஸல்) அவர்களிடம், யூதர்கள் சிலர் ஒரு வழக்கில் தீர்ப்பு வேண்டி வந்ததாகும்.

யூதர்களில் திருமணமான ஒருப் பெண்ணும், திருமணமான ஓர் ஆணும் விபச்சாரத்தில் - கூடா உடலுறவில் ஈடுபட்டு விட்டார்கள். யூதர்கள் அவர்களுடைய மதக் குருக்களிடம் நம்பிக்கை இழந்தவர்களாக, இறைவனின் இறுதித் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களிடம் தீர்ப்பு கேட்டு வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் யூதர்களின் வேதமாகிய தவுராத் வேதத்தின் படி தீர்ப்பு வழங்கிட வேண்டும் என்பது கோரிக்கை.

அதாவது யூதர்களின் நீதிபதிகள் அவர்கள் நம்புவதாகக் கூறிடும் வேதப்படிக் கூட

நேர்மையாக தீர்ப்பு வழங்கிடுவதில்லை. ஆனால் யூத குடிகள் தங்கள் வேதம் தரும் தீர்ப்பை ஏற்றிடத் தயாராக இருந்தார்கள்.

இப்போது யூதர்கள் இறைவனின் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் முன் வழக்கைக் கொண்டு வந்து விட்ட பின், பெருமானார் முஹம்மத்(ஸல்) அவர்கள் தவுராத் வேதம், என்ன சொல்லி இருக்கின்றது என்பதை மக்களிடம் அறிவிக்க, தவுராத் வேதத்தை கொண்டு வரும் படி கூறினார்கள்.

தவுராத் வேதத்தை கையிலே சுமந்து வந்தவர் கொண்டு வந்து விட்டார்கள். அவ்வேதத்தை கொண்டு வந்த யூதர், அவர்களால் - யூதர்களால் பெரிதும் மதிக்கப்பட்டவர். அதில் **"Adultery"** மேற்சொன்ன விபச்சாரத்திற்கு என்ன தண்டனை சொல்லப்பட்டிருக்கின்றது என்பதைப் படிக்கும் படி கேட்டார்கள் இறைவனின் இறுதித் தூதர் அவர்கள்.

தவுராத் வேதத்தை படிக்கத் தொடங்கியவர் விபச்சாரம் குறித்த ஒரு வசனத்தை தன் கையால் மறைத்து விட்டு மீதியைப் படித்துக் காட்டினார்.

முஹம்மத்(ஸல்) அவர்கள், அவரிடம் கையை எடுத்து விட்டு அந்தப் பகுதியைப் படிக்கும் படி சொன்னார்கள். அவரும் கையால் மறைத்த அந்தப் பகுதியைப் படித்தார்.

அதில் விபச்சாரம் செய்தவர்களை கல்லால் அடித்துக் கொல்ல வேண்டும் என்றிருந்தது. இது தவுராத் வேதம் தரும் தீர்ப்பு. இறைவனின் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் அதையே தீர்ப்பாகப் பிரகடனப்படுத்தினார்கள். வேறு வழியின்றி யூதர்கள் அந்தத் தண்டனையை நிறை வேற்றினார்கள்.

இப்படி பெருமானார்(ஸல்) அவர்களின் காலத்திலிருந்தே அதாவது இஸ்லாத்தில் தொடக்கக் காலத்திலிருந்தே சிறுபான்மை மக்கள் தங்களுக்கென தனி வேதத்தையும், வாழ்க்கை நெறியையும் கொண்டவர்கள், அதன் படியே வாழ்ந்தார்கள். அவரவர் வேதம், வாழ்க்கை, வழிமுறை, மத நம்பிக்கை இவற்றின் படி வாழ்ந்திட தாராளமாக சுதந்திரத்தை மட்டுமல்ல பாதுகாப்பையும் தந்த மார்க்கம் இஸ்லாம்.

இங்கே நவீனம் என்ற பெயரிலோ, எங்கள் ஆட்சியின் எல்லையின் கீழிருக்கும் மக்கள் என்ற பெயரிலோ, வேதங்களின் படியும், நாங்கள் போடும் சட்டங்களின் படியும் தான் வாழ்ந்திட வேண்டும் எனக் கட்டாயப் படுத்தாத மார்க்கம் - ஆட்சி முறை, இஸ்லாத்தின் ஆட்சி முறை. இதற்கு வரலாறு நெடுகிலும் சாட்சியங்கள் உண்டு. இந்தியாவிலும் இதற்கென தனி வரலாறு உண்டு.

(விரிவான தகவல்களுக்கு: ***ADMINISTRATION OF JUSTICE DURING THE MUSLIM RULE IN INDIA: 1934 Edition, Re Printed 1977***)

இங்கே இந்நேரம் இஸ்லாமிய ஆட்சி முறை நிலை நிறுத்தப் பட்டிருக்கு மேயானால், ஐயப்ப பக்தர்களான, பண்டாளம், தந்திரி ஆகிய சிறு, மிகச் சிறுபான்மையினர் வீதிக்கு வந்து போராடிட தேவை ஏற்பட்டிருக்காது.

அதே போல் சீக்கிய மக்கள், தாங்கள் போராடிட வேண்டிய நிலையோ, பொற்கோவில் படுகொலைகளோ நடந்திருக்காது.

தலித் மக்கள் தாங்களும் மனிதர்களாக மதிக்கப்பட வேண்டும் என்பதற்காக இத்தனை நாள் போராடி இருக்க வேண்டாம்.

கிருஸ்தவ பெருங்குடி மக்கள் தங்கள் ஆலயங்கள் அழிக்கப்படும் அவலங்களைச் சந்தித்திருக்க மாட்டார்கள்.

இந்து பெருங்குடி மக்கள் அவர்கள் விரும்பாத பொது சிவில் சட்டம், அவர்கள் மீது திணிக்கப்படும் நிலைக்கு ஆளாகி இருக்க மாட்டார்கள்.

பட்டினிச் சாவில் இந்தியாவில் தலை நகரிலேயே ஒரே குடும்பத்தைச் சார்ந்த மூன்று பேர் இறந்திருக்க மாட்டார்கள். உலக அரங்கில் 100வது இடம் என இந்தியா வந்திருக்காது.

இந்த அவலங்கள் ஒழியவும், ஒவ்வொருவரும் அவரவர் மத நம்பிக்கைப் படி சுதந்திரமாக வாழ்ந்திடவும், இங்கே இறைவனின் இறுதித் தூதர்(ஸல்) அவர்கள் காட்டிய வழியில், இஸ்லாம் மக்களை ஆட்சிச் செய்திடும் காலம் வர வேண்டும்.

இதனால் தான் கூறுகின்றோம். இஸ்லாமிய ஆட்சி, இந்தியாவின் அவசரத் தேவை. இன்ஷா அல்லாஹ் அதற்காக உழைப்போம்.

**வைகறை வெளிச்சம் மாத இதழில்**
**சந்தாதாரராக இணைய**
**தொடர்பு கொள்ளவும்**
**+91 81481 29887**



# கவுரி லங்கேசை கொலை செய்தது பரசுராம் வாக்மோர் தான்

பெங்களூரு ராஜராஜேஸ்வரி நகரில் வசித்து வந்தவர் கவுரி லங்கேஷ். பத்திரிகையாளரான இவரை அவருடைய வீட்டில் வைத்து அடையாளம் தெரி யாத நபர்கள் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்துவிட்டு ஓடிவிட்டனர். இந்த சம்பவம் கடந்த ஆண்டு(2017) செப்டம்பர் மாதம் 5-ஆம் தேதி நடந்தது. இந்தியா முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய இந்த படுகொலை குறித்து சிறப்பு விசாரணை குழுவினர் விசாரணை நடத்தி வருகி றார்கள்.

கவுரி லங்கேஷ் கொல்லப்பட்டு ஒரு ஆண்டு நிறைவு அடையும் நிலையில் வழக்கு தொடர்பாக 12 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர். இதில் அமோல் காலே உள்பட 3 பேரை முற்போக்கு சிந்தனை யாளரான நரேந்திர தபோல்கர் கொலை வழக்கு தொடர்பாக சி.பி.அய். அதிகாரிகள் காவலில் எடுத்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

மேலும் கவுரி லங்கேஷ் கொலை வழக்கு சம்பந்தமாக கைதான பரசுராம் வாக்மோர் தான் அவரை துப்பாக்கியால் சுட்டு கொன்று இருக்கலாம் என்று சிறப்பு விசாரணை குழுவினர் கருதினர். இதை உறுதி செய்யும் வகையில் கவுரி லங்கேஷ் கொலை தொடர்பாக கண்காணிப்பு கேமரா காட்சிகளை ஒன்றாக இணைத்து உருவாக்கிய வீடியோவை சிறப்பு விசா ரணை குழுவினர் குஜராத்தில் உள்ள தடயவியல் ஆய்வு மய்யத்துக்காக அனுப்பி வைத்தனர். இதில் கொலையாளி என சந்தேகிக்கப்படும் நபர் ஹெல்மெட் அணிந்து மோட்டார் சைக்கிளில் செல்லும் 6 வினாடிகள் ஓடும் வீடியோவும் அடங்கும்.

மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் நபர் பரசுராம் வாக்மோர் தான் என சந்தேகித்ததால் அவரை மோட்டார் சைக்கிள் ஓட்ட செய்து இன்னொரு காணொலியையும் காவல் துறையினர் பதிவு செய்து ஆய்வுக்காக அனுப்பி வைத்தனர். இந்த 2 காணொலிகளையும் கெய்ட் முறையில் நிபுணர்கள் ஆய்வு செய்தனர். இந்த முறையில் காணொலிகளில் இடம் பெற்றிருக்கும் நபரின் உடல் அசைவுகள் மற்றும் அமைப்புகள் ஒப்பிடப் படுகின்றன. இந்த ஒப்பிட்டு முறையில் தலைக்கவசம் அணிந்து மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரின் உருவம், பரசுராம் வாக்மோருடன் பொருந்தியது. இந்த ஆய்வு அறிக்கை தகவல் தற்போது வெளியாகி உள்ளது.

ஏற்கனவே, கவுரி லங்கேசை சுட்டு கொன்றதாக சிறப்பு விசாரணை குழு வெளியிட்ட வரைபடம் பரசுராம் வாக்மோருடன் பொருந்துவதுடன், கவுரி லங்கேசை துப்பாக்கியால் சுட்ட நபரின் உயரம் 5 அடி 2 இன்ச் என கணக்கிடப்பட்டது. இந்த அம்சமும் பரசுராம் வாக்மோருடன் பொருந்தியுள்ளது.

இதுதவிர, சீகேஹள்ளி வாடகை வீட்டில் பரசுராம் வாக்மோர் தங்கி இருந்ததும், கொலை நடந்த ஒரு மணி நேரத்தில் அவர் வீட்டை காலி செய்த விவரங்களை வீட்டு உரிமையாளர் கொடுத்த தகவல் மூலம் சிறப்பு விசாரணை குழுவினர் அறிந்து கொண்டனர். இந்த நிலையில், தற்போது தடயவியல் ஆய்வு முடிவும் பரசுராம் வாக்மோருடன் பொருந்துவதால், கவுரி லங்கேசை, பரசுராம் வாக்மோர் தான் சுட்டு கொன்றான் என்பதை சிறப்பு விசாரணை குழுவினர் உறுதி செய்துள்ளனர்.

**- நன்றி விடுதலை**

# ❹ இஸ்லாம்

**அரசியல் | அதிகாரம் | அரபுலக எழுச்சி**

1866 ஆம் ஆண்டு உத்திர பிரதேசத்தில் தாருல் உலூம் தியோபந்த் தோற்றுவிக்கப்பட்டது. 1857-இல் நடந்த கலகத்தின் போது, அதில் கலந்து கொண்டவர்களின் ஒரு கூட்டம் ஹாஜி இம்தாதுல்லாவுடன் ஹஜ்ஜிற்கு புறப்பட்டு சென்றது. மற்றவர்கள் முஹம்மத் காசிம் நானோத்வி மற்றும் ரஷீத் அஹ்மத் கன்கோஹியுடன் இந்தியாவில் தங்கி இருந்தனர். அவர்கள் அனைவரும் 30 மே 1866 அன்று சஹரன்பூரில் குழுமி ஒரு மதரசாவை உருவாக்குவது என முடிவு செய்தனர். சட்டாஹ் வலி மஸ்ஜிதின் மாதுளை மர நிழலின் கீழ் மதரசா தொடங்கப்பட்டது.

இன்று வரையிலும் மார்க்க கல்வியை பயிற்றுவிப்பதிலும், குர் ஆன், ஹதீஸ் குறித்த கல்வியை படிப்பதில் உயிரோட்டத்தை வழங்கியதிலும் நபியவர்களின் வாழ்க்கை வழிமுறைகளை மக்கள் மத்தியில் கொண்டு சேர்த்ததிலும் தியோபந்த் மதரசாவின் பங்கு முக்கியமானது. இந்தியாவில் தோன்றிய மார்க்க அறிஞர்கள் இப்பணியை அன்று சிறப்பாக செய்தனர். 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அரபி-பெர்சியா அறிஞரான அலி ஆசாத் பில்கிராமி (1704-86) The Coral Rosary of Indian Tradition என்ற ஆய்வுக் கட்டுரையில் இப்படி குறிப்பிடுகிறார். " அரேபியா ஆன்மிக பீடம் என்றாலும் மார்க்க அறிஞர்களின் குழுமங்களும் மனித கலாச்சாரங்களின் கட்டமைப்புகளும் இந்தியாவில் உறுதியான அடித்தளத்தை கொண்டிருந்தன.

மதரசாவிற்கு நிதிகள் திரட்டப்பட்டன. அதற்கான முதல் உதவியை வழங்கிய ஆசிரியர் முல்லா மஹ்முத் (1851-1920). மதரசாவில் முதல் மாணவனாக சேர்ந்தவரும் மஹ்மூதே. படித்து முடித்த பின், அதே மதரசாவில் ஆசிரியராக பணிபுரிந்த அவர் பிற்காலத்தில் ஷேய்க் அல் ஹிந்த் என அனைவராலும் அறியப்பட்டார். முதல் வருடத்தில் 16 மாணவர்கள் இணைந்தனர். அதற்கு அடுத்த வருடமே மாணவர்களின் எண்ணிக்கை 78 ஆக உயர்ந்தது. 7 நபர்களை கொண்ட சூரா குழுவும் தாருல் உலூமில் உருவாக்கப்பட்டது. சூரா குழுவில் உள்ள அனைத்து நபர்களுமே ஷா வலியுல்லாஹ்வின் மரபை பின்பற்ற கூடியவர்கள். பிரிட்டிஷ் எதிர்ப்பின் மைய தளமாக மாறியது தாருல் உலூம்,

அல் அஸ்கர் பல்கலைகழகத்தின் புகழை நெருங்கும் அளவிற்கு இணையாக வளர்ந்து கொண்டிருந்தது தாருல் உலூம். சில உலமாக்கள் ஆசியாவின் அஸ்கர் என்றே தாருல் உலூமை அழைத்தனர். பாகிஸ்தானில் நிறுவப்பட்டுள்ள பல பாடசாலைகளின் நிறுவனர்கள் தியோபந்தில் கல்வி கற்றவர்களே. காலனிய சக்திகள் அவிழ்த்து விட்ட மத மற்றும் அரசியல் மேலாதிக்கத்தை எதிர்க்கும் இயக்கத்தின் ஒரு பகுதியாகவே தியோபந்த் நிறுவப்பட்டது.

நூறு வருடங்களாக முஸ்லிம்களின் வாழ்க்கையில் செல்வாக்கு செலுத்திய தாருல் உலூம் இன்றும் தனது பணியை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. கல்வியை வழங்கிடும் ஒரு பாடசாலையாக மட்டும் விளங்கிடவில்லை. சிந்தனைவாதிகளின் கூடாரமாகவும் விளங்கியது. தியோபந்தின் பாங்கை பின்பற்றி பல பாடசாலைகள் நிறுவப்பட்டன. சில பாடசாலைகள் தியோபந்தின் கீழ் இயங்கின. மூன்று அடிப்படை துறைகளான குர்ஆன், ஹதீஸ் மற்றும் பகுத்தறிவு அறிவியல் (சட்டம், தர்க்கவியல், தத்துவம்) பற்றி மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதற்கு அடுத்த படியாக பிக்ஹ் துறையில் கவனம் செலுத்தப்பட்டது.

தியோபந்தில் இருந்து கல்வி பயின்று முதல் அணியில் வெளியே வந்த மவ்லான மஹ்முதுல் ஹசன் 1905 ஆம் ஆண்டு தியோபந்திற்கு தலைமை வகித்தார். ஜாமியதுல் அன்சர் என்ற மாணவர்களின் குழுவை ஏற்படுத்தினார். அவர்களை சுதந்திர போராட்டத்திற்காக தயார் படுத்தினார். இப்பணிக்காக அவர் இஸ்லாத்தை

ஏற்ற உபைதுல்லாஹ் சிந்தி என்பவரை அவ்வணியில் சேர்த்தார். உபைதுல்லாஹ் அவர்கள் முஸ்லிம் கல்விமான்களிடம் உரையாடுவதற்காக டெல்லி சென்றார். சுதந்திர விதையை தூவுவதற்காக அவர் காபூல் அனுப்பி வைக்கப்பட்டார். துருக்கி மற்றும் ஆப்கன் உதவியுடன் இந்தியர்களை விடுதலை செய்வதே அவர்களின் திட்டம்.

1967 ஆம் ஆண்டு வரை, கிட்டத்தட்ட 8000 பாடசாலைகள் தியோபந்தை போன்றே உருவாக்கப்பட்டன என்பது தியோபந்தின் பரந்து விரிந்த வெற்றியை பறைசாற்றும் **(Islamic Reform and Modernities in South Asia – Robinson).** தியோபந்த் உருவாக்கப்பட்ட பின்னர் தான் கேள்விகளை பெற்று அதற்கான மார்க்க தீர்ப்பை வழங்கிடும் தாருல் இப்தாவும் தோற்றுவிக்கப் பட்டது. பல சிந்தனை கொண்டவர்களும் அங்கே வந்து தங்களுடைய கருத்துகளை போதித்தனர்.

ஷா அப்துல் அசிஸிற்கும் ஐரோப்பாவை சார்ந்த கிறிஸ்தவர் ஒருவருக்கும் பெருமானாரின் பேரக் குழந்தையை காப்பாற்றுவது தொடர்பாக நடந்த சுவாரஸ்யமான விவாதத்தை யார் தான் மறந்திருக்க முடியும்.

அரேபியன் பெனிசுலாவில் தோன்றிய வஹாபி இயக்க போதனைக்கும் தியோபந்தில் போதிக்கப்பட்ட கல்விக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை. மார்க்க சம்பந்தப்பட்ட விவகாரங்களில் சில கருத்து பரிமாற்றம் இரு அணியை சேர்ந்தவர்களுக்கும் நடைபெற்றது உண்மை தான். ஷா வலியுல்லாஹ்வின் பாடசாலைகளில் பயின்று வந்த உலமாக்களை வஹாபிகள் என்று பிரிடிஷ்ஷார் அழைத்தனர். ஏனெனில் இஸ்லாத்தில் தோன்றிய புதிய நூதனங்களுக்கு எதிராக அவர்களும் முயற்சிகள் மேற்கொண்டனர்.

பிந்தைய நாட்களில், தியோபந்த தனிக் குழுவை போன்று இயங்க ஆரம்பித்தது. ஹனபி சட்டத்தை தீவிரமாக முன்மொழிந்தது. இஜ்திஹாதின் அனைத்து வாசல்களையும் மூடியது.

**அபுல் ஆல மவ்தூதியும் அவரின் ஜமாஅத்தே இஸ்லாமி இயக்கமும்:**

குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் இஸ்லாத்தின் அரசியல் கொள்கையை தொகுத்தளித்தவர்களில் மவ்தூதியும் ஒருவர். 1903 ஆம் ஆண்டு பிறந்த அவர் பிரிவினைக்கு பின் பாகிஸ்தானில் குடிபெயர்ந்தார். ஆரம்ப



கால கட்டத்தில் இந்தியன் நேஷனல் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவாக பல கட்டுரைகளை எழுதியுள்ளார். ஜாமியதி உலமா ஹிந்த் என்ற பத்திரிக்கையின் ஆசிரியர் ஆவதற்கு முன்பு வரை காந்தியை புகழ்ந்துள்ளார், காங்கிரஸ் கட்சிக்காக உழைத்துள்ளார். கிலாபத் இயக்கத்தோடு நெருங்கிய தொடர்பில் இருந்தவர். எனினும் காங்கிரஸ் கட்சியுடன் இருந்த தொடர்பை பிற்காலத்தில் குறைத்து கொண்டார். தேசிய இயக்கங்களில் இருந்து தன்னை முழுமையாக விடுவித்து கொண்டார். தன்னை இஸ்லாமிய மறுமலர்ச்சிக்காக உழைத்திடும் சிற்பியாக மாற்றிக் கொண்டார். இறக்கும்வரை இஸ்லாமிய கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டியே பாடுபட்டார். பல உரைகளை நிகழ்த்தியும், கட்டுரை மற்றும் புத்தகங்கள் எழுதியும் இஸ்லாத்தின் இலட்சியத்தை எடுத்துரைத்தார்.


மதத்திலிருந்து அரசியலை பிரித்தெடுத்து வாழ்ந்து வந்த முஸ்லிம்களை கடிந்து கொண்டார். இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை விட்டு தடம் மாறியதன் விளைவே இத்தகைய மாற்றங்களுக்கு காரணம் என்று கருதினார். பெரும்பாலான தன்னுடைய கட்டுரைகளில் மத சார்பின்மை, ஜனநாயகம் போன்ற கருத்துகளுக்கு எதிராகவே எழுதினார். தேசியவாதத்தை முழுமையாக நிராகரித்தார்.

இஸ்லாமிய அரசை நிறுவ வேண்டும். அதை நிறுவ வேண்டும் என்ற கொள்கையும் நம்பிக்கையுள்ளவர்களையும் கொண்டு மட்டுமே அந்த அரசு வழி நடத்தப்பட வேண்டும். குர்ஆன் சுன்னாவை அடிப்படையாக கொண்டு அது இயங்கும் என்றும் இஸ்லாமிய அரசு குறித்த தன் கருத்தை விளக்கினார். இன்ஷா அல்லாஹ் தொடரும்

**அபூஹாஸின்**

# நீதியரசர் ராஜிந்தர் சச்சார்

## என்றும் மறவா நினைவுகள்




| | |
|---|---|
| நூல் | : நீதியரசர் ராஜிந்தர் சச்சார் - என்றும் மறவா நினைவுகள். |
| தொகுப்பு | : எம்.எச். ஜவாஹிருல்லாஹ் |
| பக்கங்கள் | : 52. |
| விலை | : 25 ரூபாய் |
| வெளியீடு | : மக்கள் உரிமை |
| | நெ.7, வடமரைக்காயர் தெரு, சென்னை - 1. |
| போன் | : 044 - 45564342 |

மறைந்த மர்ஹூம் அண்ணன் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களை நமது "வைகறை வெளிச்சம்" இதழுக்காக பேட்டி எடுக்க சென்றிருந்தேன். அது தீவிரமாக அவர் சமுதாயப்பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்த காலம்.

முதல் கேள்வியே நான் இப்படித்தான் கேட்டேன். " இலக்கியவாதியான கவிக்கோ ஏன் இயக்கவாதி ஆனார்?"

அதற்கவர்;

"சச்சார் கமிஷன் அறிக்கையை வாசித்தேன். இத்தனை ஆண்டுகளாக இந்த நாட்டில் அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கும் இந்த சமுதாயத்திற்காக பணி செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தை என்னிடம் ஏற்படுத்தியதே அந்த அறிக்கை தான்" என்றார்.

இப்படி புத்தகங்களோடு புரண்டு கொண்டிருந்தவர்களையும் அறிவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தவர்களையும் களம் நோக்கி இழுத்துக் கொண்டு வந்த சாதனையைப் படைத்தது அந்த அறிக்கை.

அந்த அறிக்கையின் நாயகன் நீதிபதி ராஜிந்தர் சச்சார்.

"முஸ்லிம்கள் இந்தியாவில் செல்லப் பிள்ளைகளாக நடத்தப்பட்டு வருகிறார்கள்" என்ற பொய்ப் பிரச்சாரத்தை செய்து இதர சமுதாயத்தினரின் இதயங்களில் நஞ்சை விதைத்த ஃபாஸிஸ்டுகளின் முகத்திரையை கிழித்த அறிக்கை அது.

முஸ்லிம்களுக்கு நாங்கள் ஏராளமான சலுகைகளை வழங்கியிருக்கிறோம் என்ற காங்கிரஸின் முகத்திரையையும் சேர்த்தே கிஸீத்தது.

'உங்கள் லட்சணத்தை பாருங்கள்' என்று முஸ்லிம்களுக்கே முஸ்லிம்களை இன்ங்காட்டிய அறிக்கை அது.

சச்சார் அவர்கள் முஸ்லிம்களின் பிரச்சனையை மட்டும் சொல்லாமல் அதற்குரிய தீர்வுகளையும் சேர்த்தே சொன்னார். இறுதி மூச்சு வரை தமது அறிக்கையின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு வாய்ப்புள்ள எல்லா இடங்களிலும் குரல் கொடுத்தார்.

இவை தான் அவரைப் பற்றி அறியப்பட்ட செய்திகள். ஆனால் அவரின் சேவைகள் இந்தியா என்றொரு தேசம் இருக்கும் வரை நினைவு கூறப்பட்டுக் கொண்டே இருக்கும் படியானது என்பதே இந்நூலை படிப்போருக்கு நூல் சொல்லும் செய்தி.

☛ மனித உரிமை மீரல்கள், அரச பயங்கரவாதம், ஃபாஸிசம் ஆகியவற்றுக்கு எதிராகப் போராடுகின்ற மனித உரிமை ஆர்வலர்கள் நேரடியாக அரசியல் களத்தில் குதிப்பதை தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்தியவர் சச்சார். (பக்கம் :09

☛ நீதி அரசராக வீற்றிருந்த காலங்களில் ஒரு மரவார்ந்த **(Traditional)** நீதிபதியாக அல்லாமல் சட்டத்தின் சாரம்சத்துக்குள் சட்டத்தின் வரிகளைக் கொண்டு வர முனைந்தவர். ஒரு நீதிபதியாக நீதியின் தேவைக்காக சட்டத்தை வளைத்தவர். (பக்கம்:12)

இன்றைய நீதிமன்றத்தின் தீர்ப்புகள் ஒழுங்கீனங்களுக்கு பாதை திறப்பனவாகவும் மத நம்பிக்கைகளை அழிக்க முற்படுவனவாகவும் இருப்பதற்குக் காரணம் சட்டத்தின் நோக்கத்தையும் சாரம்சத்தையும் கவனத்தில் கொள்ளாமல் சட்டத்தின் வரிகளை மட்டுமே நீதியாசனத்தில் இருப்போர் கவனிப்பதுதான்.

ஓரினச் சேர்க்கைக்கு அனுமதி, கள்ள உறவு குற்றமல்ல போன்ற அண்மைக்கால தீர்ப்புகள், சச்சாரின் பார்வை இப்போதைய நீதிபதிகளிடம் இருக்க வேண்டிய தேவையை உணர்த்துகிறது.

☛ மேலும் ஏதாவதொரு நாளேட்டில் போலிசின் அட்டூழியம் பற்றிய செய்தியை அவர் படித்தால் **(SUO - MOTU)** தானாக முன் வந்து அந்த போலிசுக்கு எச்சரிக்கை கடிதம் அனுப்புவார். (பக்கம்: 12)

உயர் நீதிமன்றத்தை மண்ணாங்கட்டி என்றும், ம..... என்றும் பேசிவிட்டு வெளியிலே எவரும் நடமாடிக் கொண்டிருக்க முடியாது சச்சார் போன்றவர்கள் தலைமை நீதிபதியாக இருக்கும் மாநிலங்களில்.

☛ அசாமுக்கு அவர் சென்றிருந்த போது யார் வெளிநாட்டுக்காரன் என்பதைக் கண்டுபிடிப்பதில் சிறப்பு அதிகாரங்கள் தொடர்பான சட்டத்தை தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்று சச்சார் கமிட்டியிடம் மக்கள் கூறினர். மக்கள் கூறும் இக்குற்றச்சாட்டை அதிகாரிகள் மறுக்க, "எந்த அளவுகோலின் படி இங்கு வாழும் ஒருவரை வெளிநாட்டிலிருந்து ஊடுருவியவர் என்று முடிவு செய்கிறீர்கள்?" என்று அதிகாரிகளிடம் சச்சார் கேட்கிறார். "லுங்கி, தொப்பி, தாடி இவற்றினடிப் படையில் தான்" என்று ஒப்புக் கொள்கிறார் ஓர் இளம் அதிகாரி. (பக்கம்: 30)

இன்றைய அரசு **(National Register of Citizen) NRC** என்ற உபாயத்தின் மூலம் அஸ்ஸாம் முஸ்லிம்களை ஊடுருவல் காரர்கள் என்று நிரூபிக்க முயலும் அயோக்கியத்தனம் சச்சார் நீதிபதியாக இருந்திருந்தால் தோலுரிக்கப் பட்டிருக்கும்.

☛ மேலும், பாபரி மஸ்ஜித் இடிப்பு வழக்கு குறித்து அவர் சொல்வது,

"என்னைப் பொருத்த வரை பாபரி மஸ்ஜித் வழக்கு சமரசத்திகுரிய ஒன்றல்ல. இந்த வழக்கின் தீர்ப்பு எப்படி இருக்கும் என்று நான் ஆருடம் சொல்ல இயலாது"

"ஆனால் கடந்த கால தீர்ப்புகளின் அடிப்படையில் பார்க்கும் போது முஸ்லிம்களுக்கு சாதகமாகத்தான் வழக்கு உள்ளது"

"1940இல் லாகூர் ஷாஹித் கஞ்ச் வழக்கில் ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலத்தில் இங்கிலாந்தில் செயல்பட்ட உச்ச நீதிமன்றமான பிரிவி கவுன்சில் **(Privy Council)** வழங்கிய தீர்ப்பு உருவாக்கியுள்ள முற்சான்றின் அடிப்படையில் இதை நான் கூறுகிறேன்."

மேலும்,

"பொதுவாக சட்டத்தில் ஒரு சட்டப் பூர்வமான வாரிசு தனது மூதாதையரை கொன்று விட்டால் அவரின் சொத்தை சுவீகாரம் செய்யும் உரிமையை இழந்து விடுகிறார். பள்ளிவாசல் வழக்கில் கூட மிகக் கொடூரமான படுகொலை நடந்துள்ளது. கொலையாளியை அவனது கொடூரமான செயல்பாட்டின் பலனை அனுபவிக்க அனுமதிக்க முடியாது"(பக்கம் :43,44)

இது பாபரி மஸ்ஜித்தை விட்டுத் தரும் அவமானகரமான சமரசத்துக்கு முஸ்லிம்களை கட்டுப்பட வைக்கும் சூழலில் சச்சாரின் தேவையை உணர்த்துகிறது.

இந்தியாவில் வாழும் முஸ்லிம்களுக்கு பொதுத்துறையிலும், உயர் பணிகளிலும் விகிதாச்சாரத்துக்கு ஏற்ப இடங்கள் வழங்கப்பட்டுள்ளனவா? என்பதை கண்டறிய **Equal Opportunity Commission** உருவாக்கப்பட வேண்டும் என்று போராடியவர்.

பொடா சட்டம் வீழ்த்தப்பட பாடுபட்டவர். தான் கொண்ட கொள்கை மறைக்காதவர். 2005 மார்ச் மாதம் சச்சார் கமிஷனின் தலைவராகப் பொறுப்பேற்று 2006 நவம்பரில் 403 (நானூற்று மூன்று) பக்க அறிக்கையை ஒவ்வொரு வாக்கியத்தையும் மிகக் கவனமாக கையாண்டு

தயாரித்து அளித்தவர். 1990இல் காஷ்மீரில் ஜக்மோகன் கவர்னராக இருந்த போது நிகழ்த்திய படுபாதகச் செயல்களை ஊரறியச் செய்தவர். சமரசம் செய்யாத போராளி.

எனினும் இப்படிப்பட்ட தொண்டுகளுக்காக பிரதிபலனை எதிர்பாராமல், ஆத்ம திருப்திக்காக அனைத்தையும் செய்தவர்.

☛ மன்மோகன் சிங் அரசு அவருக்குத் தர விரும்பிய உயரிய விருதான 'பத்ம விபூஷன்' விருதினை வாங்க மறுத்தார். (பக்கம்: 34)

இந்திய முஸ்லிம்கள் மீது பெரும் நெருப்பை அள்ளிக் கொட்ட ஃபாசிஸம் முயற்சித்த போதெல்லாம் தன் கடும் முயற்சியால் அதன் தணலை தணித்தவர்.

இந்நூல் மறைந்த நீதியரசர் ராஜிந்தர் சச்சார் அவர்களுக்குச் செய்யப்பட்ட சிறந்த மறியாதை.

ஆர்ப்பாட்டமின்றி போராட விரும்புவோருக்கு ஊக்கமளிக்கும் நூல்.

பல நுண்ணிய தகவல்களை உள்ளடக்கமாக கொண்ட நூல்.

சச்சார்களின் தேவைகளை உணர்த்தும் நூல். சமூக செயற்பாட்டாளர்கள் அனைவரும் வாசிக்க வேண்டிய நூல்.

ஏப்ரல் 20, 2018 அன்று இவ்வுலகைத் துறந்த சச்சார் நீதிக்கான தேவையின் போதெல்லாம் நினைவு கூறப்படுவார்.

சச்சார் கமிஷனின் அறிக்கை அரசுகளால் ஒதுக்கப்பட்ட போது அதை மக்கள் வெளியில் விவாதமாக்கிய அரும் பணிக்காக அவர் இந்தியா என்றொரு தேசம் இருக்கும் வரை வாழ்வார்.

தபோல்கர், கல்புர்கி, கவுரிலங்கேஷ் என பாசிஸத்தின் கோரப்பற்களுக்கு பலியாகி வரும் சமூக செயற்பாட்டாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் சூழலில் ஃபாஸிசத்திற்கு எதிரான போராளிகளுக்கு இந்நூல் ஊக்கமளிக்கிறது.

ராஜிந்தர் சச்சாருடன் நெருங்கிய பழகிய அவரது தோழர்கள் ஆங்கிலத்தில் தொகுத்த அவரது நினைவுகளை, பேராசிரியர் ஜவாஹிருல்லாஹ் அவர்கள் குறுகிய காலத்தில் தமிழில் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்கள். இது பாராட்டுக்குரிய ஊக்கப்படுத்தப்பட வேண்டிய முயற்சி.

பேராசிரியர்: **கா.மு. இல்யாஸ் ரியாஜி.M.A.,**

# ஆர்.எஸ்.எஸ். பி.ஜெ.பி.யை

## சேர்ந்த தலைவர்களின் வீட்டு நாய்கள் கூட சுதந்திரத்திற்காக உயிர் தியாகம் செய்ததில்லை

### - மல்லிகார்ஜுன கார்கே

இப்படி தான் கிண்டலடித்துள்ளார் மல்லிகார்ஜுன கார்கே அவர்கள். ஆர்.எஸ்.எஸ். மற்றும் பிஜேபியைப் பற்றி இப்படிப்பட்ட நையாண்டி கருத்துகளை கூறுவதில் மிகச்சிறந்தவர் கார்கே அவர்கள்.

மஹாராஷ்டிராவில் ஜல்காவூன் மாவட்டத்தில் காங்கிரஸ்கட்சியின் ஜன் சங்கர்ஷ் யாத்ராவில் பங்கேற்று பேசும் போது தான் மேற்கண்டகருத்தை வெளிப்படுத்தியுள்ளார் கார்கே அவர்கள்.

"நாங்கள் (காங்கிரஸ்கட்சி) இந்த தேசத்திற்காகஉயிர்தியாகம் செய்துள்ளோம், இந்த தேசத்தின் ஒற்றுமைக்காகஇந்திரா காந்தி தன்னுயிரை ஈந்துள்ளார். இந்த தேசத்திற்காகராஜிவ் காந்தி தன்னுயிரை ஈந்துள்ளார். பிஜேபி ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைவர்கள்அல்லஅவர்களின் வீட்டு நாய்களாவது இந்த தேசத்திற்காக தேசத்தின் விடுதலைக்காகஉயிர் தியாகம் செய்துள்ளார்களா? கூறுங்கள் பார்க்கலாம்."

"கூறுங்கள்உங்கள்அமைப்பை சேர்ந்த யார் நாட்டின் விடுதலைக்காக (விடுதலைப்போரில்) சிறை சென்றது?"

இது போன்ற கேள்வியைஅவர் முன் வைப்பது முதல் முறையல்ல. கடந்தவருடம் ஃபெப்ரவரிமாதம் இதே கேள்வியைஅவர் நாடாளுமன்றத்திலும் மோடியை நோக்கிமுன்வைத்தார்.

"காங்கிரஸை சேர்ந்த காந்தி அடிகள், இந்திரா காந்தி போன்றோர் இந்த தேசத்தின் ஒற்றுமைக்காக தன்னுயிரைத் தந்துள்ளனர். உங்கள்சார்பாகயார் இது போன்று உயிர் தியாகம் செய்தது. ஒரு நாயும் கிடையாது" என்று மோடியை பார்த்து கேட்ட கேள்விக்கு இதுவரைபதில் இல்லை.

**(Source - The Times of India - Oct 5 2018)**

**- அபூ அஃப்ரஹ்**

# அன்பகத்தின்

## அன்பான வேண்டுகோள்!

அன்பார்ந்த வாசகர்களே! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

எமது இஸ்லாமியப் பிரச்சாரப் பணிகள் 37 ஆண்டுகளைக் கடந்து, 38ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றன. அல்ஹம்துலில்லாஹ்.

ஒரு நீண்ட நெடும் காலம் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும், எங்கள் பிரச்சாரங்கள் தொடந்து நடந்து வருகின்றன. அல்லாஹ் எங்கள் வழி பல பிரபல்யங்களுக்கு நேர்வழியைக் காட்டினான் அல்ஹம்துலில்லாஹ்.

அப்படி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு இஸ்லாத்தின் செயல்முறைகளையும் இஸ்லாத்தின் அனைத்துப் பகுதிகளையும் கற்றுத் தருவதற்கென மூன்று கல்வி நிறுவனங்களை நிறுவியுள்ளோம். அல்ஹம்துலில்லாஹ்.

இந்த மூன்று நிறுவனங்களிலும் பல்லாயிரக்கணக்கானோர் மார்க்க கல்வியை கற்று சென்றுள்ளார்கள். அவ்வாறு நிறுவப்பட்ட மூன்றாவது கல்விக்கூடமே அன்பகம். அதுவும் தன் 10ஆம் ஆண்டை நிறைவு செய்கின்றது. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே.

இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கல்வி கற்றுச் சென்றுள்ளார்கள். அன்பகம் கடந்த பத்து ஆண்டுகளாக ஒரு வாடகைக் கட்டிடத்தில் தான் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இதையும் அடிக்கடி மாற்றிட வேண்டிய நிலை.

இன்ஷா அல்லாஹ் அதனை ஒரு சொந்தக் கட்டடத்திற்கு மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். அதற்கு உங்கள் நிதி உதவிகளை தாராளமாக வழங்கும் படி அன்புடன் வேண்டுகிறோம்.

அல்லாஹ் உங்களுக்கு அளப்பரிய கூலிகளை வழங்கிடப் போதுமானவன்.

இவண்,

மு. குலாம் முஹம்மது, பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி, ஹாஜி. அப்துல் ரவூஃப்

**செக், டி.டி. அனுப்புவோர்**

**DARUL ISLAM FOUNDATION TRUST**

என்ற பெயருக்கு எடுத்து பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்

52/1, மண்ணடி தெரு, 4வது மாடி, அறை எண் 7, மண்னடி, சென்னை - 600 001.

Please draw your cheques / DD infavour of **DARUL ISLAM FOUNDATION TRUST**
**CANARA BANK A/c. 1287101017301** branch St,mary's Road, R.A.puram, Chennai.
and send to: 52/1, Mannady Street, 4th Floor, Room No.7, Mannady, Chennai-600001
**Mobile : 81481 29887,** website: www.darultrust.in, Email: darultrust@yahoo.com,

# சிலுவைப் போர்

# 2.0

## அந்த அதிர்ச்சிகள்.



அமெரிக்காவின் இரட்டை கோபுரங்கள் தகர்க்கப்பட்டது. அதில் பல்லாயிரக்கணக் கானோர் உயிரிழந்தார்கள். இவர்களைக் கொண்டுதான் நாங்கள் (சிலுவைப் போர் 2.0 வின் தளகர்த்தர்கள்) அமெரிக்கா மக்கள் மீது உலகின் அனுதாபத்தையும், முஸ்லிம்கள் மீது உலகில் கோபத்தையும் உருவாக்கி வருகின்றோம்.

இதில் நாங்கள் பல முனை தாக்குதல்களை நடத்தி வருகின்றோம். இந்த முயற்சியில் உலகெங்குமிருந்து சமூக ஆர்வலர்களை அமெரிக்காவுக்கு அழைத்து (9/11) அமெரிக்காவின் இரட்டை கோபுரங்கள் தகர்க்கப்பட்ட போது உயிரிழந்தவர்களின் கல்லறைகளைக் காட்டினோம்.

அந்தக் கல்லறைகளைத் தரிசிக்கும் அவர்கள் உலகெங்கும் சென்று, அமெரிக்காவின் மீது அனுதாபத்தையும், முஸ்லிம்களின் மீது வெறுப்பையும் உற்பத்தி செய்திட வேண்டும் என்பதே நோக்கம். இதில் முஸ்லிம் சமூக ஆர்வலர்களையும் அதிகமாக கலந்துக் கொள்ளச் செய்தோம். கலந்து கொண்டார்கள்.

சமூக ஆர்வலர்களைத் தொடர்ந்து உலகெங்கிலுமுள்ள பத்திரிகையாளர்களை அமெரிக்காவிற்கு சுற்றுலா என்ற பெயரில் இலவசமாக அழைத்து வந்தோம். அவர்களை அன்போடு உபசரித்தோம். அதே (9/11) கல்லறைகளைக் காட்டினோம். கண்ணீர் கதைகளைக் கட்டவிழ்த்து விட்டோம்.

அதேப்போல் அமெரிக்காவையும் சுற்றிக் காண்பித்தோம். அவர்களுக்கு 9/11 பற்றிய சிறப்பு வகுப்புகளையும், சிறப்பான உரைகளையும், கருத்தரங்கங்களையும் ஐந்து நட்சத்திர விடுதிகளில் (5 star) ஏற்பாடு

> “சென்ற இரண்டு இதழ்களில், அமெரிக்காவும், அதன் பின் அணி வகுத்து நிற்கும், ஐரோப்பிய நாடுகளும், ஏன் இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் தாக்கு கின்றார்கள்? இதற்கான காரணங்களை அவர்களின் ஆய்வுகள், அறிக்கைகள், திட்டங்கள் இவற்றிலிருந்தே எடுத்துக்காட்டி வருகின்றோம்.
>
> அமெரிக்காவும், அதன் பின் அணிவகுத்து நிற்கும், ஐரோப்பிய நாடுகளும், அச்சப்படுவது, Mainstream Islam–பொதுத்தள இஸ்லாம் என்பதை John Feffer–ஜான் பெப்பர் தனது சிலுவைப் போர் 2.0 என்ற நூலில் குறிப்பிட்டார்.”

செய்தோம். இப்படியெல்லாம், பணத்தை அள்ளி இறைத்து அவர்களை உபசரித்து - உபவாசக் கதைகளைக் கட்டவிழ்த்திட செய்து அவர்கள் தங்கள் நாடுகளுக்குச் சென்று, அச்சு ஊடகங்கள், காட்சி ஊடகங்கள் வழி தங்கள் நாட்டு மக்களிடம் அமெரிக்கா மீது அலாதியான அன்பு இரக்கம் ஆகியவற்றை வளர்க்க வேண்டும். முஸ்லிம்களை உலக மகா வில்லன்களாக காட்டிட வேண்டும். அவர்களை மக்கள் வெறுத்திட வேண்டும் என்பதே எங்கள் முயற்சி.


இதில் ஏராளமான முஸ்லிம் பத்திரிக்கையாளர் களையும் கலந்துக் கொள்ளச் செய்தோம். அலாதியான ஆர்வமுடன் வந்தார்கள்.

இப்படி மக்களின் மேல் அக்கறைக் கொண்டவர்கள், மக்களோடு தொடர்புடையவர்கள் அனைவரையும் அமெரிக்காவுக்கு அழைத்து வந்தோம்.

ஏன்? முஸ்லிம்களிலுள்ள மார்க்க அறிஞர்களையும் அழைத்து வந்தோம். அவர்களை இலவச அமெரிக்க சுற்றுப் பயணம் என்ற பாங்கில் அழைப்புகளை அனுப்பி எங்கள் தூதரகங்கள் வழி அவர்களை ஒருங்கிணைத்து அழைத்து வந்தோம்.

நாங்கள் அள்ளித் தெளித்த விருந்தோம்பலில் அவர்களைக் கவர்ந்தோம். 9/11 கல்லறைகளை அவர்களைக் கொண்டு சிறப்புப் பிரார்த்தனைகளை ஏற்பாடுச் செய்தோம். சோகக் கதைகளால் அவர்களின் இதயங்களை கனத்துப் போகச் செய்தோம். அத்தோடு அமெரிக்காவை உல்லாசமாக சுற்றி வரச் செய்தோம்.

இவர்கள், தங்கள் இல்லங்களுக்குச் சென்று தங்களில் ஒரு சாரார் தறுதலையாகச் செயல்பட்டார்கள் என்பதை எடுத்துச் சொல்லிட வேண்டும். முஸ்லிம் தீவிரவாதிகள்




இருக்கத்தான் செய்கிறார்கள் எனப் பிரச்சாரம் செய்திட வேண்டும் என்பதே இலக்கு. இவர்கள் அமெரிக்காவிலிருந்து திரும்பிச் செல்லும் போது ஏராளமான பரிசுப் பொருள்களையும் கொடுத்தனுப்பினோம்.

இப்படி நாங்கள் மேற்கொண்ட முயற்சிகள் பலன் தரவில்லை எனச் சொல்லிட இயலாது. உலகெங்கும் முஸ்லிம்கள் தீவிரவாதிகள், இஸ்லாம் தீவிரவாதத்தைப் போதிக்கும் மார்க்கம் என்ற பிரச்சாரம் ஓங்கியது.

நாங்கள் தொடர்பில் வைத்திருந்த உலமாக்கள், இதனை எதிர்க்கவில்லை. ஓரமாய் ஒதுங்கி நின்றார்கள். ஆனால் அமெரிக்க முஸ்லிம்கள் மிகவும் பொறுமையுடனும், தெளிவான திட்டங்களுடனும் இதனை எதிர் கொண்டார்கள்.



அதில் ஒன்று தான் **CENTER FOR INTERFAITH DIALOGUE** - மதங்களுக்கிடையேயான பேச்சு வார்த்தைகளுக்கான மையம்.

இந்தத் திட்டத்தை அகழ்ந்தெடுத்த போதுதான் அந்த அதிர்ச்சியான தகவல்கள் வெளிப்பட்டன.

(இந்தக் கட்டத்தின் இதர விபரங்களை வைகறை வெளிச்சம் செப்டம்பர் 2018 மாத இதழில்









# அமெரிக்காவில் நடக்கும் மதங்களுக்கிடையேயான பேச்சு வார்த்தைகள்



*குறிப்பிட்டிருந்தோம்)*

**அவை:**

☛ 9/11 என நாங்கள் அடையாளப் படுத்திடும் நிகழ்வு, 2001ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 9ஆம் நாள் உலக வர்த்தக மையத்தின் மீது நடந்த தீவிரவாத தாக்குதல்கள் பற்றிய நினைவுகள் அமைந்த அந்த இடத்தை வந்து பார்த்தவுடனேயே அமெரிக்காவின் மீது அனுதாபமும், முஸ்லிம்கள் மீது வெறுப்பும் ஏற்படும். ஆனால் இவர்களின் - முஸ்லிம்களின் திட்டப்படி அந்த இடத்தில் எதிர்காலத்தில் ஒரு பள்ளிவாசல் - மஸ்ஜித் நிற்கும்.

என்ன இவர்கள் ஒரு பள்ளிவாசல் நிற்கும் இடத்தை, தீவிரவாதத் தாக்குதல் நடந்த இடம் என்கிறார்களே! என ஐயப் படுவார்கள். அல்லது குழப்பத்தில் வீழ்வார்கள்.

இனி, அந்த இடத்தில் நிற்கும் அடுக்குமாடி கட்டடத்திற்குள் நுழைவார்கள் என்றால், அங்கே (9/11இல்) இறந்தவர்களின் நினைவிடம் செல்வார்கள். அந்த நினைவரங்கம் 9/11 - நிகழ்வு யாரால் நடந்தது என்ற ஐயங்களை எழுப்பும். (அமெரிக்க உளவுத்துறையின் உள்ளிருப்பு வேலை என்பதே உண்மை என்பதைச் சொல்லாமல் சொல்லும்.(மொ.ர்)

அடுத்து மதங்களுக்கிடையேயான பேச்சுவார்த்தை மையத்திற்குச் செல்வார்கள் என்றால் அங்கே அவர்கள் இஸ்லாம் தீவிரவாதத்தைப் போதிக்கும் மார்க்கம் அல்ல. முஸ்லிம்கள் தீவிரவாதிகள் அல்ல என்பனவற்றை நம்ப வைத்திடும் அளவில் பேச்சு வார்த்தைகளைச் செவிமடுப்பர். இந்த வகையில் இடம் பெற்ற நூல்களைப் படிப்பார்கள்.

அங்கே வந்துச் செல்லும் நூற்றுக் கணக்கான முஸ்லிம்கள், அமைதி, அன்பு,சாந்தம், சத்தியம் இவற்றின் பிரதிபலிப்பாக இருப்பார்கள்.

*(கிரவுண்ட் ஜீரோ பள்ளிவாசலில் 1200 பேர் தொழுதிட இயலும். ஜும்மா தொழுகைகளில் 1200 பேர் தொழுதுச் செல்கிறார்கள். (மொ.ர்)*

☛ எங்களை - (அமெரிக்க உளவுத்துறை அதற்குப் பக்கப்பலமாக நின்று சிலுவைப் போர் 2.0 வை நடத்திக் கொண்டிருப்பவர்




களை) அதிர்ச்சியில் ஆழ்த்திய அடுத்த நிகழ்வு என்னவெனில், இவர்கள் இந்தக் கட்டடத்தை திறப்பதற்கு குறித்த நாள் 9/11/2011. அதாவது செடம்பர் திங்கள் ஒன்பதாம் நாள் இரண்டாயிரத்துப் பதினொன்றாம் வருடம். அதாவது 9/11 நடந்து (2001) சரியாகப் பத்தாண்டு களுக்குப் பின், அந்த இடத்தில் (முஸ்லிம் தீவிரவாதம் என்று அடையாளப் படுத்தப்பட்ட இடத்தில் ஒருப் பள்ளிவாசல் - மஸ்ஜித் நின்றிட வேண்டும் என்பது அவர்களின் திட்டம்.

அமெரிக்க முஸ்லிம்களின் இந்த நெஞ்சுரம் எங்களைத் திகைக்க வைத்தது. நாங்கள் சற்றே தளர்ந்து போனோம். இஸ்லாத்திற்கெதிராகவும், முஸ்லிம்களுக்கெதிராகவும் எடுத்த முயற்சிகளை விட்டு விடாமல், உலக



அரங்கில் நாங்கள் திட்டமிட்டிருந்த சிலுவைப் போர் 2.0 ஐ தொடுத்திடவோ, தொடர்ந்து நடத்திடவோ இயலாது.

*அதனால், அந்த மஸ்ஜித் திட்டத்தைத் தடுத்தே ஆக வேண்டும். தடுத்தால் மட்டும் போதாது தவிடுபொடியாக்கிட வேண்டும் என முடிவு செய்தோம். அதற்கான முயற்சிகளை மேற்கொண்டோம்.*

*எங்கள் முயற்சியின் முதற்கட்டமாக, இந்தப் பள்ளிவாசல், கிரவுண்ட் ஜீரோ மஸ்ஜித்தைப் பற்றிய எல்லாத் தகவல்களையும் கையகப்படுத்திட வேண்டும் என்பதையும், அதில் அமெரிக்க இராணுவ தலைமையகமான பெண்டகனை முழுமையாகப் பயன்படுத்துவது எனவும் முடிவு செய்தோம்.*

*ஆகவே பெண்டகனிடம், முதன் முதலில் இந்த மஸ்ஜித் திட்டத்தில் யார் யார் செயல் படுகிறார்கள், எந்தப் பெயரின் கீழ் இது நடைபெறுகின்றது, இது தனி நபர் பணமா? அப்படியானால் அவர் யார்? அவர் சொந்தப் பணத்தில் இந்தக் கட்டிடத்தை எழுப்புகின்றாரா? ஏதாவது வெளிநாட்டு நிறுவனங்களோ, அரசுகளோ, அமைப்புகளோ, இதற்கு பணம் தருகின்றதா? என்பனவற்றையும், இந்த மஸ்ஜித் திட்டத்தை செயல்படுத்திடு வோரை என்ன செய்தால் இந்த திட்டத்தை அடியோடு நிறுத்தலாம் என்றத் தகவல்களை திரட்டித் தரும் படி ஏவினோம்.*

*அவர்கள் தந்த முதல் தகவலே எங்களை வெட்கி நாணி தலைகுனிய செய்தது. வெறுப்படையச் செய்தது - என்னே விரக்தி!*

*அந்தத் தகவலை அடுத்த இதழில் பார்ப்போம். இன்ஷா அல்லாஹ்.*

**MGM**

**வைகறை வெளிச்சம் வாசகர்கள் தங்களது சந்தாக்களை புதுப்பித்துக் கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.**

**+91 81481 29887**



தொடர் 6

# முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி(ரஹ்)

> “அந்த நேரத்தில் ஆச்சரியப்படும் வகையில் ஃபிரான்குகளின் கைகளில் பல இடங்கள் சென்று விட்டிருந்தன. அவர்களின் படை வீரர்களின் எண்ணிக்கையும் வெகு வேகமாக பல்கி பெருகி இருந்தன. அவர்களின் பலமும் அதிகாரமும் உச்சத்தில் இருந்தன. அவர்கள் முஸ்லிம்களின் நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தனர். அதனை தடுக்க திராணியற்று முஸ்லிம்கள் இருந்தனர்.”

**முஹம்மதிப்னு மாலிக்ஷாவின் மரணம்**

நூருத்தீன் மஹ்மூத் இப்னு ஸங்கி ஹிஜ்ரி 511இல் அதாவது கி.பி. 1117-இல் பிறந்தார். இந்தவருடத்தில் சில முக்கியமான நிகழ்வுகள் நிகழ்ந்தன.

ஒன்று மொசூலுக்கு அருகில் உள்ள சின்ஜார் எனுமிடம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. இந்த வெள்ளத்தில் பல திறமையான நீச்சல் வீரர்கள் எல்லாம் மூழ்கிஇறந்தார்கள். ஆனால் அந்த வெள்ளம் ஒரு குழந்தையை மட்டும் தொட்டிலுடன் அடித்து சென்று ஒரு மரக்கிளையில் மாட்டி விட்டது. பின்னர் வெள்ளம் வடிந்தவுடன் அந்த குழந்தை உயிருடன் மீட்கப்பட்டது.

மற்றொன்று இர்பில் என்ற இடத்தையும் அதன் சுற்றுவட்டாரத்தையும் பலமான நிலநடுக்கம் தாக்கியது.

இந்தவருடத்தின் துல்ஹஜ் 24ம் பிறையில் சுல்தான் முஹம்மதிப்னு மாலிக்ஷா இறந்தார். அவருக்கு வயது 37 வயது. ஆரம்பத்தில் அவருடைய ஆட்சி சிக்கலானதாகவே இருந்தது. அவருடைய சகோதரர் தக்யாருக் இறக்கும் வரை

அவர் மாலிக்ஷாவிற்கு சவாலாகவே இருந்தார்.

அவருடைய சகோதரர் மறைவுக்கு பின்னர் அவர் தனியாக 12 வருடங்கள் 6 மாதங்கள் மன்னராக இருந்தார்.

அவர் ஒரு நேர்மையாளர், நீதிமான். அவருடைய ஆட்சியின் கீழ் இருந்த பலவரிகளை நீக்கினார்.

**முஹம்மதிப்னு மாலிக்ஷா மகன் மஹ்மூத்**

சுல்தான் முஹம்மதிப்னு மாலிக்ஷா இறந்ததன் பின்னர் அவர் மகன் மஹ்மூத் ஆட்சிக்கு வந்தார். அப்போது அவருக்கு வயது 14. அவருக்கும் அவருடைய மாமா சின்ஜார் என்பவருக்கும் இடையில் போர் நடந்தது. அதில் மஹ்முத் தோற்றார். இருப்பினும் அவருடைய மாமா எந்தவித நிபந்தனையுன்றி மஹ்மூதை ஆட்சிக்கு திரும்ப அனுமதித்தார்.

மஹ்மூத் சுல்தானாக இருந்த போது அவர் தன் சகோதரர் மசூதை மொசூலின் ஆட்சியாளராக நியமித்தார். அவருக்கு துணையாக ஹப்பூஷ் என்பவரையும் அனுப்பி வைத்தார்.

**சகோதர சண்டை**

ஹிஜ்ரி 514வரை அதாவது கி.பி 1120 வரை மசூத் தன் சகோதரர் மஹ்மூதுக்கு அடிபணிந்து நடந்தார். பின்னர் அவர் தனியாக ஆட்சி செய்ய விரும்பினார். சுல்தானாக ஆசைப்பட்டார். எனவே அவர் சுல்தானுக்கு எதிராக கிளர்ச்சி செய்தார்.

இமாதுத்தீன் ஸங்கி அவர்கள் இந்த விஷயத்தில் சகோதரர்கள் சண்டையிடக் கூடாது, சுல்தானுக்கு எதிராக கலகம் செய்வது கூடாது என நினைத்தார். ஒருபடி மேலே சென்று அவர் மசூதை எச்சரிக்கவும் செய்தார். ஆனால் அவர் கேட்கவில்லை. இரண்டு சகோதரர்களும் போரிட்டார்கள். கடைசியில் மசூத் தோற்றார். அவருக்கு ஆதரவாக சண்டையிட்ட பல குறுநில மன்னர்களும் பிரபுக்களும் கைது செய்யப்பட்டார்கள்.

இப்போது மசூதும் ஹப்பூஷூம் சுல்தானிடம் மன்னிப்பு கோரினார்கள். உயிர் உத்தரவாதம் கேட்டார்கள். அதற்கு பதிலாக மொசூலையும் அதன் அருகில் இருந்த அல்ஜஸீரா, சின்ஜார் மற்றும் நஸீபைனை விட்டுத் தர ஒப்புக் கொண்டார்கள்.

**அல்பர்சுகி**

இதன்படி சுல்தான் அவர்கள் அல்பர்சுகி என்பவரை இமாதத்தீன் ஸங்கி அவர்களுக்கு பாதுகாப்பாகவும் அவருடைய கருத்துகளை கேட்டு நடக்கும் படியும் கட்டளையிட்டு இந்த இடங்களுக்கு சுல்தான் அனுப்பினார்.

அல்பர்சுகி அவர்களுக்கு ஸங்கியின் வீரத்தை பற்றியும் தெரியும். அவர்களின் விவேகத்தைப் பற்றியும் தெரியும். அவரின் தந்தையின் கண்ணியத்தைப் பற்றியும் தெரியும். எனவே, அவர் சுல்தானின் கட்டளைப்படியே நடந்தார்.

ஹிஜ்ரி 520இல் கி.பி 1126இல் அக்சுன்கூர் அல்பர்சுகி மொசூலில் வெள்ளிக்கிழமையன்று தொழுகையை முடித்துவிட்டு வரும் போது கொலை செய்யப்பட்டார்.

**பர்சுகியின் வீரம்**

அவரை அல்பத்தினியா என்ற கூட்டத்தை சேர்ந்த 10 நபர்கள் தாக்கினார்கள். வீரம் செறிந்த அல்பர்சுகி அவர்கள் கொலை கூட்டத்தை சேர்ந்தவர்களின் 3 பேரின் கதையை முடித்து விட்டார். ஆனாலும் பர்சுகியும் கொல்லப் பட்டார்.

அல்பர்சுகியும் ஒரு நேர்மையாளர், நீதிமான். இரவு நேரங்களில் நீண்ட நேரம் நின்று வணங்கக் கூடியவர். இவரிடம் குறிப்பாக ஒரு செயல் வழமையிலிருந்தது. இவர் தொழுகைக்கு ஒளு செய்ய யாரிடமும் எந்த உதவியையும் கேட்க மாட்டார். அதாவது இறைவனை வணங்க தேவையானவற்றை எவரின் உதவியுமின்றி அவரே நிறைவேற்றுவார்.

பர்சுகி கொலை செய்யப்பட்ட செய்தியறிந்த சுல்தான், பர்சுகியின் மகன் இஸ்ஸூதீன் மசூத் அவர்களுக்கு பர்சுகிஅவர்கள்ஆட்சிசெய்த மொசூலையும் அதன் அருகில் இருந்த அல்ஜஸீரா, அலெப்போ, ஹமா மற்றும் இப்னு உமர் தீவு போன்றவற்றை தந்து ஆட்சியாளராக்கினார்.

இஸ்ஸூத்தீன் அவர்கள் சிறுவராக இருந்தாலும் மிகப் பொறுப்புடன் திறமையாகவும் தன் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளை ஆட்சி செய்து வந்தார். இருப்பினும் சிறிது காலத்திலேயே அவர் இறந்து விட்டார். ஹஜ்ரி 521இல் அதாவது கி.பி. 1127இல் அவர் இறந்தார். அவருக்கு பின் அவருடைய தம்பி ஆட்சிக்கு வந்தார். அவருக்கு தந்தையின் துருக்கிய அடிமை வம்சத்து மன்னரான ஜவ்லி என்பவர் உதவி வந்தார்.

**இமாதுத்தீன் ஸங்கிக்கு கிடைத்த வாய்ப்பு**

இஸ்ஸூத்தீன் அவர்களின் தம்பிக்கு ஜவ்லி உதவி செய்து வந்தார். ஜவ்லி அவர்கள் சுல்தான்



மஹ்மூதுக்கு ஒரு செய்தி அனுப்பினார். அதில் தன்னை ஆட்சியாளராக அங்கீகரிக்கும் படி கோரி இருந்தார். இந்த செய்தியை கொண்டு சென்றவர்கள் நீதிபதி பஹாவுத்தீன் அபுல் ஹசன் அலி இப்னு அஷ்ஷஹ்ராசுரியும் சலாதீன் முஹம்மதல் யஃக்பிஸானி அவர்களும்.

அவர்கள் ஜவ்லிக்காக செய்தியை பக்தாதிற்கு சுல்தானிடம் கொண்டு வந்து விட்டார்கள். ஆனால் அவர்களுக்கு ஜவ்லி அவர்களின் ஆட்சியில் திருப்தி இல்லை. அவர்கள் ஜவ்லியின் மீது அச்சம் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் சுல்தானின் வாயிற்காப்பாளனிடம்,

“ஃபிரான்குகள் (ஜெர்மானியர்கள்) அல்ஜசீராவையும் லெவான்தையும் ஆக்கிரமித்துள்ளார்கள் என்பது நீயும் சுல்தானும் அறிந்ததே.”

“ஃபிரான்குகள் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வருகிறார்கள். வலிமையடைந்து கொண்டே இருக்கிறார்கள். அல்பர்சுகி ஃபிரான்குகளுக்கு மிகப் பெரிய சவாலாக இருந்தார். ஆனால் அவரின் மரணத்திற்கு பின்னர் ஃபிரான்குகள் வளர்ந்து விட்டார்கள். அவருடைய மகன் இன்னும் சிறுவனாகவே இருக்கிறான்.”

“எனவே, இஸ்லாத்தை நிலை நாட்டவும் அதன் நிலங்களை பேணிப் பாதுகாக்கவும் வீரமிக்க வலிமையான ஒருவர் தேவைப்படுகிறார்.”

“நாங்கள் இந்த செய்தியை எத்தி வைத்து விட்டோம். எனவே முஸ்லிம்கள் பலவீனப் பட்டாலோ அல்லது தோற்கடிக்கப் பட்டாலோ நாங்கள் பொறுப்பாக மாட்டோம். மேலும் இதை நாங்கள் சொல்வதற்கான காரணம் இந்த உண்மைகளை கேள்விப் பட்டால் சுல்தானும் கோபித்து கொள்ள மாட்டார் என்பதாலேயே” என்று கூறினார்கள்.”

**ஸங்கி வருகிறார்...**

வாயிற்காப்பாளன் இந்த செய்திகளை சுல்தானிடம் அப்படியே சென்று கூறினான். அவரும் இந்த வார்த்தைகளில் உள்ள உண்மைகளை உணர்ந்து ஆச்சரியப்பட்டவராக “அப்படியானால் அந்த இடத்திற்கு மிகவும் தகுதியானவர் யார் என்று நினைக்கிறீர்கள்” என்று கேட்டார்.

அவர்கள் இமாதுத்தீன் ஸங்கி அவர்களையும் இன்னும் சிலரையும் பரிந்துரைத்தார்கள். அதில் இமாதுத்தீன் ஸங்கி அவர்களைப் பற்றி மிகவும் சிலாகித்து கூறி இருந்தார்கள்.

சுல்தானும் இமாதுத்தீன் ஸங்கி அவர்களின் வீரம், திறமையின் காரணமாக அவரை ஆட்சியாளராக அமர்த்த ஒப்புக் கொண்டார்.



இப்படியே அவர்களுடைய இராஜ்ஜியம் மர்தீனிலிருந்து எகிப்தின் அல் அரீஷ் வரை பரவி விட்டது. இப்போது முஸ்லிம்கள் வசம் அலெப்போ, ஹமா, ஹிம்ஸ் மற்றும் டமாஸ்கஸ் மட்டுமே இருந்தன. ஃபிரான்குகளின் முகாம்கள் பக்ரிலிருந்து அமித் வரையிலும் அல்ஜசீராவிலிருந்து நசீபைன் வரையிலும் ராஸல் அய்ன் வரையிலும் விரிவாகி விட்டிருந்தது.

அவர்கள் அர்ரக்காஹ் மற்றும் ஹர்ரான் பகுதி மக்களை கொடுமை செய்து கொண்டிருந்தனர். ஃபிரான்குகள் டமாஸ்கசுக்கு செல்லும் அர்ரஹ்பாஹ், அல்பர் சாலைகளை தவிர்த்து மற்ற அனைத்து சாலைகளையும் அழித்து விட்டிருந்தனர். அதனை சுற்றியிருந்த பகுதிகளை ஆக்கிரமிக்கக் கூடாது எனில் தங்களுக்கு வரி செலுத்த வேண்டும் எனக் கூறி வரி வசூலித்துக் கொண்டிருந்தனர்.

இதையும் தாண்டி அவர்கள் டமாஸ்கசுக்கு நேராக சென்று அங்கு சிறைப்பட்டிருந்த ரோம, அர்மேனிய மற்றும் மற்ற கிறித்தவ நாடுகளின் அடிமை கைதிகளை விடுவித்து அவர்கள் விரும்பிய படி செய்து கொள்ளலாம் என அறிவித்தனர்.

இதன் படி சில அடிமைகள் தங்கள் எஜமானருடனே தங்கி விட்டனர். சிலர் தங்கள் நாடுகளுக்கு திரும்பி விட்டனர்.

ஃபிரான்குகள் அலெப்போவின் பாதி நகரத்தை கைப்பற்றி விட்டனர். லெவான்தின் மற்ற பகுதிகள் இப்படியே சுருங்கிக் கொண்டே வந்தது.

இந்த நேரத்தில் தான் ஸங்கி(ரஹ்) அவர்கள் ஃபிரான்குகளுக்கு எதிராக தன் தாக்குதலை தொடங்கினார். ஆனால் அது அவ்வளவு சுலபமானதாக இருக்கவில்லை.

இதன் பின்னர் இமாதுத்தீன் பாக்தாதை விட்டு மொசூலுக்கு புறப்பட்டார். ஜவ்லி இமாதுத்தீனை சந்தித்தார். அவருடைய உதவியாளராக இமாதுத்தீனுடன் திரும்பினார். ஸங்கி ஜவ்லியை அர்ரஹ்பாஹ் என்ற இடத்திற்கு அனுப்பி வைத்தார். ஸங்கி மொசூலிலேயே தங்கினார். அவர் அங்குள்ள சூழ்நிலைகளை கொஞ்சம் கொஞ்சமாக மாற்றவும் தேற்றவும் தொடங்கினார்.

**முஸ்லிம்களின் பரிதாபகரமான நிலை...**

அந்த நேரத்தில் ஆச்சரியப்படும் வகையில் ஃபிரான்குகளின் கைகளில் பல இடங்கள் சென்று விட்டிருந்தன.

அவர்களின் படை வீரர்களின் எண்ணிக்கையும் வெகு வேகமாக பல்கி பெருகி இருந்தன. அவர்களின் பலமும் அதிகாரமும் உச்சத்தில் இருந்தன. அவர்கள் முஸ்லிம்களின் நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தனர். அதனை தடுக்க திராணியற்று முஸ்லிம்கள் இருந்தனர்.

இவ்வாறு முஸ்லிம்களை தாக்குவதும் அவர்களின் நிலத்தை ஃபிரான்குகள் கைப்பற்றுவதும் தொடர்ந்து கொண்டே இருந்தது. ஃபிரான்குகளின் தாக்குதல் ஈவு இரக்கமற்றதாக இருந்தது. அவர்கள் முஸ்லிம்களை சித்ரவதை செய்வதை பொழுது போக்காக கொண்டிருந்தார்கள்.

-வளரும் இன்ஷா அல்லாஹ்

**- அபூ அஃப்ரஹ்**


**வைகறை வெளிச்சம் மாத இதழில்**
**விளம்பரம் செய்ய**
**தொடர்பு கொள்ளவும்**
**+91 81481 29887**




தீண்டாமை! இந்தியாவில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இருந்துக் கொண்டிருக்கின்ற பிரச்சனை. இதையே அண்ணல் அம்பேத்கர் அவர்களின் வார்த்தைகளில் சொன்னால், “இந்து” மதம் எப்போது தோன்றியதோ, அப்போதிலிருந்தே தீண்டாமை பிரச்சனையும் இருக்கிறது.

தீண்டாமையை அனுபவிக்கக் கூடிய ஒரு மனிதன் அதிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும் என்றால், அவன் முதலில் இந்து மதத்தை விட்டொழிக்க வேண்டும். ஏனென்றால் தீண்டாமையின் ஆணி வேரே இந்து மதம் தான்.

அதனால் தான் அண்ணல் அம்பேத்கர் அவர்கள், “தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்றால் இந்து மதத்திலிருந்து வெளியேறுங்கள். உங்களை எந்த மதம் அரவணைக்கிறதோ, அந்த மதத்திற்கு செல்லுங்கள்” என்று பறை சாற்றினார்.

அதனடிப்படையில், இன்றைக்கு எங்கள் கொள்கையில் தான் தீண்டாமையிலிருந்து விடுதலையடைவதற்கான வழிமுறைகள் உள்ளன என்று பலர் கிளம்பினாலும். அன்று முதல் இன்று வரை இஸ்லாத்திடம் மட்டுமே தீண்டாமையை ஒழிப்பதற்கான முழுத் தீர்வு உள்ளது. இஸ்லாத்தில் மட்டுமே அதற்கானதொரு சமூக கட்டமைப்பு உள்ளது. (எ.கா. மீனாட்சிபுரம் - ரஹ்மத் நகராக மாறியது)

அதனாலேயே தாழ்த்தப்பட்ட மக்களுக்கான விடுதலைக்காக போராடிய கொடிக்கால் செல்லப்பா(ஷேக் அப்துல்லாஹ்), கூரியூர் முஹம்மது அலி ஜின்னா, டி.எம்.மணி(உமர் ஃபாரூக்), சிக்கல் நாயக்கன் பேட்டை கண்ணையா(முஹம்மது ஜக்கரிய்யா) போன்ற பல தலைவர்கள், தீண்டாமைக்கான தீர்வாக இஸ்லாத்தையே தேர்ந்தெடுத்தார்கள். தீண்டாமையிலிருந்து பூரண விடுதலை அடைந்தார்கள்.

(அம்பேத்கர் அவர்களின் தேர்வும் இஸ்லாமாகவே இருந்தது. உண்மையை அறிந்துக் கொள்ள படியுங்கள், “அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் அரசியல் பின்னணி என்ன?” வேர்கள் பதிப்பகம்)

அந்த வரிசையில் இந்து மதத்தின் தாழ்த்தப்பட்ட சமூகத்தில் பிறந்த இனியவன், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு தன் மீது இந்து மதம் சுமத்திய தீண்டாமை எனும் சாக்கடையை தூக்கி எறிந்த அனுபவம்.........

**இனியன்**

என்னுடைய பெயர் இனியன். நான் கடலூர் மாவட்டம், ஆலப்பாக்கம் கிராமத்தைச் சார்ந்தவன். நான் இந்து மதத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தில் பிறந்தவன். என்னுடைய குடும்பத்தில் எல்லோரும் இந்து மத கடவுள் பக்தி நிறைந்தவர்களாக இருந்தார்கள். நிறைய கோவில்களுக்கெல்லாம் செல்வார்கள்.

**செந்தமிழ் நாட்டுச் சேரிகள்**

அப்போதெல்லாம் நான் என் தாயாரிடம் கேட்பேன், "நாம் வாழும் பகுதியில் மாரியம்மன் கோவில் இருக்கிறது. அந்த கோவிலுக்கு நம்மால் செல்ல முடிகிறது. ஆனால் பக்கத்து கிராமத்தில் உள்ள சிவன் கோவிலுக்கு மட்டும் நம்மால் செல்ல முடியவில்லையே ஏன்?" என்று கேட்பேன்.

அதற்கு என் பெற்றோர், "அது ஊர் தெருவில் உள்ள கோவில். அங்கெல்லாம் நாம் செல்ல முடியாது" என்று கூறுவார்கள்.

அப்படியென்றால், "நாம் வாழும் பகுதி ஊர் இல்லையா?" என்று கேட்பேன். "இல்லை நாம் வாழும் பகுதி சேரி, காலனி" என்று கூறுவார்கள்.

அதேப்போல அந்த ஊர்களில் திருவிழாக்கள் நடக்கும் போது ஒரு தடுப்புக் கயிறு கட்டிவிடுவார்கள். கயிறுக்கு அந்தப் பக்கம் உயர் சாதியினரும், கயிறுக்கு இந்தப்பக்கம் எங்களைப் போன்ற கீழ் சாதியினரும் இருக்க வேண்டும். எங்களால் அவர்கள் இருக்கும் இடத்திற்கு செல்ல முடியாது.

ஐயர் வந்து திருநீறு வழங்கும் போது கூட எங்கள் மீது கைப் படாமல் இருக்க, அவரது கையை மேலே உயர்த்தி தான் வழங்குவார்.

**நாத்திகம்**

அந்த சமயத்தில் என் மனதில் நிறைய சிந்தனைகள் ஓடும். என் அண்ணன்களெல்லாம் தி.க. வில் இருந்தார்கள். அவர்களிடம் சென்று கேட்பேன். "அது ஊர் என்று சொல்கிறார்கள். நாம் வாழும் பகுதி 'சேரி' என்று சொல்கிறார்கள். ஆனால் சிவனோ ஊருக்குள் தான் இருக்கிறார். அப்படியென்றால் எங்களால் அவரை சென்று பார்க்க முடியாதா? அவர் எங்களை வெறுக்கிறாரா?" என்று கேட்பேன்.

"ஆம் அவர்கள் உயர் சாதியினர். நாம் கீழ் சாதியினர். நாமெல்லாம் அந்த கோவிலுக்குள் செல்ல முடியாது." என்று கூறுவார்கள். அப்போது எனக்கு கடவுள் மீதான ஒரு வித வெறுப்புணர்ச்சி ஏற்பட்டது. அந்த வெறுப்புணர்ச்சி என்னை நாத்திகத்தில் தள்ளியது. என்னுடைய பதினேழாவது வயதில் நான் பகுத்தறிவு இயக்கங்களில் நாத்திகனாக பயணிக்கத் தொடங்கினேன்.

**டி.எம். மணி - சாதி ஒழிந்தது.**

இந்த சூழலில் தான் நாங்கள் ஒரு கருத்தரங்கத்தை ஏற்பாடு செய்திருந்தோம். அதில் தஞ்சை மாவட்டம் திருப்பனந்தாள் பகுதியைச் சார்ந்த டி.எம். மணி (எ) உமர் ஃபாரூக் கலந்துக் கொண்டார். அவர் மூலம் எனக்கு "சாதி ஒழிந்தது" என்ற நூல் கிடைத்தது. இந்த நூல் தான் என்னுடைய வாழ்வில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது.

தஞ்சை மாவட்டத்தின் இன்னொரு கோரமான முகத்தை அந்த நூல் எனக்கு சுட்டிக்காட்டியது. செத்த மாட்டை அகற்றுவது, பிணம் தூக்குவது, தப்பு அடிக்க வர மறுத்தால் கலவரம் செய்து அந்த மக்களை துண்புருத்துவது போன்ற அந்த தலித் மக்களுக்கு ஏற்பட்ட கொடூரங்களில் இருந்த இஸ்லாம் எப்படி அவர்களை விடுவித்தது என்று அந்த நூலில் ஆழமாக குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நூல் என் மனதளவில் சில தாக்கங்களை ஏற்படுத்தினாலும் அப்போதும் நான் பகுத்தறிவு இயக்கங்களில் தான் பயணித்துக் கொண்டிருந்தேன்.

**இஸ்லாம் - சகோதரத்துவம்**

இந்தச் சூழலில் தௌஃபிக் என்ற என்னுடைய முஸ்லிம் நண்பர் ஒருவரை சந்திக்க சென்றிருந்தேன். அவர் நல்ல மாநிறமானவர், நாகரிகமானவர். சிறு பிரச்சினையில் அப்போதுதான் சிறையிலிருந்து வெளி வந்திருந்தார்.

நான் அவரை சென்று சந்தித்தப் போது, என்னைக் கட்டித் தழுவி, வரவேற்று நல்ல மறியாதையாக நடந்துக் கொண்டார்.

எனக்கு ஆச்சரியாமாக இருந்தது. என்னையெல்லாம் என் அப்பா, அம்மாவைத் தவிற யாரும் கட்டியணைத்ததில்லை. நாங்கெளெல்லாம் தீண்டடத்தகாதவர்கள் என்று ஒதுக்கப்பட்டவர்கள். எங்களை தொட்டாலே தீட்டு என்பார்கள். இவரோ சர்வ சாதாரணமாக என்னை கட்டி அணைத்து வரவேற்கிறாரே! என்று வியப்பாக இருந்தது. அந்த இடத்திலேயே கண்ணீர் விட்டு அழுது விட்டேன்.

அவர் என்னை மீண்டும் அணைத்து, எனக்கு

ஆறுதல் கூறி, நாமெல்லாம் ஒரு தாய் மக்கள். ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்து பிறந்தவர்கள் என்று இஸ்லாத்தைப் பற்றி எடுத்துக் கூறினார்.

அப்போது நான் அவரிடம் மூன்று கேள்விகள் கேட்டேன், "இஸ்லாத்தில் தீண்டாமை இருக்கிறாதா?" என்று கேட்டேன். அதற்கவர் "இல்லை, இல்லவே இல்லை!" என்று கூறினார்.

அடுத்து அவரிடம், "இஸ்லாத்தில் தலித்கள் இருக்கிறார்களா?" என்று கேட்டேன், அதற்கவர், "அப்படியெல்லாம் எந்த பிரிவும் இஸ்லாத்தில் கிடையாது" என்று கூறினார்.

"அப்படியென்றால், நாங்கள் இஸ்லாத்திற்கு மாறினால் எங்களிடம் உறவுமுறைமைகளை பேணுவீர்களா? எங்களிடம் பெண், கொடுத்து பெண் எடுப்பீர்களா?" என்று கேட்டேன்.

இந்தக் கேள்வியைக் கேட்டவுடன் என்னை மீண்டும் கட்டியணைத்து, "சகோதரரே நீங்கள், கலீமா சொல்லி அல்லாஹ்வை ஏற்றுக் கொண்டு, முஹம்மத்(ஸல்) அவர்களை பின்பற்றுங்கள். நாம் சம்மந்திகளாகவே ஆகிவிடலாம். நாமெல்லாம் ஒரு தாய் மக்கள். நாமெல்லம் ஒரே குலத்தவர்கள். நமக்குள் எந்த பாகுபாடும், ஏற்றத் தாழ்வும் கிடையாது" என்று கூறினார்.

**சாதி ஒழிந்தது**

பின்னர் எனக்கு இஸ்லாத்தைப் பற்றின சில புத்தகங்களைக் கொடுத்து படிக்கச் சொன்னார். நானும் ஆறு மாதகாலம் இஸ்லாம் குறித்து படித்து தெரிந்துக் கொண்டேன். அந்த நண்பரிடம் நிறைய கேட்டுத் தெரிந்துக் கொண்டு அதன் பின் நான் கலிமா கூறி இஸ்லாத்தில் இணைந்தேன்.

அவர் கூறிய உடனேயே கூட நான் இஸ்லாத்தை தழுவியிருக்கலாம். ஆனால், நான் ஏற்கனவே இந்து மதத்தில் கீழ் சாதிக்காரனாகவும், தீண்டத்தகாதவனாகவும் மிகவும் கீழ்தரமான நிலையில் இருந்தேன். தீர்வைத் தேடி பகுத்தறிவு இயக்கங்களின் பின்னால் சென்று, அதில் பயணித்த போது, அதிலும் இந்து மதத்தின் சில எச்சங்கள் இருப்பதை காண முடிந்தது.

இந்த நிலையில் மூன்றாவதாக ஒரு வாழ்க்கை முறைக்குள் செல்லும் போது, அதில் நமக்கு பூரண விடுதலை கிடைக்குமா? என்று முழுமையாக ஆராய வேண்டிய கட்டாயத்தில் நான் இருந்ததால் ஆறு மாதங்கள் இஸ்லாத்தை ஆராய்ந்து நான் முஸ்லிமாக மாறினேன்.

உண்மையில் எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. இந்து மதத்தில் எங்களையெல்லாம் ஆதிக்கச் சாதியினர் படிக்கவே கூடாது என்று கூறுவார்கள். ஆனால் நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவுடன் எனக்கு கல்வியின் முக்கியத்துவத்தை புரிய வைத்து மதரசாவிற்கு அனுப்பி படிக்கச் சொன்னார்கள் முஸ்லிம்கள்.

என் தந்தைக்கு, அவருக்கு முந்தைய தலைமுறைக்கெல்லாம் இந்த மார்க்கம் கிடைக்கவில்லையே என்று அல்லாஹ்விடம் கண்ணீர் விட்டு அழுவேன். கிடைத்திருந்தால் அவர்களும் சாதிய கொடுமைகளிலிருந்து விடுபட்டு கண்ணியமான வாழ்க்கை முறைமையை வாழ்ந்திருப்பார்களே என்று,

இஸ்லாத்தில் மனித சமூகம் கண்ணியமாக வாழ்வதற்கான வாழ்க்கை முறைமைகளை அல்லாஹ் மிக அழகாகக் கட்டமைத்துள்ளான். இது வேறு எந்த மார்க்கத்திலும் இல்லாதது. இஸ்லாம் மட்டுமே நமக்கான விடுதலை. அல்ஹம்துலில்லாஹ்

ஆதாரம்:
https://www.youtube.com/watch?v=tqxIo5J8OD4&index=6&t=0s&list=PL6QNhHvRWhuGoQxcrzTp3FjU2MWURR5gV

**- த. அஷ்ரஃப் இஸ்லாம்**





நூல் : சாதி ஒழிந்தது

விலை : 40 ரூபாய்

தொடர்புக்கு : +91 81481 29887

# முத்தலாக் நீதிமன்றங்களில் குவியும் வழக்குகள்



முத்தலாக்குக்காக அவசரப் பிரகடனம் கொண்டு வந்தது செல்லாது எனக் கூறி வழக்கொன்றை சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் பிரபல வழக்கறிஞர் ஜஃபருல்லாஹ் கான்.

அவர் முக்கிய கேள்விகளைத் தனது அறிக்கையில் எழுப்பியுள்ளதால், அவருடைய மனு ஏற்றுக் கொள்ளப்பட்டு சம்மந்தப்பட்டவர்களுக்கு Notice தாக்கீதுகளை அனுப்பியுள்ளது. நமது சென்னை உயர் நீதிமன்றம்.

அவர்கள் எழுப்பியுள்ள கேள்விகளுள் தலையாவது, குடியரசு தலைவரின் அவசரப் பிரகடம் என்பது ஒரு சட்டம், அல்லது சட்ட வரைவு நாடாளும் மன்றத்திற்குள் கொண்டு செல்வதற்கு கால அவகாசம் இல்லாத போது பிரகடப்படுத்தப்படுவது.

ஆனால் முத்தலாக் சட்டத்தின் சட்ட வரைவு நாடாளு மன்றத்தில், கீழ் சபையில் ஏற்றுக்கொள்ளப் பட்டு மேல் சபையால் நிராகரிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் கிடப்பிலிருக்கும் ஒரு விவகாரத்தில் அவசரச் சட்டம் ஒன்றைப் பிரகடனப்படுத்துவது தவறான முன் மாதிரி. அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கு எதிரானது. அதனால் செல்லாது.

அடுத்து திருமணம் என்பது, அதாவது திருமண ஒப்பந்தம் என்பது இஸ்லாத்தில் ஒரு சிவில் காண்ட்ராக்ட். அதில் கிரிமினல் விதிகளைக் கொண்டு வந்திட இயலாது. ஆகவே இந்தச் சட்டம் - அவசரப் பிரகடனம் முன்னுக்குப் பின் முரணனானது.

முரண்பாடானவை எதுவும், சட்டத்தில் நின்றிட இயலாது. இதுப் போன்ற வலுவான காரணங்களை இந்த வழக்கு எழுப்பியதால் ஆது ஏற்றுக்கொள்ளப்பட்டு, சம்மந்தப்பட்டவர்களுக்கு தாக்கீது - Notice அனுப்பப்பட்டுள்ளது.

**MGM**




# டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி அவர்களின் மகளையும், மருமகனையும் நிபந்தனையின்றி சிறையிலிருந்து விடுதலைச் செய்திட வேண்டும்.

## ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையம்.

**ஆணை: UN. HUMAN RIGHTS 'OFFICE'**

2013இல் எகிப்தில் நடந்த தேர்தலில் அல் இஹ்வான் அல் முஸ்லிமீன் இயக்கத்தவர்கள் ஆட்சியைப் பிடித்தார்கள்.

தியாகங்களின் தடாகமாகத் திகழ்ந்த அவர்கள் ஜனநாயக முறையில் ஆட்சியைப் பிடித்து இஸ்லாத்தை நிலை நாட்டிடலாம் என நினைத்தார்கள்.

மக்களிடத்தில் அவர்களுக்கிருந்த அலாதியான ஆதரவே இந்த ஜனநாயக எண்ணமும், நினைப்பும் ஏற்படக் காரணம். அரபஸ் ஸ்பிரிங்க் (Arabs Springs) என்ற அரபுலக எழுச்சியில் (2011) மக்கள் காட்டிய ஆர்வம், ஆதரவு இவையும், காரணமாக அமைந்தன. சற்றே தடம் பிறழ்ந்தார்கள்.

அடர்ந்து வந்த ஆதரவில் அவர்கள் ஓர் அபார உண்மையைக் கவனிக்கத் தவறி விட்டனர். அது சத்தியத்தை நிலைநாட்ட அசத்திய வழிகள் பலன் தரமாட்டா! என்ற உண்மையே.






அல் இஹ்வானுல் முஸ்லிம் அமைப்பின் மூத்த வழிகாட்டி முஹம்மது மஹ்தி அகீஃப் மற்றும் ஜனநாயக முறைமையில் வெற்றிப்பெற்ற முஹம்மது முர்சி அவர்களை இராணுவம் கைது செய்த போது....

அசத்திய வழிகள் பலன் தரமாட்டா என்பதுமட்டுமல்ல, அவை எதிர் விளைவுகளையும் ஏற்படுத்தின. ஆட்சியில் அமர்ந்து ஓராண்டுக்குள் அந்த ஆட்சியை அமெரிக்கா - ஐரோப்பிய நாடுகளின் ஒருங்கிணைந்த சதியின் கீழ் ஆட்சிக் கவிழ்க்கப்பட்டது.

இராணுவ ஆட்சி ஒன்று அங்கே அரியணையில் அமர்த்தப்பட்டது. துரோகம் தன் வேலையைச் செய்தது.

அல் இஃஹ்வான் அல் முஸ்லிமுன் இயக்கத்தின் சார்பில் ஆட்சியின் தலைமைப் பீடத்தில் அமர்ந்த முஹம்மத் முர்சி அவர்கள் உட்பட இஃஹ்வானுல் முஸ்லிமுன் இயக்கத்தவர்கள் பெரும்பாலானோர் சிறைபிடிக்கப்பட்டார்கள்.

இயக்கத்தின் முன்னணி சகோதரர்கள் பலர் அடாவடி விசாரணை என்ற நாசத்தின் கீழ் தூக்கிலிடப்பட்டார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முஹம்மத் முர்சி அவர்களின் குடும்பத்தவர்களும் தூக்கிலிடப்பட்டார்கள். சுட்டுக் கொலை செய்யப்பட்டார்கள்.

தொடர்ந்து நடந்த தூக்குகளைப் பொருக்கமாட்டாமல், அல் இஹ்வான் அல் முஸ்லிமுன் இயக்கத்தவர்களின் இன்றைய தலைமுறையினர் புகழுக்கும், பெருமைக்கும் உரிய அல்லாஹ், அவனுடைய அறுதித் தூதர் அகிலத்திற்கோர் அருட்கொடை முஹம்மத்(ஸல்) அவர்கள் காட்டிய வழியை கையிலெடுத்தார்கள்.

தூக்குத் தண்டனைகள் முடிவுக்கு வந்தன. எல்லா வழக்குகளையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் போகின்றோம் எனக் கூறி மொத்தத் தூக்குத் தண்டனையும் ஒத்திப் போடப்பட்டன. நிறுத்தப்பட்டன.

இந்த வழியே எகிப்தின் இராணுவ ஆட்சியாளர்களுக்குத் துணை போன எகிப்தின் நீதித் துறைக்கு நன்றாகப் புரிந்தது. ஆனால் கைதுகள், அதாவது இஹ்வானுல் முஸ்லிமுன் இயக்கத்தைச் சார்ந்தவர்களின் குடும்பத்தவர்களைக் கைது செய்து சிறையிலடைத்துச் சித்திரவதைச் செய்வதைத் தொடர்ந்தார்கள்.



அப்படி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்களுள் ஒருவர் தான் டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ அவர்களின் மகளார், ஒலா அல் கர்ளாவீ *(Ola al-Qaradawi)* இவரை இந்த ஆண்டு ஜீன் 30ஆம் நாள் சிறை பிடித்தார்கள்.

அவரை எகிப்தின் மிகவும் கீழ் தரமான சிறையில் அடைத்துச் சித்திரவதைச் செய்தார்கள். அதுவும் தனிமைச் சிறை. அதேப்போல் அவரது கணவர் “கோசம் கலாஃப்” அவர்களையும் சிறை பிடித்து சித்திரவதைகள் செய்து வருகின்றார்கள்.

அதுவும் தனிமைச் சிறை தான் கீழ்த்தரமான சிறை. இதனால் இருவரின் உடல் நிலையும் மிகவும் நலிந்து போய் விட்டது. அவர்கள் இது குறித்து எகிப்தில் வாழாமல் உலகின் இதரப் பகுதிகளில் வாழும் மனித உரிமை ஆர்வலர்கள், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை குழுவிடம் வழக்குத் தொடர்ந்தார்கள்.

அந்த மனித உரிமை ஆணையம் எகிப்திற்கு இப்படி ஓர் உத்தரவிட்டிருக்கிறது;

"டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ அவர்களின் மகள் ஒலா அல் கர்ளாவீ, அவரின் மகள் என்ற ஒரே காரணத்திற்காகவே கைது செய்யப்பட்டுள்ளார். அதேப்போல் கோசம் கலாஃப் அவர்கள், ஒலா அல் கர்ளாவீ அவர்களின் கணவர் என்ற காரணத்திற்காகவே கைது செய்யப்பட்டுள்ளார்கள்."

"இவர்களுக்கு சிறையில் நடந்துள்ள சித்திரவதைகள் சட்டங்களால் அனுமதிக்கப்படாத குரூரமான சித்திரவதைகள். மனித உரிமை மீறல்கள். இவர்கள் மெல்ல மெல்லக் கொலைச் செய்யப்படுகிறார்கள்."

"ஆகவே இவர்கள் இருவரையும், அதேப்போல எந்தக் காரணமும் இல்லாமல் கைது செய்யப்பட்ட இதர மக்களையும் உடனேயே எந்த நிபந்தனையுமின்றி விடுதலைச் செய்திட வேண்டும்."

ஐ.நா. வின் மனித உரிமைக்குழு இப்படி அந்த ஆணையில் குறிப்பிட்டுள்ளது.

ஆதாரம்: Radiance Views Weekly

29 July, 04 August 2018

**MGM**

# சிறையில் எனது நாட்கள்

**- வேர்கள் பதிப்பகம்**

ஜைனப் அல்-கஸ்ஸாலி, எகிப்து நாட்டில் 1917ம் ஆண்டு பிறந்தார். 10ம் வயது அரும்பிடும் முன்னரே சிறந்த பேச்சாற்றலுக்கு உரித்தானவர் என்று அறியப்பட்ட அவர், நூல்களையும் அறிஞர்களின் ஆக்கங்களையும் ஆழ்ந்து படிப்பதில் அதீத முனைப்பு காட்டிவந்தார். மார்க்கத்தின் பெயரால் பெண்களுக்குக் கல்வி அறிவு மறுக்கப்பட்டுவந்த அந்தக் காலகட்டத்தில், 'மார்க்கம்' என்ற முகாமில் பத்தாம்பசலிகளும் மரபுவாதிகளும் ஏற்படுத்தி வந்த இடுக்கண்கள் அனைத்தையும் தகர்த்தெறிந்தார்.

அல்-அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் பிரசித்தமான மார்க்க மேதைகள் பலரிடம் கல்வி பயின்றார். எகிப்திலே பெண்ணியம் பேசித்திரிந்த அமைப்பொன்றில் காலக்கிரமத்தில் தன்னை உறுப்பினர் ஆக்கிக்கொண்டார்.

பின்னர், அவ்வமைப்பு மார்க்க வழிகாட்டல்களுக்கு எதிர்திசையில் பயணித்துக்கொண்டிருப்பதைச் சுதாரித்துக்கொண்ட அவர் அதிலிருந்து வெளியேறினார். "Muslim Women's Association" (ஜமாஅத்துஸ் ஸைய்யிதாதுல் முஸ்லிமாத்) என்ற அமைப்பொன்றைத் தோற்றுவித்தார்.

முஸ்லிம் பெண்களின் செயல்பாடுகளை மார்க்க வழிகாட்டல்களின் அடிப்படையில் செறிவூட்டுவதே இவ்வமைப்பின் பிரதான நோக்கம். அமைப்பு வளர்ந்துகொண்டிருந்த வீச்சில், தானே முன்னின்று 15 பள்ளிவாசல்களை எகிப்து நெடுகிலும் நிறுவினார்.

நாளடைவில், பெண்களுக்கான இஸ்லாமிய மையம் ஒன்றையும், பற்பல அநாதை இல்லங்களையும் ஆங்காங்கே நிர்மாணித்தார். "மஜல்லாதுஸ் ஸையிதாத்துல் முஸ்லிமாத்" என்ற பத்திரிகையையும் தொடர்ந்து நடத்திவந்தார்.

இவரது திருக்குர்ஆன் வகுப்புகள் சுற்றாடலிலிருந்த ஆயிரக்கணக்கானப் பெண்களை அபரிமிதமாக ஆகர்ஷித்தன. இந்நிலையில், இமாம் ஹஸன் அல் பன்னாவின் தீட்சண்ய அறிவு, சொற்பொழிவு, எழுத்து, இயக்கம் ஆகியவற்றால் அவர் பெரிதும் ஈர்க்கப்பட்டார். விளைவாக, 1949ம் ஆண்டு, இமாமவர்களின் 'இஹ்வான் அல்-முஸ்லிமூன்' இயக்கத்தில் தன்னை ஓர் அங்கத்தினராகப் பிணைத்துக்கொண்டார்.

எகிப்தில் இஸ்லாமிய ஆட்சி நிலைநாட்டப்பட வேண்டும்; ஷரீஅத் சட்டங்கள் எகிப்தின் அதிகாரபூர்வ அரசமைப்புச் சட்டங்களாக ஆகவேண்டும் உள்ளிட்ட இஹ்வான் அல்-முஸ்லிமூன் இயக்கத்தின் இலக்குகளுக்கு அன்றைய எகிப்திய அரசு முட்டுக்கட்டைப் போட்டது. ஜைனப் அல்-கஸ்ஸாலி உட்பட இயக்கத்தின் பல்வேறு அங்கத்தினர்களை கொத்துக்கொத்தாகக் கைதுசெய்து சிறையில் அடைத்தது; குரூர சித்திரவதைகளை அவர்கள்மீது அவிழ்த்துவிட்டது. ஒரு பெண்ணாக சிறைக் கொட்டடியினுள் அவர் அனுபவிக்க நேர்ந்த சொல்லொணா துயரங்களின் ஒருங்கமைந்த தொகுப்பே இந்நூல். அதனை தனது வார்த்தைகளின் வாயிலாகவே நமக்கு எடுத்தியம்புகிறார் மர்ஹூம் ஜைனப் அல் கஸ்ஸாலி.

**- Safiyya Traders Book Store**


சிறையில்
எனது நாட்கள்
விலை. ரூ.90.00







# பத்திரிகையாளர்களின் அவலம்!

பெண் பத்திரிகையாளர்கள், எம்.ஜெ. அக்பர் என்ற பாசிசத்திற்கு விலை போன பத்திரிக்கையாளர் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகள் பத்திரிகை துறைக்கே அவமானது. ஆனால் பாசிஸ்டுகளை பொறுத்த வரை இது போன்ற விஷயங்கள் சர்வ சாதாரணமான ஒன்று.

இது பத்திரிகைத் துறையில் மட்டும் நடக்கவில்லை. சினிமா துறையில், இப்படி எல்லாத்துறைகளிலும் இது நடக்கின்றது.

மொத்தத்தில் வேலைக்குப் போகும் பெண்கள் தவறாமல் பாலியல் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது மட்டும் *ME TOO* உரக்க முழங்கும் செய்தியாகும். இலக்கிய ஜாம்பவான்களும் இதற்கு விதிவிலக்கில்லை.

அத்தோடு இன்னொரு உண்மையும், உரக்க முழங்குகின்றது இந்த *ME TOO* பதிவுகள். அந்த உண்மை, பெண்கள் தங்களுக்கு வேலை செய்யுமிடத்தில் இழைக்கப்படும் கொடுமைகளை அவை எத்துனை சிறியவையாக இருந்தாலும் அவர்களால் அதை மறக்கவே முடிவதில்லை.

எடுத்துக்காட்டாக 1997 - இல் நடந்த வன்கொடுமை ஒன்றை பெண் பத்திரிகையாளர் ஒருவர் 21 ஆண்டுகளுக்குப் பின் இப்போது சொல்லி இருக்கின்றார்.

ஆகப் “பெண்மை” இன்றும் அதன் நாணத்தையும், மென்மையையும் இழந்து விடவில்லை என்பதையே இப்போது பீரிட்டுப் பாயும் *ME TOO* செய்திகள் சொல்லுகின்றன. ஆக பெண்கள், கட்டாயமான சூழ்நிலைகளில் அல்லாமல் வெளியே வருவது ஆபத்தானது. அவர்களின் பெண்மைக்கும், மென்மைக்கும் உகந்ததல்ல.

அப்படியே அவர்கள் வேலைக்குச் சென்று தான் ஆக வேண்டும் என்றால் ஆண்கள் பகுதியும், பெண்கள் பகுதியும் தீர்க்கமாகப் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஒருவரை ஒருவர் நெருங்கும் அளவில் அங்கே எந்தச் சூழலும் இருக்கக் கூடாது.

மஹரமான துணை இன்றி தந்தை, கணவன், அண்ணன் அல்லது தம்பி போன்ற உறவுகளின் துணை இன்றி அவள் பொது இடங்களுக்கு வரக் கூடாது. அதற்கு மேல் பெண்மை, மென்மையானது அது ஆண்களைக் கவர்ந்திழுக்கக் கூடியது என்ற உண்மையை எந்தப் பெண்ணும் மறந்திடல் ஆகாது.

ஆனால் இன்று பெண்கள் தாங்கள் நடப்பதும், நகருவதும் அடுத்தவர்களைக் கவர்ந்திழுத்திட வேண்டும், என்ற அளவில் ஆடை அணிந்து வருவதும், ஆண்களோடு தாராளமாகக் கலந்து பழகுவதை பெருமை என்றும் விடுதலை என்றும் கருதுகின்றார்கள்.

அதற்கு வக்காலத்து வாங்கிட ஆயிரம் அமைப்புகள். அத்தோடு நில்லாமல் ஆண்களோடு பெண்கள் கலந்து பழகுவதைக் கண்டிப்பவர்களை பிற்போக்குவாதிகள் என்றும், பழைமைவாதிகள் என்றும் பழிக்கவும் செய்கின்றார்கள்.

இதை விடுத்து பெண்மையின் கூறுகளை கூர்ந்து கவனித்து அச்சம், நாணம், இவற்றோடு நடந்திட வேண்டும். ஆடைகளை அங்கங்களை அனைத்தையும் மறைத்திடும் அளவில் அறிந்திட வேண்டும். மொத்தத்தில் இறைவன் சொன்ன நெறிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும். அப்போது மட்டுமே பெண்மைக் காப்பாற்றப் படும். இல்லையேல் இது போன்ற ஆறாத வடுக்கள், அவர்களை ஆயுள் முழுக்கத் துன்புறுத்தும். தவிர்ப்போம்!

**MGM**

## நாங்கள் தான் குண்டுகள் வைத்தோம்

# சனாதன் சன்ஸ்தா தீவிரவாதிகள்

## ஒப்புதல் வாக்குமூலம்





2018 அக்டோர் 8ம் நாள் இந்தியா டுடே தொலைக்காட்சி சனாதன் சன்ஸ்தா தீவிரவாதிகளின் உரையாடலை இரகசியமாக படம் பிடித்து ஒளிபரப்பியது. அதில் அந்த தீவிரவாதிகள் தாங்கள் வெடிகுண்டுகளை வைத்து குண்டு வெடிப்பை நிகழ்த்தியதை ஒப்புக்கொண்டார்கள். அவர்கள் அனைவரும் நீதிமன்றத்தால் போதிய ஆதாரம் இல்லை என்று விடுவிக்கப்பட்டவர்கள்.

**யார் இந்த சனாதன் சன்ஸ்தா இயக்கத்தினர்?**

அதை பார்ப்பதற்கு முன்னால் முதலில் 30 ஆகஸ்ட் 2011ல் 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்ட இருவரைப்பற்றி பார்த்துவிடுவோம்.

ரமேஷ் கட்கரி, விக்ரம் பவே என்ற அந்த இருவருக்கும் விசாரணை நீதிமன்றம் கட்கரி ரங்கயாதன் ஆடிட்டோரியம் குண்டு வெடிப்பு வழக்கு விசாரணையில் 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையை வழங்கியது.


2008ம் ஆண்டு தானேவிலும் வாஷியிலும் பன்வேலிலும் இந்த குண்டு வெடிப்புகள் நிகழ்ந்தன. இரண்டு திரையரங்கு களிலும் ஒரு சினிமா ஹாலிலும் இந்த குண்டு வெடிப்புகள் நிகழ்த்தப்பட்டன.

இந்த குண்டு வெடிப்புகளை நிகழ்த்திய இந்த இரு தீவிரவாதி களும் சனாதன் சன்ஸ்தா இயக்கத்தை சேர்ந்தவர்கள். இந்த வழக்கில் ஆறு பேர் குற்றம் சாட்டப்பட்டனர். ஆறு பேரும் இந்து அடிப்படைவாத இயக்கமான சனாதன் சன்ஸ்தாவை சேர்ந்தவர்கள்.

ஆறு பேரில் நான்கு பேர் விடுதலை செய்யப்பட்டனர். மங்கேஷ் தின்கர் நிகாம், சந்தோஷ் ஆங்ரே, ஹேமந்த் சால்கே, ஹரிபாபு கிருஷ்ண திவேகர் ஆகிய நால்வரும் விடுதலை செய்யப்பட்டவர்கள். இவர்களும் சனாதன் சன்ஸ்தா இயக்கத்தை சேர்ந்தவர்களே.










**சனாதன் சன்ஸ்தா பயங்கரவாதிகளால் படுகொலை செய்யப்பட்டவர்கள்**

இதில் மங்கேஷ் தின்கர் நிகாம், ஹரிபாபு கிருஷ்ண திவேகர் ஆகிய இருவரும் தான் தற்போது இந்தியா டுடே தொலைக்காட்சி இரகசியப் பதிவில் ஒப்புதல் வாக்குமூலம் தந்தவர்கள்.

இவர்களுக்கு எதிராக முதலில் சட்ட விரோத நடவடிக்கைகளை தடுக்கும் சட்டத்தின் கீழ் Unlawful Activities (Prevention) Act நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பின்னர் இந்த சட்டத்தின் கீழான நடவடிக்கை பின் வாங்கப்பட்டது.

### குண்டுகள் வெடித்தது எங்கெங்கே?

ஜூன் 4 2008-இல் கட்கரி ரங்கயாதன் திரையரங்கில் ஒரு குண்டு வெடித்தது. இதில் ஏழு பேர் படுகாயமுற்றனர். மே 31 2008ல் விஷ்ணு பவே ஆடிட்டோரியத்தில் வெடித்தது. இது தானேவில் உள்ள வாஷி மாவட்டத்தில் உள்ளது. இதே நேரத்தில் ஒரு வெடிக்காத குண்டு பன்வேலில் உள்ள ராஜ்காட் மாவட்டத்தில் சினிராஜ் சினிமாவில் கண்டெடுக்கப்பட்டது. இவை அனைத்தையும் வைத்தவர்கள் இந்த சனாதன் சன்ஸ்தாவை சேர்ந்த தீவிரவாதிகள்.

### சனாதன் சன்ஸ்தா வெளியில் தெரிய ஆரம்பித்தது எப்போது?

2008ல் சனாதன் சன்ஸ்தா இயக்கத்தை சேர்ந்த இருவர் பன்வேல் என்ற இடத்தில் "ஜோத்தா அக்பர்" என்ற திரைப்படம் ஓடிக் கொண்டிருந்த போது அதற்கும் "ஆம்ஹி பச்புதே" என்ற மராத்தி நாடகத்திற்கும் குண்டு வைத்தனர். அப்போது தான் இந்த இயக்கத்தின் பெயர் முதலில் வெளிவரத்தொடங்கியது. இதன் பின்னர் இந்த இயக்கத்திற்கு எதிராக பொது நல வழக்குகள் சமூகசேவகர்களால் தொடரப்பட்டது.

### சனாதன சன்ஸ்தாவால் கொலை செய்யப்பட்ட பிரபலங்கள்

நரேந்திர தபோல்கர், கோவிந்த பன்சாரே, கல்புர்கி மற்றும் கௌரி லங்கேஷ் ஆகியோர் இந்த இயக்கத்தின் தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்டவர்களில் சிலர்.

### ஒப்புதல் வாக்குமூலம்

நீதிமன்றத்தால் போதிய ஆதாரங்கள் இல்லை என்று கூறி விடுதலை செய்யப்பட்டவர்கள் தான் இன்று இந்தியா டுடே கேமராவின் முன்னர் தங்கள் ஒப்புதல் வாக்குமூலங்களை தந்துள்ளார்கள்.

"நான் வாஷியில் இருந்தேன். நான் அதை (வெடிகுண்டை) வைத்தேன். வெளியே வந்துவிட்டேன். இது தான் என்னுடைய பங்கு" இப்படி சொன்னவன் மங்கேஷ் தின்கர் நிகாம். 45 வயதாகும் இந்த தீவிரவாதி இந்தியா டுடே நிருபரிடம் மஹாராஷ்டிரா மாநிலம் சதாரா மாவட்டத்தில் உள்ள தன் வீட்டில் கொடுத்த வாக்குமூலம் இது. இரகசியமாக கேமராவில் பதிவு செய்து அதனை வெளியிட்டனர் இந்திய டுடே தொலைக்காட்சியினர்.

ஹரிபாபு கிருஷ்ண திவேகர், இவனுக்கு 58 வயதாகிறது. இவன் தான் விடுதலையடைந்தது எப்படி? அதில் விசாரணை அதிகாரிகளின் பங்கு என்ன? என்பதை இன்னும் தெளிவாகவே

விளக்குகிறான். தன் வீட்டில் இருந்து கைப்பற்றப் பட்ட வெடிபொருட்களை குற்றப்பத்திரிக்கையில் சேர்க்காமல் தன்னை காப்பாற்றிய தீவிரவாத தடுப்பு படையினை பற்றி கூறுகிறான்.இந்த ஒப்புதல் வாக்குமூலங்களை அவன் ராய்கரில் உள்ள தன் வீட்டில் இருந்து தந்துள்ளான்.

"நான் அங்கே சென்ற போது காவல்துறையினர் (என் வீட்டிற்கு) வந்தனர். வீட்டினை அலசி ஆராய்ந்தனர். விசாரணையை மேற்கொண்டனர். நான் என்னிடம் இருந்ததை அவர்களிடம் கொடுத்து விட்டேன்."

நீங்கள் என்னென்னவற்றை கொடுத்தீர்கள் என்று நிரூபர் கேட்ட கேள்விக்கு திவேகர், "அந்த நேரத்தில் ஒன்றிரண்டு துப்பாக்கிகள், டெடனேட்டர்கள், அது டெடனேட்டர் என்று தானே சொல்லப்படுகிறது, ஜெலட்டின் குச்சிகள், டிஜிட்டல் மீட்டர்கள் போன்றவற்றை கொடுத்தேன். 20 ஜெலட்டின்கள், 23 டெடனேட்டர்கள். அவர்கள் அவை எல்லாவற்றையும் எடுத்து சென்றார்கள்." என்று கூறுகிறான்.

ஆனால் இவற்றையெல்லாம் ஏடிஎஸ் எனப்படும் தீவிரவாதத் தடுப்புப்படை தன் குற்றப்பத்திரிக்கையில் குறிப்பிடவே இல்லை.

### சனாதன் சன்ஸ்தா தடை செய்யப்படுமா?

"இன்று நமக்கு கிடைத்துள்ள இந்த ஆதாரங்களை கொண்டு நமது அரசு நடவடிக்கை எடுக்கும். அது மட்டுமல்ல, அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருந்தால் அவர்களை சட்டப்படி மறுவிசாரணை மேற்கொண்டு தண்டிக்க முடியுமா? என்று பார்க்கிறோம். மத்திய அரசுக்கு எல்லா ஆதாரங்களையும் அனுப்பி வைப்போம்" என்று மஹாராஷ்டிரா உள்துறை அமைச்சர் கூறியுள்ளார்.

காங்கிரஸ் தலைவரும் மஹாராஷ்டிராவின் முன்னாள் முதலமைச்சருமான பிரித்திவ் சவான் உடனடியாக சனாதன் சன்ஸ்தா அமைப்பு தடை செய்யப்பட வேண்டும் என கோரிக்கையை முன் வைத்துள்ளார்.

"சனாதன் சன்ஸ்தாவின் பின்புலத்தை ஆய்வு செய்வோமேயானால் அது ஒரு புதிரான கதையாகவே இருக்கும். நான்கு கொலைகள், தானேவில் ஒரு வெடிகுண்டு தொழிற்சாலை, கோவாவில் வெடிகுண்டு உருவாக்கியது இப்படி பல. இரகசிய கொலையாளிகளைக் கொண்ட இப்படிப்பட்ட இயக்கம் எப்படி இயங்க அனுமதிக்கப்படுகிறது? என்பது ஆச்சரியமாக உள்ளது. யார் இந்த இயக்கங்களை காப்பாற்றுவது? யார் இவற்றை இயக்குகிறார்களோ அவர்களை நம்மால் ஏன் கைது செய்ய இயலவில்லை?" என பல்வேறு கேள்விகளை பிரித்திவ் சவான் முன்வைத்துள்ளார்.

ஆனால் அவருக்கு ஒன்று புரியவில்லை. அல்லது புரியாதது போல் நடிக்கிறார். இந்த இயக்கத்தை முதன் முதலில் தடை செய்யாமல் பாதுகாத்தது முன்னாள் மத்திய உள்துறை அமைச்சராக இருந்த ப.சிதம்பரம். காங்கிரஸ் ஆட்சியில்.

### சனாதன் சன்ஸ்தாவை காப்பாற்றிய ப.சிதம்பரம்


2011ல் மஹாராஷ்டிர அரசும் கோவா அரசும் கர்நாடகா அரசும் சனாதன் சன்ஸ்தா இயக்கம் தீவிரவாத இயக்கம் என அறிக்கைகள் அனுப்பின. அப்போது இந்த அமைப்பை காப்பாற்றியவர் அப்போதைய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம்.

சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டத்தின் பிரிவு 35(3)(C)ன்35 (3) (C) of the Unlawful Activities (Prevention) Amendment Act (UAPA) கீழ் இந்த அமைப்பை தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை ப.சிதம்பரம் நிராகரித்தார்.

இவர்களை தடை செய்யும் அளவிற்கு குறிப்பிட்ட நடவடிக்கைகள் குறிப்பிட்ட சம்பவங்கள் எதுவுமில்லை என அப்போது அவர் கூறினார் என ஹிந்து பத்திரிகை செய்திகளை வெளியிட்டுள்ளது.

மேலும் ப.சிதம்பரம் "none of the three [State governments] have addressed the real issue and they may be asked to indicate whether the organization be banned or members of the organization be prohibited from undertaking any activity under section 153 (b) IPC [imputations, assertions prejudicial to national integration]." என்று கூறினார்.

இதன் அர்த்தம் "இந்த மூன்று மாநில அரசுகளும் (மஹாராஷ்டிர அரசும் கோவா அரசும் கர்நாடகா அரசும்) உண்மை பிரச்னையை குறிப்பிடவில்லை. இந்த அமைப்பு தடை செய்யப்பட வேண்டுமா அல்லது இந்த அமைப்பின் உறுப்பினர்கள் இந்திய பீனல் கோட் பிரிவு 153 (பி)ன் கீழ் தேசிய ஒருங்கிணைப்புக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபடுவதை தடுக்க வேண்டுமா என்பதை குறிப்பிட வேண்டும் என கேட்டுக்கொள்ளப் படுகின்றன"




CPI (M)
@cpimspeak

So, finally Hindutva Terror is very much there & is active. It has killed rationalists like Kalburgi,Dabholkar, Pansare & Gauri Lankesh. This is straight from the horse's mouth, & these people have been endorsed by many BJP/RSS leaders. So what does the @HMOIndia have to say now?

4:00 PM - Oct 9, 2018

118 81 people are talking about this




nikhil wagle
@waglenikhil

3 bomb blasts, 4 murders, a bomb factory, illegal weapons, confessions on tapes...still Sanatan can get away. Police officers agree with Sanatan- 'it is difficult to prove their involvement as an organisation.' Really? Then quit your job. We don't need such police to protect us!

9:21 AM - Oct 9, 2018

2,128 1,138 people are talking about this



Sagarika Ghose
@sagarikaghose

Academics against whom there's barely any evidence are locked up and called "urban naxals", members of the #SanatanSanstha who say on camera they're involved in terror activities roam free! What exactly is Modi govt waiting for? #Bansanatansanstha now

10:23 PM - Oct 8, 2018


1,453 819 people are talking about this



Nikhil
@nikhil_thatte

Zakir Naik's IRF can be banned without any explanation or given chance of appeal- for making 'inflammatory' statements & 'influencing' people, but Athavle's Sanatan Sanstha can continue to make & plant bombs, kill innocent civilians & even confess doing this on TV. Aal izz well.

India Today @IndiaToday
Proof of Sanatan Sanstha terror is out; workers of group confess on camera. Watch NOW with @rahulkanwal!
LIVE at bit.ly/IT_LiveTV



Prashant Bhushan
@pbhushan1

Even after Sanathan Sanstha members found being involved in multiple terror attacks, found with bombs,detonators, gelatin sticks, planning to create terror in religious places&responsible for murder of Lankesh, Pansare, Kalburgi etc, the group is shielded!
indiatoday.in/amp/programme/...

9:00 AM - Oct 9, 2018

(http://www.thehindu.com/news/national/ understanding-the-sanatan-sanstha/ article7686673.ece
http://www.hindustantimes.com/indianews/maharashtra-seeks-ban-on-right-wingsanatan-sanstha-sends-proposal-to-centre/story-Gp1BCOlG8RsrhlSsZ0zJUJ.html)

இந்த நிறுவனமும் அதன் உறுப்பினர்களும் இவ்வளவு வெளிப்படையாக தீவிரவாத செயல்களில் ஈடுபட்ட பின்னரும் முன்னாள் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்திற்கு ஏன் இந்த சந்தேகம் எழுந்தது என்று தெரியவில்லை.

இதே போன்ற கேள்விகளைத் தான் அப்போதைய காங்கிரஸ் உள்துறை அமைச்சர்கள் சிமி (ஷிமிவிமி) அமைப்பை தடை செய்வதிலும் எழுப்பினார்களா என்று தெரியவில்லை.

பா.ஜ.க.வின் கோவா எம்.எல்.ஏ.வான விஷ்ணு வாக் என்பவர் சிமி அமைப்பை போன்று சனாதன் சன்ஸ்தா அமைப்பையும் தடை செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.

https://timesofindia.indiatimes.com/ india/Like-SIMI-ban-Sanatan-Sansthafor-creating-terror-says-Goa-BJP-MLA/articleshow/49065729.cms
http://www.deccanchronicle.com/151001/ nation-current-affairs/article/ramnathi-villagersgoa-seek-ban-sanatan-sanstha
http://www.tribuneindia.com/news/nation/goa-cong-writes-to-pm-seeking-ban-onsanatan-sanstha/136891.html

http://www.thehindu.com/todays-paper/tpmiscellaneous/tp-others/congress-seeks-banon-sanatan-sanstha/article14424951.ece1

மூன்று மாநில அரசுகள் இந்துத்துவா பாஜக எம்.எல்.வின் கோரிக்கை, கோவா பொதுமக்களின் கோரிக்கை, சொந்த கட்சியான காங்கிரஸ் கட்சியின் கோரிக்கை இவை எதற்கும் ப.சிதம்பரம் அவர்கள் செவி சாய்க்கவில்லை. சனாதன் சன்ஸ்தாவை தடை செய்ய போதுமான ஆதாரமில்லை என்று மறுத்துவிட்டார்.

http://www.thehindu.com/news/national/ understanding-the-sanatan-sanstha/ article7686673.ece

ஆக மொத்தத்தில் காங்கிரஸோ, பிஜேபியோ யார் ஆட்சியில் இருந்தாலும் இந்துத்துவா தீவிரவாதிகள் நாட்டின் செல்லப்பிள்ளை களாகவே உலா வருவர் என்பதே உண்மை.

மேலதிகமான தகவல்களுக்கு நவம்பர் 2017 வைகறை வெளிச்சம் இதழை படிக்கவும்.

**- அபூ அஃப்ரஹ்**

# உங்கள் வாக்காளர் அடையாள அட்டை செயல் பாட்டில் தான் உள்ளதா? எப்படி அறிந்துக் கொள்வது?

கடந்த சில மாதங்களில் வாக்காளர் பெயர் நீக்கம் போன்ற பதிவுகள் முகநூல்களிலும் சமூக வலைதளங்களிலும் ஏராளமான பதிவுகளை பார்க்க முடிகிறது மக்கள் விழிப்படைய தொடங்கி விட்டார்கள் என்பதையே இது காட்டுகிறது இதற்கு முக்கிய பங்கு எண்ணிலடங்கா பலரின் உழைப்பு இருக்கிறது குறிப்பாக தமிழ் நாட்டில் உள்ள அனைத்து இமாம்களின் ஒற்றுமையுடன் கூடிய திட்டமிட்ட உழைப்பிற்கு கிடைக்கும் வெற்றி என்று கூட கூறலாம்.

தேர்தல் ஆணையமும் கடந்த இரண்டு மாதங்களில் வாக்காளர் பெயர் பதிவு, மாற்றம், நீக்கம் போன்றவற்றை செய்து கொள்ள அந்தந்த பகுதிகளில் வார விடுமுறை நாட்களில் நடத்தியது.

செய்திகளை காணும் போது கிட்டத்தட்ட 12 முதல் 15 லட்சம் வாக்காளர்கள் பெயர் சேர்க்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது நிச்சயமாக பெரும்பான்மையானவர்கள் முஸ்லிமாக இருப்பதற்கு அதிக வாய்ப்புள்ளது. இன்னும் சில மக்கள் அவர்களின் பெயர் இருக்கிறதா இல்லையா என்பதை அறியாமல் இருக்கிறார்கள் அவர்களுக்கு இந்த கட்டுரை உதவியாக இருக்கும்.

உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளதா என்பதை அறிய கீழ்கண்ட இணையதளத்திற்கு சென்று உங்களின் வாக்காளர் அட்டை கொண்டும் அல்லது பெயரை மட்டுமே கொண்டும் வாக்காளர் பட்டியலில் நீங்கள் இருக்கிறீர்களா என்பதை அறிந்து கொள்ளலாம்.

<https://electoralsearch.in/>

முதலில் வாக்காளர் அட்டை கொண்டு அறிவது எப்படி என்று பார்ப்போம்.

மேற்கூறப்பட்ட இணையதளத்திற்கு சென்று search by EPIC no என்பதை தேர்ந்தெடுத்து அதில் உங்களது வாக்காளர் அட்டை எண்ணை தட்டச்சு செய்து தேடுதல் பட்டனை அழுத்தினால் உங்களுடைய பகுதி வாக்குச்சாவடி போன்ற விவரங்கள் தெரியும். அல்லது உங்கள் பெயரை மட்டும் எடுத்து தட்டச்சு செய்து தேடினால் உங்கள் பெயரில் உள்ள அத்தனை பேர்களின் வாக்காளர் அட்டை மற்றும் வாக்குச்சாவடி, பகுதி போன்ற அனைத்து விவரங்கள் கிடைக்கும்.

உதாரணமாக நாம் இங்கு இந்தியா பிரதமர் நரேந்திர மோடியின் பெயரை தட்டச்சு செய்து தேடிய போது நமக்கு 18 பேர்களின் தகவல்கள் கிடைக்கின்றன. அவற்றில் யாரை வேண்டுமானும் நாம் எளிதில் வாக்காளர் பட்டியல் இருந்து நீக்கி விட முடியும். காரணம் அவர்களின் வாக்காளர் அட்டை எண், பகுதி, வாக்குச்சாவடி போன்ற தகவல்களை பெயரை வைத்து மட்டுமே கண்டு கொள்ளலாம்

இதைத்தான் சங்பரிவார்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்கிறார்கள் ஒவ்வொரு இடமும் இணையதள வசதி உள்ளது யார் வேண்டுமானாலும் எந்த முஸ்லிம் பெயரை வேண்டுமானாலும் தேடலாம் அதில் எத்தனை வாக்காளர் அட்டை எண் கிடைத்தாலும் அத்தனையும் பெயர் நீக்கம் செய்து விடலாம் அனைத்தும் ஒரு நொடிப் பொழுதில் முடித்து விடலாம்.

இந்த அணுகுமுறையை வாக்காளர் பெயர் நீக்கத்திற்கு பெரிய காரணமாக இதை மாற்றாத வரைக்கும் இந்த துன்பம் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும். உங்கள் பெயர் ஒருவேளை வாக்காளர் பட்டியலில் இல்லை என்றால் கீழே உள்ள இணையதளத்திற்கு செல்ல வேண்டும் அதில் form 6 இது பெயர் சேர்ப்பதற்காக கொடுக்கப்படும் விண்ணப்பம் இதில் உங்கள் பெயர் முகவரி மற்றும் உங்கள் இருப்பிடத்திற்கான ஆதாரம் போன்றவற்றை இந்த இணையதளத்தில் என்ற செய்து பதிவு செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

<https://www.nvsp.in/Forms/Forms/form6>

சமர்ப்பிக்கும் பொது உங்கள் தொகுதி மற்றும் புகைப்படம், முகவரி சான்றையும் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

<https://www.nvsp.in/Forms/Forms/trackstatus>

இப்படி சமர்ப்பிக்கப்பட்ட பல ஆன்லைன் விண்ணப்பங்கள் கடந்த சில மாதங்களாக நிலுவையிலேயே உள்ளது காரணமும் மர்மமாகவே உள்ளது இதுபற்றி கடந்த மாதம் வரை வேலை செய்து நாம் எழுதியிருந்தோம்.

காலத்தை வீணாக்காமல் பெயர் பதிவு மற்றும் நீக்கப்பட்டிருந்தால் அதை அந்தந்த பகுதியில் உள்ள தேர்தல் அலுவலரிடம் தெரிவிக்க வேண்டுகிறோம்.

நிச்சயம் பல நல்ல உள்ளங்கள் நாட்டில் உண்டு அவர்களிடமும் இந்த சூழ்ச்சியை நாம் எடுத்துச் செல்வோம்.

**- அபூதாஹிர்**

# நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம்

- சென்னை



## பத்திரிகை அறிக்கை

# நக்கீரன் கோபாலின் இன்னொரு "சேலஞ்ச்"

புலனாய்வு இதழியலில் கொடி கட்டிப் பறந்த நக்கீரன் கோபால், வெற்றிகளைக் குவித்தவர். சங்கராச்சாரியார் சிறைக்கு செல்லவும், கொலைக் குற்றம் சாட்டப்படவும் நக்கீரன் கோபால் அவர்களின் இதழியல் தான் காரணம். இந்தியாவின் எந்த பகுதியிலும் நடக்காத வரலாற்று நிகழ்வு அது.

அவர் திராவிடத்தின் முழு இயக்கமாக திகழ்ந்த தி.மு.க.வுடன் உறுதியாக நின்றவர். அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆட்சியில் அவர் சந்தித்த சோதனைகள் எண்ணிலடங்காதவை.

அவரைப் பொடாவில் சிறையில் அடைத்தார்கள். அதில் அவர் தன் குடும்பத்தின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரை இழந்தார். காவல்துறையின் தொடர் இம்சைகளே அதற்குக் காரணம்.

இப்போது கவர்ணர் மாளிகை - நிர்மலா தேவி விவகாரத்தில் எழுதிய புலனாய்வுக் கட்டுரைக்காக விமான நிலையத்தில் வைத்து அதிரடியாகக் கைது செய்யப்பட்டுள்ளார். அதிலும் வென்றே வந்திருக்கின்ற நக்கீரன் கோபால் அவர்கள் இவற்றையெல்லாம் சோதனைகளாக எடுத்துக் கொள்வதில்லை.

**மனித நீதி பாசறையும், நக்கீரனும்.**

நான் நிறுவி, தலைமையேற்று நடத்திக் கொண்டிருந்த மனித நீதி பாசறையினை முடக்கிட 2006 ஜூலைகளில் அன்றைய உளவுத்துறை அதிகாரி ஒருவர் குண்டு வெடிப்பு நாடகத்தை நடத்தினார். பல ஊடகங்கள், "மனித நீதி பாசறையைத் தடை செய்யப் பரிந்துரை" என பரபரப்பை உருவாக்கிய போது நக்கீரன் தன் புலனாய்வு இதழியலோடு வெளிவந்தது.

"போலிஸ் விட்ட புருடா" எனத் தலைப்பில் தன் புலனாய்வை வெளியிட்டு மொத்த பரபரப்பையும் நீர்த்துப் போகச் செய்தது. நக்கீரனின் புலனாய்வு இதழியலுக்கு அப்போது நன்றி சொன்னோம்.

அநியாயங்களை கட்டவிழ்த்து விடுவோரின் முகத்துக்கு நேரே அந்த அநியாயத்தை எடுத்துக் கூறுவது தான் மிகப்பெரிய "ஜிஹாத்" என நபிகளாரின் பொன்மொழியை நினைவில் நிறுத்தி நக்கீரன் கோபால் போன்றவர்களுக்கு என்றென்றும் உற்ற துணையாக நிற்போம்.

இவண்

**மு. குலாம் முஹம்மது:**

தலைவர் - நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம்;

வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம். போன்: 81481 29887



# இறைவனை அஞ்சி நடப்பதில் இலக்கணம் வகுத்த பெண்கள்

> "எனக்கும் உங்களுக்கும் உவமையானது ஒரு மனிதர் தீயை மூட்டினார். (அத்தீயின் ஒளியால் கவரப்பட்ட) வெட்டக் கிளிகளும், பூச்சிகளும் அந்த நெருப்புக்குள் விழுகின்றன. அவரோ அப்பூச்சிகள் அந்த நெருப்பினுள் விழாமல் தடுக்க முயல்கின்றார்கள். நான் அந்த மனிதருக்கு ஒப்பாவேன்.
>
> உங்களது விலாவை பிடித்து நெருப்பில் விழாமல் உங்களைக் காக்க முயல்கிறேன். ஆனால் நீங்களே என் கரங்களை விட்டும் தப்பிச் செல்கின்றீர்கள்."
>
> **- நபிகள் நாயகம்(ஸல்)**

நான் அமெரிக்காவின் தலை நகராம் வாஷிங்டனில் பிறந்தேன். அங்கேதான் வளர்ந்தேன். நான் அங்கிருக்கும் தரத்தில் உயர்ந்த பல்கலைக் கழகமாம் ஜார்ஜ் வாஷிங்டன் பல்கலைக் கழகத்தில் படித்தேன். 'வியாபார நிருவாகம்' என்ற படிப்பில் இளநிலை, முதுநிலை பட்டப் படிப்புகளைப் படித்தேன். தேறினேன்.

கல்லூரி நாட்களில் சவூதி அரேபியாவைச் சேர்ந்த இளைஞர் அப்துல்லாஹ் அப்துல் வாஹித் அவர்களைச் சந்தித்தேன். மணந்தேன். இஸ்லாத்தை நான் ஏற்றுக் கொண்டேன். என் கணவரின் குடும்பத்தவர்களும் அமெரிக்காவில் தான் வாழ்ந்தார்கள். இஸ்லாத்தின் போதனைகளை நானாக ஏற்று நடக்கட்டும் என என் கணவனின் குடும்பத்தவர்கள் நினைத்திருக்க வேண்டும் அதனால் தான் என்னை என் வழியில் விட்டு விட்டார்கள்.

நான் தனியாக வளர்ந்து பழகிப் போனவள். ஆதலால் நான் என்னையே கவனித்துக் கொள்ளும் ஆற்றலை வளர்த்துக் கொண்டிருந்தேன். காரணம் என் தாயும்,

தந்தையும் திடுதிப்பென என் சின்ன வயதிலேயே மணவிலக்கு செய்து கொண்டார்கள்.

நான் என் முதுநிலைப் பட்டப் படிப்புகளை படித்து முடித்த பின் அமெரிக்காவின் மிகப்பெரிய நிறுவனங்களில் வியாபார மேலாளராகப் பணியாற்றி இருக்கிறேன். கை நிறைய சம்பளம். கணவரின் பராமரிப்பு, பாசம் என வாழ்ந்தேன்.

தொடக்கத்தில் இஸ்லாத்தைப் பற்றிப் பெரிதாக நான் கவலைப் பட்டுக் கொள்ளவில்லை. நிறைய சம்பாதித்தேன்.

என்னதான் பணம் சம்பாதித்தாலும் நிம்மதியில்லை. ஏனெனில் குடும்பத்தவர்கள் என யாரும் இல்லை. ஆனால் என் கணவரோ குடும்ப வாழ்வில் குதூகலங்களை நிரம்பவே அனுபவித்தார். அவரை அரவணைக்க, ஆறுதல் சொல்ல அம்மா, அப்பா, அன்பாய் கட்டளையிடவும், கண்டிக்கவும் அக்கா, தங்கைகள், அண்ணன், தம்பிகள் என ஏகமாய் ஒருக் குடும்ப சூழலை அனுபவித்தார். எல்லோரும் அமெரிக்காவில் வாழ்ந்துக் கொண்டிருந்ததால் அன்பை அன்றாடம் அள்ளிப் பருகிக் கொண்டிருந்தார்கள். இதற்கு நேர் மாற்றமானது என்னுடைய வாழ்க்கை. நான் வெறுமையில் விடப்பட்டேன். என் அம்மா, அப்பாவால்.

தனி மரமாகத் தனித்து வாழ்ந்தேன். நான் வீழ்ந்தால் நானே எழ வேண்டும். எல்லாம் என்னால் தான் என்பது தான் என் நிலை.

இந்நிலையில் நான் என் கணவரின் குடும்பத்துடன் சவூதி அரேபியா சென்றேன். அங்கே குடும்ப வாழ்க்கை - கூடிக் குலவி வாழ்வது என்றால் என்ன என்பதை என்னால் முழுமையாகப் புரிந்திட முடிந்தது. என் கணவரின் குடும்பமும் அப்படித்தான். கூடி வாழ்வதில் தான் எத்துணை மகிழ்ச்சி. நமக்கோர் கஷ்டம் வந்தால் என்னவென்று கேட்கவும் நமது கடமை போல் செய்யவும் எத்தனை பேர். இஸ்லாம் கற்றுத் தந்துள்ள இந்த ஆனந்தமான குடும்ப அமைப்பை நாம் ஏன் விட்டு விலக வேண்டும் என நான் எண்ணினேன்.

கணவனும் மனைவியும் இரண்டு முறை தினமும் சண்டை போடலாம். ஆனால் எடுத்ததற்கெல்லாம் மண விலக்கு எனப் போய்விட்டால் என்ன செய்வது? இதுதான் அமெரிக்கா...! இந்த அமெரிக்காவுக்கு மீண்டும் செல்வதில்லை முடிவு செய்து கொண்டேன்

அன்று என் காதலுக்காக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன். இன்று இஸ்லாத்தை இதயத்தில் ஏந்திக் கொண்டேன். சவூதியில் உள்ள மிகப்பெரிய கம்பெனிகளில் வேலை தேடினேன்.

என்னுடைய படிப்பு, அனுபவம் இவை எனக்கு வளமானதொரு பின்னணியை ஏற்படுத்தித் தந்தன. இதனால் வேலை கிடைப்பது அவ்வளவு கஷ்டமாக இருக்கவில்லை. உடனேயே வேலை கிடைத்தது. கை நிறைய சம்பளமும் கிடைத்தது. மன்னர் ஃபைசல் சிறப்பு மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். சவூதியில், வாழ்வில் எல்லாம் கிடைத்தது. எல்லாம் மகிழ்ச்சி மயம். இஸ்லாத்திற்கும் முஸ்லிம் பெண்களுக்கும் ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்தேன்.

வியாபார நிறுவனங்கள், வியாபாரங்கள் இவற்றை எப்படி நடத்துவது என்பதைப் பற்றிய ஆலோசனைகளை வழங்கும் நிறுவனம் ஒன்றை ஆரம்பித்தேன். வியாபாரம் செய்ய விரும்பும் அல்லது முதலீடு செய்ய விரும்பும் சவூதி பெண்களுக்கு உதவி செய்வதே எனது இப்போதைய தொண்டு. ஒரு வகையில் தொழிலும் கூட.

எங்களுக்கு மூன்று குழந்தைகள். குழந்தைகளை ஆங்கில வழி கல்வியிலிருந்து அரபி மொழி கல்விக்கு மாற்றி விட்டேன். என் குழந்தைகளை அரபி மொழியிலேயே எல்லா இடங்களிலும் பேச வேண்டும் எனப் பணித்துள்ளேன். நானும் அரபி மொழியை வேகமாகக் கற்றுக் கொண்டு வருகின்றேன். எல்லோரும் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றோம் அல்லாஹ் காட்டிய வழியில்.

**– இவள், உங்கள் அன்புச் சகோதரி**

**லெவ்றா காலிங்ஸ்.**

இன்று உலகெங்கிலும் இஸ்லாம் வேகமாக வளர்வதற்கு இதுவே காரணம்.

வானத்தை எட்டிப் பிடிக்க முனையும் மனிதன், பூமியில் எப்படி வாழ்ந்திடுவது என்பதை அறியாமல் அல்லாடுகின்றான். அல்லாஹ்வின் வழிகாட்டுதல்கள் அவனை அப்படியே அரவணைத்துக் கொள்கின்றன. அவனது ஏக்கம் போக்குகின்றது. வாழ்வில் ஏற்றம் தருகின்றது.

இந்த உன்னத வாழ்க்கை திட்டத்தை நாமும் அடுத்தவர்களுக்கு எடுத்துச் சொல்வோமாக!

*இதே முறையில் நாம் உங்களை ஒரு நடு நிலையுள்ள உம்மத்தாக (சமுதாயமாக) ஆக்கியுள்ளோம்; (அப்படி ஆக்கியது) நீங்கள் மற்ற மனிதர்களின் சாட்சியாளர்களாக இருப்பதற்காகவும், ரஸூல் (நம் தூதர்) உங்கள் சாட்சியாளராக இருப்பதற்காகவுமேயாகும்; யார் (நம்) தூதரைப் பின்பற்றுகிறார்கள் யார் (அவரைப் பின்பற்றாமல்) தம் இரு குதிங் கால்கள் மீது பின்திரும்பி செல்கிறார்கள் என்பதை அறி(வித்து விடு)வான் வேண்டி கிப்லாவை நிர்ணயித்தோம்; இது அல்லாஹ் நேர்வழி காட்டியோருக்குத் தவிர மற்றவர்களுக்கு நிச்சயமாக ஒரு பளுவாகவே இருந்தது; அல்லாஹ் உங்கள் ஈமானை (நம்பிக்கையை) வீணாக்கமாட்டான்; நிச்சயமாக அல்லாஹ் மனிதர்கள் மீது மிகப்பெரும் கருணை காட்டுபவன், நிகரற்ற அன்புடையவன். (2:143)*

இறைதூதர் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

*“எனக்கும் உங்களுக்கும் உவமையானது ஒரு மனிதர் தீயை மூட்டினார். (அத்தீயின் ஒளியால் கவரப்பட்ட) வெட்டக் கிளிகளும், பூச்சிகளும் அந்த நெருப்புக்குள் விழுகின்றன. அவரோ அப்பூச்சிகள் அந்த நெருப்பினுள் விழாமல் தடுக்க முயல்கின்றார்கள். நான் அந்த மனிதருக்கு ஒப்பாவேன்.*

*உங்களது விலாவை பிடித்து நெருப்பில் விழாமல் உங்களைக் காக்க முயல்கிறேன். ஆனால் நீங்களோ என் கரங்களை விட்டும் தப்பிச் செல்கின்றீர்கள்."*

*அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரழி), நூல்: புகாரி, முஸ்லிம்*

**- MGM**







Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21,2, Kitabath Khan Bhadgur Street, chennai - 600 002